
அணா
BALU
BROS

# காஞ்சிபுரம் பண்ட்ஸ் லிமிடெட்

—: :—

(நிறுவனம் 1939)

தலைமை நிலையம்: காஞ்சி : : கிளை: 25A, தம்புசெட்டிதெரு, சென்னை.

ஒரேகல்லில் இரண்டு மாங்காய்! | பணத்தை சேமிக்கவும் வழியுண்டு!

புதுமுறை சேமிப்புத் திட்டம்!! | கடன் பெறவும் வசதியுண்டு!!

ரூ 773-/- நாற்பது மாதங்களில் ரூ 1000-/- ஆகிவிடும்!

(1) கொஞ்சங்கொஞ்சமாக பிரதி மாதமும் நீங்கள் சேமித்து வைக்கும் முதலீட்டுத் தொகை ரூ 773க்கும் நாற்பது மாதத்தில் ரூ 227 லாபம் கிடைக்கிறது.

(2) தேவையானபோது, சீட்டுத் தொகையில், பாதியளவு கடன் வாங்கவும் வசதி உண்டு. ரூ. 250, 500, 1000, 5000, 10, 000-/ முதலிய எத்தொகைக்கும் எப்போதும் மெம்பராகலாம்.

K. R. CHARY, B.A.
காரியதரிசி.

## எதிர்பாருங்கள்!

—: :—

பரிமளம் பதிப்பகப் புதிய வெளியீடுகள்!

●

சி. என். ஏ. தீட்டியது.

●

ரங்கோன் ராதா : : வாழ்க்கைப் புயல் (2-ம் பதிப்பு)

செல்லப் பிள்ளை : : செக்கோஸ்லோவேக்யா

●

பரிமளம் பதிப்பகம் | காஞ்சிபுரம்


## தென்றலின் சுவை சொட்டும் நூல்கள்

| மின்னொளி | திருக்குறள் |
|---|---|
| புதுமை நாடகம் | இசைப் பாடல்கள். (அறத்துப்பால்) |
| ஆசிரியர்: ப. கண்ணன். | பாவலர்: தோ. ப. வேலாயுதசாமி |
| வானொலியில் நடை பெற்ற கிராமீயச் சித்திரம். | தமிழ் இசையிலே குறள் நெறி காட்டும் புது முறைப் பாடல்கள். |
| விலை 0 6 0 | விலை 0 7 0 |

தனிப் பிரதிக்கு தபால் பில்லைகள் அனுப்புக. வியாபாரிகட்கு ஏற்ற கழிவு உண்டு. ஹிக்கின்பாதம்ஸ் சுதேசமித்திரன் புத்தக நிலையங்களில் கிடைக்கும்.

தென்றல் நூற்பதிப்புக் கழகம்

சலகண்டபுரம் : : சேலம்மாவட்டம்




# பொங்குக பொங்கல்!

—❀—


வாழிய பொங்கல்! வாழிய தமிழ்மொழி!
வாழிய தமிழகம்! வாழியதமிழிசை!
மஞ்சளும், இஞ்சியும், வானுயர் கரும்பும்,
செந்நெல் அடிசிலும், தீங்கனி பிறவும்
நிலமகள் தந்த வளனெனப் போற்றும்
செந்தமிழ்த் திருநாள் சிறப்புற வந்ததால்;
பொங்குக பொங்கல்; எங்கணும் நன்குற!
தமிழ்மொழி, தமிழ்க்கலை, தாய்த் திருநாடு
உரிமை பெற்று உலகினில் மிளிரவும்
ஆண்மை சிறக்கவும், அறம்பல பெருகவும்
நாடும், மக்களும் நலமெலாம் பெறவும்
வாழிய பொங்கல்! வளம்பல பொழிந்தே.








இப்படி எல்லாம்



உழைத்து



இவர்கள்



காணும் பயன்!



காஞ்சி விலை எட்டு அணு 14—1—50

# திராவிடநாடு

மலர் 8 இதழ் 27, 28, 29, & 30

# வாழ்விலோர் திருநாள்

அதோ பொன்னிற ஆடையைப் போர்த்தியது பால, வயலிலே கதிர்—உழவன் சிந்திய வியர்வைத் ளிகளைக் கணக்கிடுவது போல 'நெல்' மணிகளுடன்—ய்ந்து, சாய்ந்து அசைந்தாடுகிறது! அதைக் காணும் ழவன், உள்ளமும் தனது உழைப்பின் பயன் உரு கி நிற்பது கண்டு விம்மி, விம்மி எழும்புகிறது கிழ்ச்சியால்!

எழுசுவை, விழிவிருந்து ஆகியவைகளை ஏந்திக் காண்டு, வாயிலிலே காத்துக்கிடக்கிறாள், அவள், ன் கணவனுக்காக—கணவன் களைத்து கால் சோர்ந்து ள்ளாடி வீடு சேர்ந்த காட்சியையும் கண்டவள் அவள் இன்று, அவன் இளங்காளையென துள்ளிவருவதையும் ணுகிறாள். அவளது நிலவு முகத்திலே, மின்னல் பால, புன்சிரிப்பு மலர்கிறது. அந்த மகிழ்ச்சியிலே, ண்ணு, கண்ணு' என்று அன்பு தும்ப அழைக்கிறாள் தனது அரு மச் செல்வனை, அவனோ கட்டிக் க்கும் கன்றுடன் 'கதை' பேசிக் காண்டிருக்கிறான், அதன் கழுத் லே கட்டப்பட்டிருக்கும் வெண் மணியையாட்டி, 'பொங்கலோ, பாங்கல்!' என்று தன்மழலை மொழி ல் கூறுகிறான். இதைக் கண்ட வன் மனைவியர் இருவர் இதயத் லும்இன்பம் எழும்புகிறது, பூரிக் ன்றனர், புளகாங்கித மடைகின் ர்!

X X X

வாழ்விலோர் திருநாள், இன்றைய பொங்கல் நாள்! கும் பூரிப்பும் புதுமகிழ்வும் பூத்துக் குலுங்குகிறது! ழவன் மனைகளிலே மட்டுமல்ல, எங்கும் இன்றுஇன்ப ம்எக்களிட்பும் நிலவும்! 'வயலிலே கதிர் — தனது ழக்கையிலே மகிழ்ச்சி' என்று எண்ணுகையிலே ழவன் பூரிப்பான், அவன் மனைவி, மக்கள், எல்லோரிட ம்இன்பம்நிலவும்! அதே வேளையில் விதை விதைத்த ள் முதல், ஏர்பிடித்து, நீர்பாய்ச்சி, நிலந்திருத்தி, வு போட்டு, பாதுகாத்து, 'கதிரை'க்காண அவன் ட கஷ்ட நஷ்டங்கள் துன்ப நிகழ்ச்சிகள் எல்லாம் ன்னி மறையும்!

விதைக்க விதையில்லையே யென் எண்ணி ஏங்கி, 'பெரிய பண்ணையாரிடம்' சென்று பல்லிளித்தது, 'அடா, மூடா!' என்ற அர்ச்சனையுடன், 'ஆறு கலமா—சரி தரு கிறேன். களத்துமேட்டுக்கு கணக்கன் வருவான். கறாரா, அளந்து விட்டுடணும், பன்னிரண்டு கலம்' என்ற உத்தரவுடன் அவர் உதவி செய்தது, வேறு வழியில்லையே என்று 'ஆகட்டும், ஐயா!' என்று அவன் திகைத்து நின்ற காட்சி, பின் வரப்பு கட்டும்போது ஏற்பட்ட சண்டை, நீர் பாய்ச்ச தான் நடத்திய போராட்டம், பக்கத்து வயல் பரமனுடன் தினசரி தான் நடத்திய 'பல்'ப் பரீட்சை, வளர்ந்த பயிரை மேய்ந்த மாட்டை தான் அடித்து விரட்டியதால் வந்த வம்பு—இத்தனையும் அவன் இதயத்தில் எழும்பும்!

எனினும், பலனைக் காணும் வேளை நெருங்கிவிட்டது, நெல் அதோ நம் வயலில், என்ற எண்ணத்தால் அவன் மனம் மகிழும்! இந்தமகிழ்ச்சியில் தான் பட்டகஷ்ட நஷ்டங்களைத் துடைத்துக் கொள்வான்—துயரம் இனி இல்லை, என்ற எண்ணம்தொல்லைகளை மறைக்கும். இத்தகைய நாள், இன்று!

வெள்ளி முளைத்ததா, என்று பார்ப்பான், எருது இரண்டையும் ஓட்டிக்கொண்டு, குளிர் நடுக்க, பனி தன்னை நனைக்க, இது பற்றிய சிந்தனை சிறிதுகூட எழும்பாது, இன்று எத்தனை 'காணி', உழுதுவிடலாம் என்ற ஒரேஎண்ணத்துடன்சென்று, வயலில் இறங்கி, அவன் பாடுபட்டு கண்ட—காணப் போகும்—பலனை, எண்ணி, இன்று அவனுள்ளம் உவகையால் பூரிக்கும்!

* * *

பொங்கல்—உழவர் விழா! வாழ்விலோர், திருநாள் என்று போற்றிச் சிறப்பிக்கப்படும் இந்நாள் புராணப் பெருமை கொண்டதல்ல. நாட்டு வாழ்வை, அலைத்துக் குலைக்கும், நச்சுக் கொள்கையும், நடைப் பிணமாக்கும் போக்கும் உடையதல்ல. 'மவராசன் பொங்கல்!' என்று கூறுவதுண்டு, கிராமப்புறங்களில்! உண்மையும் அதுதான் வாழ்வு சிறக்கும் நிலையில், உழைப்புக்குப் பயனுண்டு என்ற உட்பொருளையும், "விதைத்தவர் அறுத்திடுவோர்!

## அறிவிப்பு.

பொங்கல் விழாவை முன்னிட்டு, இவ்வாரம் நமது அச்சகத் தோழர்களுக்கு விடுமுறையாதலால் 22—1—50ந் தேதிய இதழ் வெளிவராது. வழக்கம் போல் 29—1—50 அன்றைய இதழ் வரும்.

நிர்வாகி.

விழிப்போரே நிலை காண்பார்!!" என்ற உண்மையையும், உணர்த்துவது பொங்கல் நாளாகும். பொங்கல் விழா—ஏனைய திருநாட்களைப் போன்றதல்ல. வீண்விழாவல்ல, வியர்வையின் பெருமையைச் சொல்வது! வெற்றி, கானல் நீராகாது—கஷ்டத்தையும் நஷ்டத்தையும் தாங்கினால் விளைவு பயன்தரும் என்பதை உணர்த்துவது! உயர்வெண்ணமும், உழைப்புச்சக்தியுமே உலகை மகிழ்வுக்கும் என்று உரைப்பது! உழைப்பு பலன் தந்தால், உள்ளம் பூரிக்கும் என்ற எண்ணத்தைத் தெரிவிப்பது!

இன்பம்—உழைப்பின் அறுவடை, உழைப்பே மக்கள் செல்வம், உழைத்துப் பலன் பெறு. ஆனால் பலன் கிட்டியதும், பருந்தாகிவிடாதே, நெருங்கியவரை கொத்தித் துரத்தாதே, காக்கையைப் பார் சிறு கவளத்தையும் தன் சகாக்களோடு சேர்ந்துண்ணும் சிறப்பை பார், என்று நமக்கு கூறாமல் கூறி, வாழ்வதற்கு உழை, உனது உழைப்பு உனக்காக மட்டுமல்ல உலகுக்காகவும் இருக்கட்டும், என்ற தத்துவ விளக்கம் தரும் திருநாள் இது

வாழ்க்கை—ஒரு சுந்தரமான சொல், ஆனால் சுகந்தேடிகள் இதைப்பற்றிச் சிறிதும், சிந்திப்பதில்லை! பிறந்தோம்—பிறர் இருக்கின்றனர் உழைக்க—வந்ததை வைத்து, உடல் அலுங்காமல் வாழ்வோம், அதுதான் நாம் பிறந்ததின் பலன் என்ற ஊதாரிக் கொள்கை, அவர்கள் உள்ளங்களிலே ஊறிப் போயிருப்பதால்!

மாயப் பிரபஞ்சமிது பொல்லாது, மானிட வாழ்விது நில்லாது, காயமே இது பொய், காற்றடைத்த பை, என்ற குருட்டு வேதாந்தம், இருட்டுக் கொள்கை, மக்களுடைய மனதிலே இடம் பிடித்து, அமர்ந்து, ஆட்சி நடத்தும் காரணத்தால், பலருக்கு—வாழ்க்கை என்பதுபற்றி சிந்திக்கும் நினைவுகூட ஏற்படுவதில்லை. வாழ்க்கை என்பது என்ன, இது எப்படி யேற்பட்டது, நாம் எல்லாம் யார்; மனிதர், மனிதவர்க்கம் என்றெல்லாம் கூறுகிறோமே அப்படி யென்றால் என்ன, என்பது பற்றி எண்ணியதுகூட இல்லை பலர்.

விரிந்து பரந்து கிடக்கும் கடல், அதைக் கிழித்துச் செல்லும் நாவாய்; விண்ணை அளாவி நிற்கும் மலை, அதைத் தொட்டு முத்தமிடும் ஆகாய விமானம்; சரிந்து கிடக்கும் பள்ளத்தாக்கு, அங்கு சல, சலவெனச் சப்தம் எழுப்பி உருண்டோடும் அருவி, அதிலிருந்து உற்பத்தியாகும் மின்சாரம்; ஒளிபரப்பி உயரத் திரியும் கதிரோன், அவனது கிரணங்களால் மக்களுக் கேற்படும் நன்மைகள், நிலவு எழுப்பி நெஞ்சைக் குதூகலிக்கும் சந்திரன், அதன் நிலவொளி பூமியின்மேல் விழுவதன் வகை எப்படியென்ற, ஆராய்ச்சி, இவைகள்பற்றி வரட்டு வேதாந்திகள் அறிய முனைந்ததிலலை—முடியாதது என்பதால் அல்ல! ஏன், வீணுக சுகபோக நேரத்தை செலவழிக்க வேண்டும், பணங் கேட்டால் கொடுக்க மக்கள், பணிபுரிய காவலர்கள், காத்துக் கிடக்கையில், இந்த 'மாயா'லோக வாழ்வைப்பற்றி ஏன் சிந்திக்க வேண்டும், என்ற சோம்பேறித்தனத்தால், சுயநலத்தால்!

வாழ்க்கை—வளர்ந்துகொண்டே போகும் ஒரு மலர்த் தோட்டம். அதை, ஆராய ஆராயவித, விதமான அபூர்வ மலர்கள்—அதிசயிக்கத்தக்க—முடிவுகள் கிடைக்கும்! ஆனால், இந்த "அறிவு"ப் பணிக்கு முட்டுக்கட்டையிடும், திருத் தொண்டை, தேவதூதர்கள் என்று தங்களைக் கூறிக்கொண்டோர், தெய்வத்தின் பிரதிநிதிகள் என்று சொல்லித் திரிவோர், செ[illegible]தனர்—செய்தும் வருகின்றனர். அதற்கு அவர்களு[illegible]குப் பக்கபலமாக இருந்து வருபவை, புராணங்கள் பொய்க்கதைகள், விதி, 'எல்லாம் அவன் செயல்' என்[illegible] போலிவாதம் ஆகியவைகளாகும்.

இவைகளை வளர்த்து, மக்களை இருட்டுக் குழியி[illegible] வீழ்த்தும் வீண் விழாவல்ல—பொங்கல் திருநா[illegible] இது உழைப்பின் விழா! உழைப்புக்கும், வாழ்வுக்கு[illegible] உள்ள தொடர்பை, தனிச் சிறப்பை, இன்றியமை[illegible]மையை எடுத்துக் காட்டும் விழா! ஏர் பிடித்து, தானு[illegible] ஏனையோரும் வாழ பாரின் பசி தீர்க்கும் பணியி[illegible] ஈடுபட்டிருப்போரின் விழா! கையையும், மண்வெட்[illegible]யையும், மாட்டையும் நம்பியே வாழ்க்கையை நடத்தி[illegible] செல்லும் உழவரின் விழா!

எனவே, எங்கும் களிப்பும் இன்பமும், குதூக[illegible]மும் நிலவுகிறது, எல்லோர் இதயமும் இன்று பூரி[illegible]கிறது!

* *

இயற்கையைப் பண்படுத்தி, வயலாக்கி, வரம்[illegible] கட்டி, விதை விதைத்து, பயிர் வளர்த்து, கதி[illegible] காணும்போது, களிப்புடன் கொண்டாடும் இவ்விழ[illegible] உழைப்பாளிகளின் வாழ்விலோர் திருநாள்! வறுமை[illegible] மறந்து, துயரத்தொல்லை நினைவில் எழும்பாது, த[illegible] உழைப்புக்கான பலனை அனுபவிக்கப் போகிறோம் என்று இன்று ஆனந்தமடைகிறான், பாட்டாளி.

நைந்த உள்ளம், நலிந்தவாழ்வு, சிதைந்த குடி[illegible] சீரழிந்த மக்கள், விம்மும் வேதனை, ஆகியவைக[illegible]னூடே, இந்த நாள், அவனுக்குத் திருநாளாக இரு[illegible]கிறது!

ஆண்டு முழுதும் உழைத்துழைத்து உருக்கு[illegible]யும் உழைப்பாளிகள் வாழ்விலோர், திருநாள், இன்[illegible] ஆனால், வாழ்க்கை முழுவதையுமே திருநாளாகக்கொண்[illegible]டாடி கோலாகலத்துடன், வாழ்பவர்கள் இருக்கிறார்க[illegible] அதுவும் மேனிவாடாது, உண்பதைத் தவிர வே[illegible] 'உழைப்பு' என்பதையே அறியாது, சீட்டாட்டத்[illegible]திலும், சிங்காரிகளின் பேச்சிலும், காலத்தைப் போக்[illegible]கும் கனவான்கள்.

உழைப்பவன், தன் வீட்டிலே, ஒரு நாள் பொ[illegible]ங்கும் சர்க்கரைப் பொங்கலைக்கண்டு, தன் மனைவியி[illegible] முகத்திலே எழும்பிய புன்சிரிப்பைக்கண்டு, குழந்தை[illegible]யின் குதூகலத்தைக்கண்டு மகிழ்கிறான்! இரண்[illegible] கரும்பையும், நான்கு வெல்லக்கட்டியையும் மிரா[illegible]தாரர்களின் 'கருணை'யால் தனக்குப் பொங்கல் பரிசா[illegible] அளிக்கப்படுவதைக்கண்டு மனமகிழும் விவசாயிக[illegible] இருக்கிறான், நாட்டில்! இன்பம்—உழைப்பவன் இ[illegible]யத்தில் இன்று, எழும்புகிறது, எத்தனையோ இன்ன[illegible]கள், துயரங்கள் ஆகியவைகளை யெல்லாம் தாண்டி!

பொங்கல் திருநாள் முடிந்ததும்—மறுநாளே அ[illegible]னது வாழ்வு அரிவாளும் கையுமாய், களத்துமே[illegible] அறுவடை வயலுமாய் ஆகிவிடும் மீண்டும், உழ[illegible]ப்புச்சக்கரம், உருள ஆரம்பித்து விடும்!

ஆனல், பொங்கல் உண்டு, பட்டாடையுடுத்தி, நக ப்புறத்தில் தனது காரில், உல்லாசமாகப் பவனி வரு வர்களின்—வாழ்விலே பொங்கல் நாளில் மட்டுமல்ல, ாழ்நாள் முழுமையுமே இன்பந்தான்! அவர்களுக்கும் கவலைகள்' உண்டு; அது, உழவனின் இதயத்திலே ழும்புவது போன்றதல்ல. ஏன் கூலி அதிகம் கேட்கி ன், இன்றைக்கு அவன் எப்போதும்போல உழவில் யா அது ஏன், வண்டியோட்டும் வரதன் எருவைக் காண்டுபோய்க்கொட்டவில்லையாமே அது ஏன்—என் து போன்றவைகள்.

ஏழையின் இதயத்திலே எழும்பும் வேதனைக்கும் இவர்கள்'' எண்ணத்திலே மின்னி மறையும் கவலைக க்கும் வித்தியாசம் உண்டு—மலைக்கும் மடுவுக்கும் ள்ளதுபோல! இந்த வித்தியாசம், என்று தொலையும், ல்லோரது வாழ்வும் எப்போதும் திருநாளாவது எப் பாது என்ற கேள்விகள் விழாவைக் கண்டு, மகிழ்ந்து ற்கும், நமது இதயத்திலே எழும்புகின்றன!

நகரத்துக்கும்—கிராமத்துக்கும் உள்ள வித்தியா ங்கள்; மேடுபள்ளங்கள் விரிந்துகொண்டே போகின் ன. நகரத்தில்வாழும் மக்களிடையே, நல்வாழ்வு இருப் தாக :விவசாயி எண்ணுகிறன்—உண்மையுங்கூட! னது சேறுபடிந்த உடல், கந்தலான துணி, எண்ணெய் றுத தலை ஆகியவைகளுடனே இருக்கும் 'பட்டிக் ட்டு' பரமனுக்கு, காலர் சட்டை, வெள்ளைமில்வேட்டி டுக்கான நடையுடன் வரும் 'பட்டணத்து' பரமசிவம் வ்ளேயைக் காணும்போது நாமும் 'ஏரை விட்டுவிட்டு ட்டணம் சென்றுவிட்டால்......' என்ற எண்ணம் ழும்பாமலிருக்காது.' இன்று நாட்டில் இந்த நிலையின் ாரணமாக, பயிர்த்தொழிலை வாழ்வின் கடமையெனக் காண்டோர்களின் பயணம் வர, வர, நகரப்புறம் ாக்கிவளர்ந்துகொண்டேயிருக்கிறது! இது, சில்லரை ஷயமல்ல. சிந்தனையைக் கிளறக்கூடியது!

உழவுத் தொழில்—இந்நாட்டின் முக்கியத் தாழில், எண்ணற்றோர் இப்பணியை மேற்கொண் ருக்கின்றனர். இந்தியா விவசாய நாடு என்று கூறும் பாது உள்ளத்திலே மகிழ்ச்சி அரும்பத்தான் செய் றது—ஆனல், அந்த விவசாயத்தின் நிலை என்ன?

எப்போதோ, இயற்கையை தன்னுடைய ஏவல் பாருளாக்கிக்கொள்ள மனிதன் கண்டுபிடித்தபொருள் ள்— ஏரும் கலப்பையும் அறிவாளும் தடியும்இன்னும் ருக்கின்றன. காலம் வளர்ந்துகொண்டேயிருக்கிறது, ாழ்க்கையின் ஒவ்வொரு திசையிலும், புதுமையும் துமுறையும் பூத்திருக்கிறது. ஆனல், அந்த மறு லர்ச்சி, நாட்டின் முக்கியத் தொழிலெனக் கருதப் டும் பயிர்த்தொழிலிலே, மலரவில்லை! காளைமாட்டை ாட்டும் கந்தன், கதிரை அறுத்து அதைக் கட்டித் க்க, 'வைக்கோல்பிரி'யைக் கயறுக்கும் கந்தன், களத்து மட்டிலே 'போரடி' நடத்த மாடுகளை மட்டும் வைத் ப் 'போராடும்' பொன்னன், மண்வெட்டி தாங்கி மண் ணக் கொத்திக் கிளறும் மன்னர்சாமி, விதையை ஓரி த்தில் விட்டு அது நாற்று-ஆனதும், பறித்து, நாற்றங் ாலிலிருந்து', வயலுக்குக் கொண்டு செல்று, நடவு பாடும் நல்லான்—ஆகியோரின் உழவு முறைகளிலே திமை உதயமாகவில்லை! ஆண்டாண்டுதோறும், ரம்பரை பரம்பரையாக இருந்துவரும் பழக்கமும் ழக்கமுமே, நீடிக்கிறது. நிலையில் மாற்றம் நிகழத் தக்க அறிகுறிகளும் இல்லை!

உழவனின் வாழ்விலே மட்டும் என்றல்ல, அவ னது உழைப்பு, அறுவடை எல்லாவற்றிலும் பழைமை தாண்டவமாடியவண்ணமே உள்ளது!

பழைமை மீது, ஏழை உழவனுக்குள்ள மோக மும் ஆசையும் மூடநம்பிக்கை, மூதாதையர்வழி, என்ற பேச்சுக்கள் மூலம் வளர்க்கப்படுகின்றன—வஞ்சகம் நெஞ்சிலும், வாயில் 'சிவாய நம' என்ற சொல்லும், கூறிக்கொண்டு நிற்கும் சனுதனத்தால், வைதீகத்தால்!

இதன் விளைவாக—வாழ்க்கையின் தத்துவம்— அவன் இதயத்திலே எழுப்பிவிடப்படவில்லை. உல கத்தை உழவன், தனது ஏர்முனையிலே யிருப்பதாக எண்ணுகிறனே யொழிய, எத்தனையோவித இரகசியச் செய்திகளை அடக்கி வைத்திருக்கிறது என்று அவன் உணரவில்லை உணர்த்தவும் வழியில்லை, அதற்கான முயற்சிகள் எடுக்கப்படவும் இல்லை! இதன் விளைவாக அவனது வாழ்வு பழைமைப் பாதையிலேயே உருள ஆரம்பிக்கிறது; முன்போல கொஞ்சங்கூட மாருமல்.

பொங்கல் திருநாளில் இதுபற்றி நாம் நினைக்கும் போது, இதுபற்றிய விளக்கத்தைச் சிந்திக்கும்போது வேதனைதான் உருவாகிறது ,பாரை வளமாக்குகிறன். ஏழை விவசாயி, ஆனல் பாரில் அவன் வாழ்வில் வறு மையும் பிணியுமே பிடித்தாட்டுகிறது!

இதுமட்டுமல்ல, வளர்ந்துவரும் உலகில், மனிதக் கூட்டமும் முன்னைவிட இப்போது, கோடிக் கணக்கில் அதிகமாகிக்கொண்டே போகிறது. அதன் விளைவாக, அவர்கள் வாழ்வதற்கான, உணவும், இன்னபிறவும், தேவைப்படுகின்றன. சமாளிக்கமுடியாவிட்டால் பஞ்சம்! உணவைதவிர்க்கவோ முடியாது!! விளைவு — உணவுப் பஞ்சம், நெருக்கடி!

இன்று, இத்தகைய செய்திகள் நமக்குத் தினசரிப் பேச்சுபோலாகிவிட்டன. இராமநாதபுரத்திலே பஞ்சம் வரலாம், மதுரையிலே மழையில்லை, நெல்லையிலோ தொல்லை, கோவையிலே குமுறல், என்று இதுபோல, ஆங்காங்கும் பயிர்த் தொழில் நிலைமை பற்றி வரும் தக வல்கள் கூறுகின்றன—இவைகளைக் காணும்போது, எதிர்காலம் பயங்கரமானதாகத் தெரிகிறது, படுகுழி போல காட்சி அளிக்கிறது!

இந்த உண்மைநிலை நீடித்தால் ஏழையின் ஏர் முனை, என்ன கதியாகும்,நாடு காடாகத்தானே வேண்டி ஏற்படும்! வயல் செழித்தால் வாழ்வுயரும், வாழ்வு கொழித்தால் நாடு உயரும், களையிருந்தால் பயிர் சாயும், உழவன் நிலை ஒடிந்தால் வாழ்வு வீழும்! எனவே, வாழ்விலோர் திருநாளாகிய இன்று, இந்த எண்ணமும், இதன் விளைவாக ஏக்கமும் எழுகிறது, இதற்கெல்லாம் ஒரு முடிவு வேண்டாமா என்று இதயம் கேட்கிறது!

எனினும், புயலிலே சிக்கிய கடலுக்கு சிறிது நிம் மதிகிடைத்ததுபோல, மழையில் நனைபவன் ஒருநிமிடம் ஓட்டுத்திண்ணையில் உட்காரமுடிந்ததுபோல, வேதனை யிலே உழலும் உழவர்கள் வாழ்விலே இன்று ஓர் திரு நாள்! இந்த நன்னளில், எங்கும் இன்பம் பொங்கட்டும், அதற்கானநிலை மலரட்டும் என்று வாழ்த்தி, வளைந்த முதுகினரின் வாழ்வை நிமிர்க்க என்றும் நம்பணி உண்டு என்று உறுதிகூறி, வாழ்த்துகிறோம்! பொங்குக பொங்கல்! பொங்குக இன்பம்!! *

## மக்கள் தீர்ப்பு

53–ம் பக்கத் தொடர்ச்சி

வேலையைவிட்டு நீக்கிவிட்டதாக, கப்பல் கம்பெனி முதலாளி அனுப்பிய உத்திரவு இருந்தது. அந்த முதலாளி தன் அண்ணனுடைய கூட்டாளி என்பது டாக்டருக்குத் தெரியும். பெருமூச்செறிந்தார். "பொதுஜனவிரோதி பார், ஊரைவிட்டே ஒழிகிறுன். பொதுஜன விரோதி ஒழிக!"—என்று கூச்சலிட்டபடி, சிறுகும்பல் கூடிற்று. மீன்பிடிப்போர் உபயோகிக்கும் சிறுபடகு ஒன்றில் ஏறிக்கொண்டு, மூவரும் பயணமாயினர். டாக்டரின் கண்ணீர் கடல்நீரில் கலந்தது. பொதுஜனம் இப்படித் தானு! அண்ணன் சொன்னபடி, ஆடும் பதுமைகள் தானு இந்தப் பொதுஜனம். ஆதாரம் காட்டாது, காரணம்கூருது, அண்டப்புளுகு பேசினுன், அதைநம்பி, என்னைத் துரோகி, சதிகாரன் என்று ஏசினரே, இவ்வளவுதானு, இவர்கள் இயல்பு, என்று எண்ணிஎண்ணி ஏக்கமுற்ருன் டாக்டர். தன்மனக்குறையை, மருமகனிடம் கூறிக் கூறிக்குமுறினுன். பொதுஜன சேவை, பயனற்ற காரியம்! வீண்வேலை!! பொதுஜனத்துக்குத் தெளிவு கிடையாது! சிந்தனு சக்தி கிடையாது!—என்று டாக்டர், உண்மையாகவே எண்ணத்தொடங்கினுர்; அவர் அடைந்த அலலல் அவருக்கு இருந்துவந்த ஆர்வத்தை, நம்பிக்கையை நசிக்கச்செய்தது. வேற்றூரில் வேதனையுடன் இருந்துவந்தார் — பொதுஜனத்தின் முகத்தையும் பார்க்கவிருப்பமின்றி, டாக்டர் தன்வேதனையைத் தீர்த்துக்கொள்வதற்காக, அவ்வப்போது, இந்தச்சம்பவத்தின் முழுவிவரத்தையும், தன்மருகனிடம் கூறிக்கொண்டிருந்தார்—இதைக்கேட்டுக் கேட்டு, மருமகனுக்கு, புதியதோர் எண்ணம் பிறந்தது — உண்மையைத் துலங்கச் செய்யவேண்டும் என்ற ஆவல்பிறந்தது.

தனக்கும் தன் அண்ணனுக்கும், ஆதியில், பொதுஜனசேவை'யைப்பற்றி எழுந்த வாக்குவாதத்தை டாக்டர் கூறுவார்—அக்கரையுடன் அந்த வாதத்தைக்கேட்பான் மருமகன்—கேட்டுக் கேட்டு அவனுக்குப் பொதுமக்களிடம் நம்பிக்கை பிறக்கலாயிற்து! பொய்யை அவர்கள் மெய்யென நம்பிவிட்டனர் — காரணம்? பொய்யர்கள், உண்மை அவர்கள் செவிபுகாதபடி செய்தசூழ்ச்சியினுல். ஆகவே தவறு, பொதுமக்கள்மீதா! சூழ்ச்சிக்காரரை, எதிர்த்தாகவேண்டும் என்ற துணிவு, போதுமான அளவு, டாக்டருக்கு இல்லாததே, இதற்குக்காரணம். பொதுமக்களிடம் உண்மையைக் கூறவேண்டும் சமயமறிந்து—எதிர்ப்புக்கு அஞ்சாமல்—என்று தீர்மானித்தான். வெற்றிபெற்ற அண்ணன், நச்சுப்பொய்கை தயாரித்துவிட்டான்—சீமான்கள் பலருக்கும் கொள்ளை இலாபம் கிடைத்துவிட்டது. திறப்புவிழாவுக்கான நாளும் குறிக்கப்பட்டுவிட்டது.

"இன்னமும் என்ன சந்தேகம்! பொதுமக்கள், மெழுகுப் பொம்மைகளேதான்! இதோபாரேன், தங்களுக்குவர இருக்கும் பேராபத்தை உணராமல், இலாபவேட்டைக்காரர்களின் சூதுமொழியை நம்பிநாசமாகின்றனர். குதூகலிக்கிருர்களே!கொண்டாட்டமாம்,கேளிக்கையாம்! என் அண்ணன் சொன்னது சரியாகப் போய்விட்டது; பொதுமக்கள், விளக்கமறியாத வெறும் கும்பல்தான், சந்தேகமில்லை" — என்று டாக்டர் மனவேதனையுடன் கூறினுர். அவருடைய மருமகனுக்கு என்னபதில் கூறுவது என்று தெரியவில்லை ஆனுல் ம[...] திலேமட்டும் பொதுமக்கள் உண்மையை உணர்ந்தா[...] நீதிக்காகப் போராடுபவர் என்ற நம்பிக்கை தளராம[...] ருந்துவந்தது. ஆனுல் உண்மையைப் பொதுமக்க[...] உணரவேண்டுமே! அதற்கானவழிதான் அடைப்பட்டு[...] போயிருக்கிறது — பணமூட்டைகளைப் போட்டல்லவ[...] அந்தவழியை அடைத்துவிட்டார் சீமான்! என்ன[...] செய்வது?

* * *

கப்பல் தலைவனுக இருந்த நிலைமை, உண்மைக்கு[...] பாடுபடத் துணிந்தவருக்கு உபசாரம் செய்யச் சென்[...] தால், பாழ்பட்டுவிட்டது—பிறகு, மருமகனை, அவ[...] நாலைந்து சிறு படகுகளை வாடகைக்கு அமர்த்தி[...] கொண்டு, மீன்பிடிக்கும் தொழிலிலே அமர்ந்தான்[...] —சுமாராகத்தான் வருமானம் கிடைத்தது எனினும்[...] அடிமை வேலையல்ல என்ற எண்ணம் அவனுக்குத் தனி[...] யானதோர் இன்பம் தந்தது. மேலும் தந்தை, அவனு[...] டைய வாழ்க்கைக்குக் கீதமானுள். மகிழ்ச்சிக்குக்குறை[...] வில்லை. ஓரே ஒரு மனக் குறைதான். எப்படிப் பொதும[...] களை, உண்மையை உணரும்படிச் செய்வது உலுத்த[...] களின் கொட்டத்தை எப்படி அடக்குவது[...] என்பது தெரியாததால் ஏற்பட்ட மனக்குறை[...] தான். மீன் பிடிக்க வலை வீசும்போது, மீ[...] களை விலைபேசி விற்பனை செய்யும்போதும், கிடைத்[...] பணத்தைக் கணக்கு பார்க்கும் போதும், கூட்டுப்ப[...] யாற்றும் தோழர்களுக்குப் பணம் பிரித்துத் தரு[...] போதும், எந்த வேலை செய்யும்போதும், அவன் ம[...] திலே, இந்த ஒரு எண்ணம் மட்டும், குடைந்தபடி[...] இருந்தது.

* *

"ரோஜா! விழாதினத்தன்று, நீ என்ன வர்ண[...] புடவைஉடுத்திக்கொள்ளப்போகிருய்,நீலமா,ஊதாவா[...] என்று கேட்டாள் அல்லி. அல்லி, பத்திரி[...] உரிமையாளரின் மனைவி—இரண்டாம் தாரம்—அழ[...] விட ஆணவம் அதிகம் அவளுக்கு. ரோஜா, சீமானி[...] மகள்—செருக்குடையவள்தான், எனினும், அ[...] மானவள் என்ற பெயர் கிடைக்கவேண்டும் என்பதி[...] அக்கரை கொண்டவள், எனவே அதற்கான விதத்தி[...] நடிப்பாள். இரு அழகிகளும், சேலையைப் பற்றி[...] தொடங்கிய பேச்சு கடைசியில், விழா நடத்தக் கூடி[...] அளவுக்கு வெற்றிகரமாகத் திட்டம் நிறைவேறிய[...] யாரால், என்பதிலே வந்துமுடிந்தது-வம்பும்வளர்ந்த[...] என் புருஷனுடைய பத்திரிகைப் பலத்தினுலேதா[...] வெற்றி கிடைத்தது—என்று வீரம் பேசினுள் அ[...] ரோஜாவுக்குக் கோபம்—அப்பாவின் பணபலம் தா[...] வெற்றிக்குக் காரணம் என்று வாதாடினுள். வார்த்[...] கள் தடித்தன.

"பொதி பொதியாகப் பணமூட்டைகளைச் சும[...] என்ன பயன்! செல்வாக்கு வேண்டுமே! புகழ் வே[...] டுமே!! பொதுஜன ஆதரவைத் திரட்டும் ஆ[...] வேண்டுமே! பணம் இருந்தால் போதுமா?"

"அல்லி! உன் கணவருடைய காகிதத்தை நீ[...] தப் புகழ்கிருய், உலகமறியாமல். என் அப்பா, ம[...] வைத்தால், அதைப்போல் ஒரு அரை டஜன் பத்[...]

களை, விலைக்கு வாங்க முடியும்—கூலி கொடுத்துக் வேலை வாங்க முடியும்"

"என்ன திமிரடி உனக்கு! சீமான்களை யார் இந்தக் லத்திலே சீந்துகிறார்கள்! அவர்களுக்கு ஆதரவு தர, ர் முன்வருகிறார்கள். என் புருஷனுடைய பத்திரிகைப் லத்தைப் பெற்றதாலேதான், உன் அப்பாவுக்கு சிலே, ஏதோ நாலுபேருடைய ஆதரவு கிடைத்ததே வி, அதற்கு முன்பு, அவரைக் கண்டாலே மக்கள் ருவருப்பர்—தெரியுமா? சீமான்தான் — ஆனால், ரைவிட்டுப் போய்விட்டாரே உன் சிறிய தகப்பனார். ாக்டர், அவருடைய செல்வாக்கிலே ஆயிரத்திலே ந் பாகம் கூடக் கிடையாது. உன். தகப்பனுக்கு— ரியுமா! பத்திரிகைப் பலம் கிடைத்தது-டாக்டரைக் டத் தோற்கடிக்கும் அளவுக்கு, பலம் பெற்றார் உன் ப்பா."

"உன் அடுக்குத்தனத்தை என் தந்தையிடம் கூறி க நடவடிக்கை எடுக்கச் சொல்கிறேன், பார்."

"போடி! எங்கள் பத்திரிகையிலே, உன் அப்பனு ய யோக்யதையைப் பற்றி, எழுதி, மானம் போகிறபடி செய்யாவிட்டால், என் பெயர், அல்லி ல், பார்."

"நாளைக்கே, நான் ஒரு பத்திரிகையை நடத்தச் சல்கிறேன் பாரடி, என் அப்பாவிடம் சொல்லி! ணத்தை வீசி எறிந்தால், காரியம் நடக்கிறது ஒரு பத்திரிகையை நடத்துவதுதானா பிரமாத ன காரியம்!!"

X X X

இந்த வாக்கு வாதத்தால் விளைந்த வம்பு, இரு டுகளிலும், தேம்பி அழுவதும் திக்கித் திக்கிப் சுவதுமாக வளர்ந்து, கடைசியில் அல்லியின் கண் ரைத் துடைத்தபடி அவள் கணவன், ஆகட்டும் நான் ந்தச் சீமானின் யோக்யதையை அம்பலப் படுத்து றன், என்று உறுதி கூறுவதும், "கிடக்கட்டும் ஜா! புதிய பத்திரிகை ஆரம்பித்துவிடலாம், கவலைப் டாதே. நாம் பத்திரிகை ஆரம்பித்தால், அந்தப் பத்தி க தானாகக் கீழே விழுந்து போகும்" என்று சீமான் செல்வக் குமாரிக்குக் கூறுவதிலும் போய் முடிந் . நேசத்துக்கு முறிவு!!

X X X

ரோஜாவும் அல்லியும் தத்தமது சமத்தைத் மே மெச்சிக்கொண்டனர். ஆனால் சீமானும் பத்தி க உரிமையாளரும், மோதிக்கொள்ள முன் வந்த காரணம், ஆணவக்காரிகள் மூட்டிவிட்டதால் டுமல்ல! விழாவுக்குத் தலைமை தாங்க வருகிற, வியா மந்திரிக்கு, யார் மாலை சூட்டுவது, விருந்தளிப் , என்பதிலே, சீமானுக்கும் பத்திரிகை உரிமையாள கும் தகராறு—கிளம்பிற்று—எனவேதான், ரோஜா அல்லியும் போட்ட தூபம் துரிதமாகவும் வேக வும் வேலை செய்தது.

பொது மக்களுக்கு நன்மை செய்வதாகக் கூறிக் ண்டு கொள்ளை இலாபமடிக்கும் இந்தச் சீமானுக் தானா, சகல மரியாதையும், முதலிடமும் இருக்க ண்டும், விழாவில். நான் கிள்ளுக் கீரையோ! டாக்ட ரின் கட்டுரையை அன்றே நான் வெளியிட்டிருந்தால், இந்தச் சீமானின் திட்டம் தவிடுபொடியாகி விட்டிருக் குமே!! இவ்வளவு பாடுபட்டு, இவனுக்கு ஆதரவு தேடித் தந்த என்னை, விழாவிலே, வந்தனோபசாரம் கூறத்தானா செய்வது! ஏன்? வியாபார மந்திரியுடன் நான் பேசிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பமே ஏற்படமுடி யாதபடி, தன் வீட்டிலே அல்லவா, அவருக்கு ஜாகை, விருந்து ஏற்பாடு செய்கிறான்! பார்க்கிறேன் ஒரு கை! இனி தயவு தாட்சணியம் ஏன்?--என்று எண்ணினான் பத்திரிகை உரிமையாளன், கோபத்துடன். விழாவுக்கு, வியாபார மந்திரியை வரவழைக்கவேண்டுமென்ற யோச னையைச் சொன்னதே கூட, பத்திரிகை உரிமையாளர் தான்! பலர், இந்த விழாவுக்கு, சுகாதார மந்திரியை வரவழைப்பதுதான் பொருத்தம் என்றனர், ஆனால், வியாபார மந்திரியிடம் தனியாகப் பேசவேண்டிய ஒன்று இருந்தது, பத்திரிகை உரிமையாளருக்கு!

வியாபார மந்திரி செல்வவான்--மந்திரி வேலைக்கு முன்பே கூட!! ஒரே மகன் அவருக்கு. ரோஜாவுக்கு ஏற்ற மணாளன். இது சீமானின் பிடிவாதத்துக்குக் காரணம்!! போட்டி-- பூசல் முற்றிவிட்டது. புதிய இதழ் வெளிவருவதற்கான ஏற்பாடுகளைச் சீமான் கவ னிக்கலானார். இது தெரிந்ததும் பத்திரிகை உரிமையா ளர் பதைத்தார். கணையைத் தொடுத்துவிடுவது என்று தீர்மானித்தார். டாக்டரின் பழைய கட்டுரையை--திட் டம் தீதானது--நாசம் தருவது--என்ற கட்டுரையை, வெளியிட்டார், பத்திரிகையில். ஊரிலேஒரேபரபரப்பு! திகைப்பு!! பல்வேறு வதந்திகள். அச்சுப்பொறிசரியாக அமையவில்லை, சீமானுக்கு, எனவே, கணையைத் தடுக் கும் வழி இல்லை.

மறுதினம், சீமானுக்கு ஒரு வேண்டுகோள்!— என்ற கட்டுரை வெளிவந்தது—அதிலே, திட் டம் தீமையானது என்று தெரிந்துவிட்டதால், இனி விழாவே கூடாது, பொதுமக்கள் விவரம் தெரியாமல், குளிக்குமிடம் சென்றுவிடுவதைத் தடுக்க தக்க ஏற்பாடு செய்யவேண்டும் சீமானுக்கு நஷ்டம்தான் என்றாலும், அவர் அதை, பொதுஜன நன்மையை உத்தேசித்துப் பொருட்படுத்தக்கூடாது, என்று விளக்கமும் உருக்க மும் நிரம்பியவிதமாக எழுதப்பட்டிருந்தது ஊர் மக் களின் கண்களெல்லாம் கேள்விக்குறிகளாயின! மறு தினம் சீமானின் இதழ் வெளிவந்தது! இத்தனை நாள் ஏன் மறைத்தாய்—என்ற கட்டுரை, காரசாரமாகத் தீட் டப்பட்டிருந்தது.--டாக்டரின் எச்சரிக்கை தரும் கட்டு ரையை, ஏன் முன்பு பிரசுரிக்கவில்லை, இத்தனை நாள் ஏன் மறைத்து வைத்தார் இந்தப் பத்திரிகை உரிமை யாளர்--என்று கேட்டார், சீமானின், பத்திரிகை ஆசிரி யர். மக்கள், இதைப் படித்ததும் பதறினர்! இரு இதழ் களும் நடத்திய 'போர்'-- வியாபார மந்திரியின் பார் வைக்குக் கொண்டுவரப்பட்டது-- அவர் எதிர்ப்புக்கு அஞ்சுபவர், எனவே விழாவுக்கு வரமுடியாது என்று எழுதிவிட்டாராமா, என்று எண்ணினர் — இதற்கிடை யிலே, சுகாதார மந்திரிக்கு, இதுதான் தக்க சமயம், தன், கோபத்தைக் காட்ட என்று தோன்றிற்று. குளிக் கும் இடம்-பூந்தோட்டம்-மருத்துவ விடுதி-போன்ற வைகள் அமைக்கப்படும் போது, சுகாதார மந்திரியான தன்னை அழைத்துக் கௌரவிப்பது முறையே தவிர, இந்த விஷயமாகத் தொடர்பு அற்ற வியாபார மந்

திரியை அழைப்பது முறையல்ல, அந்த அழைப்பை அவர் ஏற்றுக் கொண்டதும் சரியல்ல, என்பது சுகாதார மந்திரியின் வாதம். அவருடைய கோபத்துக்கும் காரணம் அதுதான்!

இரு பத்திரிகைகளிலும் வெளிவந்த கட்டுரைகளையே ஆதாரமாகக் கொண்டு, பொதுஜன நன்மையை உத்தேசித்து, இந்தக் குளிக்குமிடத்தை உடனே மூடிவிடும்படி உத்திரவிட்டார். போலீஸ் மந்திரிக்கு இதை நிறைவேற்றுவதில் ஓர் தனி மகிழ்ச்சி—ஏனெனில விழாவுக்குப்பெருங்கூட்டம் கூடினால், தொல்லைஏதேனும் வருமோ என்றுபயந்து கொண்டிருந்தவர் அந்த மந்திரி. குளிக்குமிடம் மூடப்பட்டது! பொதுமக்கள், டாக்டரின் கட்டுரையை, நிதானமாகப் படித்துப்பார்த்தனர்—அவர்களுக்கு அப்போதுதான் அவருடைய அருமையும் பெருமையும் விளங்கிற்று. இப்படிப்பட்டவரை அல்லவா, நாம் துரோகி என்று தூற்றினோம் என்று வருத்தப்பட்டனர். இவ்வளவுக்கும் காரணமாக இருந்த சிமான்மீது சீற்றம் கொண்டனர்—ஆனால் அவரும் ரோஜாவும், ஊரைவிடடுக் கிளம்பிவிட்டனர், இதை 'ஜாடை மாடையாக' அறிந்ததும், இந்தப் பத்திரிகைக்காரன், ஏன், இந்தச் சூதுக்கு உடந்தையாக இருந்தான் இதுவரையில்—ஏன் டாக்டருக்கு விரோதமாக வேலைசெய்தான்—நம்மை ஏய்த்தது ஏன் என்று எண்ணினர் சீறினர்—முடிவு, பத்திரிகை அலுவலகத்திலே, அமளி!! "பொதுமக்களே! சிமான் மிரட்டினான், நான் பயந்து போனேன்—அதனால்தான், டாக்டருக்குத் துரோகம் செய்தேன்—என்னை மன்னிக்கவேண்டும்" என்று கெஞ்சினான், பத்திரிகை உரிமையாளன்.

"பணத்தைக் கண்டு பல்லிளிக்கும் உனக்குப் பத்திரிகை ஒரு கேடா! சிமான் மிரட்டினால் என்ன, பொதுமக்களிடம் உண்மையைச் சொல்வதுதானே—நாங்கள் சும்மாவிட்டிருப்போமா, சிமானை" என்று கேட்டனர் மக்கள்.

"டாக்டரை வரவழைத்து மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்" என்றான் பத்திரிகை உரிமையாளன்.

* * *

அந்தத் திருநாள் வந்தது! டாக்டரின் கண்களிலே களிப்புக் கண்ணீர்! பேசவும் முடியவில்லை. அவர் சார்பிலே, மருமகன்தான் பேசினான்—டாக்டரின் பெருமையை மட்டுமல்ல—இரண்டு இதழ்களுக்கும், கட்டுரைகள் தயாரித்துக் கொடுத்த மாஜி ஆசிரியரின் பெருமையை. பொதுமக்கள், வாழ்த்தினர், அந்த ஆசிரியரை. "இவ்வளவு ஆனந்தத்திலே சூட்சமத்தை மறந்துவிட்டீர்கள். அன்று நான் உண்மையை விளக்கக் கூட்டம் ஏற்பாடு செய்திருந்தபோது, அண்டப்புளுகு பேசி, என்மீது அபாண்டமான பழி சுமத்தி, என்னைத் துரோகி என்றும், சதிகாரனென்றும் கூறிய, குடி இருப்போர் சங்கத் தலைவனல்லவா, இவ்வளவு கஷ்டத்துக்கும் காரணம்?"—என்று டாக்டர் கேட்டார். "ஆம்! ஆம்!" என்று ஆர்ப்பரித்தனர் மக்கள். ஆனால் அந்தப் பொதுஜனவிரோதி, 'எளியோர்' மாநாட்டுக்குத்தலைமை தாங்க வெளியூர் சென்றுவிட்டான்!!

* * *

பொதுமக்கள், முழுஉண்மை தெரியாதபோது அவசரமுடிவுக்குத்தான் வருகிறார்கள்—உண்மைத் தெரிந்தாலோ, அவர்கள் தக்கதீர்ப்பே தருகிறார்கள்—என்று பூரிப்புடன் கூறினார் டாக்டர். "ஆமாம், ஆனா பொதுமக்களுக்கு உண்மையை எடுத்துக்கூறவசதி, வல்லமை, வாய்ப்பு இருக்கவேண்டும். பணந்தேடிகளிடமும் அவர்களைக்கண்டு பல்லிளிப்போரிடமும் பிரசாரயந்திரம் இருந்தால் பொதுமக்கள் கண்களிலே மண்ணைத்தான் தூவுவர்—தூயவனைத் துரோகி என்று திருத்திக்கூறுவர்—பொதுமக்களை பயக்குவர், மிரட்டுவர்—தவறான வழியிலேயும் திருப்பிவிடுவர்—என்றான் மருகன் 'உண்மைதான்! மக்களாட்சி ஏற்பட்டும், மக்களின்மாண்பு சரிவரவேலை செய்யாததற்குக் காரணம், இரும்பு முதலாளிகள் இன்னும் இதுபோன்ற பணந்தேடிகளிடம் தரச்சாரயந்திரம் சிக்கிக்கொண்டதுதான். மக்களாட்சி மலரவேண்டுமானால், இந்த நிலைமை மாறவேண்டும் என்று டாக்டர் கூறினார். டாக்டரின் புகழ் ஓங்கிற்று அண்ணன் ஊர்திரும்பவே அஞ்சினார். ஊரார் சும்மா விடவில்லை, நகராட்சி மன்றத்தைத்திருத்தி அமைத்தனர். நாசம் தரும்திட்டத்தைத் தயாரிக்க பொதுமக்களின் பணத்தைச் செலவிட்ட நகராட்சிமன்ற உறுப்பினர்களுக்கு, நோடீஸ் கொடுத்தனர்!! அந் நோடீசும், டாக்டர், பொதுமக்களின் மாண்பைப்பற்றி விளக்கமாக எழுதிய கடிதமும், சிமானுக்கு ஒரேதபாலில் கிடைத்தன—படித்தார்—பயந்தார்—மக்கள் விழிப்படைந்துவிடுகிறார்கள், விரைவில், மக்களாட்சியை ஏமாற்றுவதுமுடியாத காரியம் இனி—என்று தெரிந்து கொண்டார்!


## பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

இந்தியா லைப் பெனிபிட் அஷ்யூரன்ஸ் சோசைடி, லிமிடெட்,

தலைமை ஆபீஸ் : கோயமுத்தூர்.

வருஷத உழைப்பின் பயன் பொங்கல் குதூகலம் } இந்த தமிழர் { ஜீவிய இன்ஷ்யூரன்ஸ் சேமிப்பின் பேரா னந்த சந்தோஷம்.

இணக்கத்தை ஆதரியுங்கள்.

தலைவர் :
T. A. ராமலிங்கம் செட்டியார், B.A., B.L.,
அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர்.

மானேஜிங் டைரெக்டர் :
M. S. பழனியப்ப முதலியார், B.A.

செக்ரெடரி :
C. R. சிவசுப்ரமண்யம், B.A.


* * *

# அடிமை சாசனம்

வாணன

...நாடு தென்
...ச்சுரண்டவும்
உருவாகவும்
பூர்வமாக
...சய்யப் படுகி
...ிராவிட முன்
...ழகம்.

...தலாளிகள் சுக வாழ்வுக்கும், சுரண்டலுக்கும்
...்து தரப்படுகிறது''—கம்யூனிஸ்டுக் கட்சி.

...தலாளிகளேயே கூட்டி வைத்துக்கொண்டு
...ள நலனுக்காகவே உண்டாக்கப்பட்டது.''
...ிஸ்டு கட்சி.

...கட்சி அதிகாரத்திற்கு வந்ததும் இந்த அரசிய
...் திட்டத்தை கிழித்து எரிந்துவிட்டு வேறு
...யாரிக்கும்'' சோஷியல் டெமாக்ரெட் கட்சி.

...த புதிய அரசியலமைப்பு காங்கிரசை அதி
...லயே வைப்பதற்காக உண்டாக்கப்பட்ட திட்
...், நாடாளுவதற்கு அல்ல.''—இந்து மகா

X X X

...று ஆண்டுகள் இதற்காக செலவிட்டனர்.
...டம் தயாரிக்க 141-நாட்களாயிற்று. இதைப்
...-நாட்கள் கூடிப் பேசினர். இதற்கென மக்க
...பணம் ரூ 63,96,729 செலவிடப் பட்டது.
''அரசியலமைப்புத் திட்டம்'' 395-பிரிவுக
...ருவாகியது!! இதைப்பற்றி மக்களிடை செய்
...ரசாரம் கொஞ்ச நஞ்சமல்ல.

...ஏற்பட்ட அரசியலமைப்பு திட்டத்திற்குத்
...கண்ட கண்டனக் கணைகள் மாற்றுக் கட்சி
...ப்பட்டுள்ளன. நாடாளுவதற்காக தயாரிக்
...ட்டம் நாட்டில் உள்ள மாற்றுக் கட்சிகள்
...த்துக் கொள்ளாத நிலையில் ஜனவரி 26-ம்
...் ஆட்சி பீடம் ஏறுகிறது. அதற்கு பிறகு
...மைப்பிற்கு கட்டுப்பட்டுத்தான் நாட்டில
...லவேண்டும்.

...த வாரத்திலிருந்து இந்திய உபகண்டம்
...மாறிவிடும். வெள்ளையரின் வியாபார
...ஒரு ஆட்சியின்கீழ் கொண்டுவரப்பட்ட இந்
...டம் அதிகார பூர்வமாக உண்டாக்கப்பட்ட
...மைப்பின்' கீழ் ஒரே நாடாக ஆளப்பட போகி
...ரசியலமைப்பின் விதிகளை ஒவ்வொன்றாக
...ாய ஏட்டில் இடமின்மை காரணமாக குறிப்
...குறைபாடுகளை மாத்திரம் இங்கு கவனிக்

...லமைப்பு திட்டத்தின் அடிப்படை தவறு
...ம் தெரிந்த சில வழக்கறிஞர்களால் உண்
...டதேயாகும். கோர்ட்டில் கொலைகாரனுக்கும்
...ும் வக்கீல்கள் கிடைப்பது போல, தங்கள்
அரசிலமைப்பு தயாரிக்க சில வழக்கறி
...ங்கிரசுக்குக் கிடைத்தனர். அவர்கள் சட்ட
போல அடிப்படை சாசனத்தை தயார்
...டனர். நூற்றுக்கு தொண்ணூறுபேர் பக்தி

மான்களாக கூடியிருக்கும் அரசியல் நிர்ணய சபையில் அது நிறைவேறியது ஆச்சரியப் படத்தக்கதல்ல. தப்பித்தவறி அந்த திருக்கூட்டத்தில் கலந்து போன ஒரே ஒரு சோஷிலிஸ்ட் கட்சி அங்கத்தினர்தான் எதிர்த்து வோட் செய்தார். மற்ற அங்கத்தினர் அவ்வளவு பேரும் தலையையாட்டினர். எதற்காக தலையையசைத்தோமென்றுகூட அவர்களுக்கு தெரியுமோ என்னவோ!

அரசியலமைப்பை உருவாக்க உட்கார்ந்தவர்கள் வரலாற்றுச் சுவடியை புரட்டி பார்த்திருக்க வேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் சென்ற சில நூற்றாண்டுகளில் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகளையும் பல்வேறு நாடுகளில் ஜனநாயகத்திற்கு உண்டான இடையூறுகளையும் தங்கள் கவனத்திற்கு கொண்டுவந்திருக்கவேண்டும். இந்திய அரசியலமைப்பாளர்கள் முயன்றிருந்தால் உலகத்திலேயே மக்களாட்சி பூக்க எப்படிப்பட்ட திட்டம் தேவை என்பதை எடுத்துக் காட்டியிருக்கலாம். ஆனால் அப்படிப் பட்ட 'கெட்டவழிகளில்' (?) போக அவர்கள் தயாராக வில்லை. தங்களுக்கு எது தேவையோ, எப்படிப்பட்ட அரசியலமைப்பு இருந்தால் தாங்கள் பதவியிலேயே அமரலாமோ அப்பேர்ப்பட்ட திட்டமொன்றை தயார் செய்து விட்டனர். இத்தகைய அரசியலமைப்பை மாற்றுக்கட்சிகள் எப்படி ஒப்ப முடியும்?

புதிய அரசியலமைப்பின்படி அரசாங்கத்தின் தலைவர் ('பிரசிடெண்ட்') மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப் படுபவர். ஆகவே மக்களுக்கும் பிரசிடெண்டுக்கும் சம்பந்தமில்லை. மக்களால் விரும்பப்படாத எவரும் பிரசிடெண்டாகிவிடலாம். அல்லது மக்களின் முழு நம்பிக்கை கொண்டவர் வர முடியாமல் போகலாம். பிரசிடெண்டிற்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரமோ அளவிடற்பாலது. பிரசிடெண்ட் போர் சமயத்திலோ அன்றி உள்நாட்டுக் கலகங்கள் ஏற்பட்டாலோ அரசியல் அடிப்படை சாசனத்தையே ஆறுமாதம் வரையில் ரத்து செய்து விடலாம். இதிலே முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால் இம்மாதிரி ஆறுமாத காலத்திற்கு அரசியல் அடிப்படைத் திட்டத்தை ரத்து செய்வதற்கு காரணங்கள் காட்ட வேண்டிய அவசியம் கூட இல்லை. உள்நாட்டுக் கலகமோ, சண்டையோ ஏற்படுமென்றோ அல்லது அதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன என்றோ பிரசிடெண்ட் எண்ணினால் கூட போதும்! ஆமாம், பிரசிடெண்ட் நினைத்து அரசியலமைப்பை ரத்து செய்தால் யாரும் ஏன் என்று கேட்பதே குற்றம். அதன் பிறகு அவர் யாரை வேண்டுமானாலும் சிறையிலடைக்கலாம். எந்த கட்சியையும் சட்டவிரோதமாக்கலாம். எத்தனை அடக்குமுறை சட்டங்களும் இயற்றலாம். இதில் எந்த விஷயத்திலும் தலையிட நீதி மன்றத்துக்குக் கூட அதிகாரம் கிடையாது. ரத்து அதிகாரத்தைப் பிரயோகிக்கும் பிரசிடெண்ட் பார்லிமெண்டில் பெரும்பான்மையினரின் கட்சியைச் சேர்ந்தவராக இருப்பார். ஆகவே எந்த நேரத்திலும் ஆறுமாதம் மாத்திரமல்ல பார்லி

மெண்டின் அங்கீகாரத்தின் பேரிலேயே பல மாதங்கள், ஆண்டுகள் சர்வாதிகாரியாகிவிடுவார். குடியாட்சியில் மக்கள் மன்றத்தின் உதவிகொண்டே இந்திய உபகண்டத்தின் பிரசிடெண்ட் ஒருநாள் சர்வாதிகாரியாகி விடுவார். அப்பொழுது நாம் பாசிச ஆட்சியின் கீழ்தான் இருப்போமே தவிர குடியாட்சியின் கீழிருக்க நியாயமில்லை.

கடைசி நேரத்தில் அரசியல் நிர்ணய சபை மாகாண கவர்னர்கள் விஷயத்தில் சில மாறுதல்கள் செய்திருக்கிறது. ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்ட திட்டத்தின் படி மாகாண கவர்னர்கள் அந்தந்த மாகாண மக்களாலேயே தேர்தெடுக்கப்படுவர் என்றிருந்தது. ஆனால், இப்பொழுது இதுவும் மாற்றப்பட்டு கவர்னர்கள் பிரசிடெண்டால் நியமிக்கப்படுவார்கள் என்று முடிவு செய்யப்பட்டு விட்டது. நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத பிரசிடெண்ட் மாகாண கவர்னர்களை நியமிப்பார். ஆகவே மாகாண கவர்னர்கள் மாகாண மக்களுக்கு பிடித்தமில்லாதவர்களாக இருக்கலாம். ஆனால் பிரசிடெண்டின் நல்லெண்ணத்தைப் பூர்த்தி செய்யவும் அவருடைய அதிகாரத்திற்கு கீழ்ப் படிந்தும் இருக்கவேண்டியவர்களாகிறார். பிரசிடெண்டே கவர்னர்களை நியமிப்பதால், கவர்னர்கள் எல்லோரும் பிரசிடெண்டின் ஆட்களாகவே இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. மாகாண மந்திரிகள் கவர்னருக்கு கீழ் அடங்கிநடக்கவேண்டியவர்கள் என்று பிரிவேதாரிடத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. முடிவில பார்த்தால் பிரசிடெண்ட் இஷ்டப்பட்டால் எந்த மாகாணத்திலும் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். மாகாணங்களின் உரிமையை பறிப்பதில் பிரிட்டிஷார் செய்த 1935-ம் ஆண்டு சட்டத்தைக் கூட மிஞ்சிவிட்டது அடிப்படை சாசனம்.

இந்திய அரசியலமைப்பு அமெரிக்க, பிரான்ஸ் அரசியலமைப்புக்களின் தொகுப்பு என்று கூறப்படுகிறது. ஆராய்ந்து பார்த்தால் இரண்டு தேசங்களுடைய அரசியலமைப்பின் கெடுதலான பாகங்கள் அவ்வளவும் இந்திய அரசியலமைப்பில் இருப்பதைக் காணலாம். அமெரிக்க பிரசிடெண்ட் உலகத்திலேயே அதிகமான அதிகாரம் உள்ள தனி மனிதன். இருந்தாலும் அவருடைய அதிகாரம் செனட் சபையால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்திய குடியரசின் பிரசிடெண்டோ அமெரிக்க பிரசிடெண்டைவிட அதிகமான அதிகாரம் உள்ளவர். ஆனால், அமெரிக்கர்கள் போல் பிரசிடெண்ட் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்.

பிரஞ்சுக்காரர்களைப் போல மக்கள் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்படுவார். பிரஞ்சு பிரசிடெண்ட் அரசாங்கத் தலைவரே ஒழிய அதிகாரம் இல்லாதவர். இம்மாதிரி ஒரு தனிப்பட்ட தலைவரின் மீது இவ்வளவு அதிகாரத்தை சுமத்துகிறோமே என்று ஒரு கடுகளவாவது அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்கள் எண்ணவில்லை. காரணம் அங்கு கூடியிருந்தவர் குடியரசின் தன்மை தெரிந்தவர்களல்ல. பக்திமான்கள். தனிப்பட்ட தலைகளை பூஜித்து பழக்கப்பட்டவர்கள்.

பிரசிடெண்டின் அதிகாரத்தால் மாகாணங்களின் சுய நிர்ணய உரிமைகள் பறிக்கப்படுவது ஒரு புறமிக்க, மற்றும் பல வழிகளிலும் மாகாணங்களின் உரிமைகள் பறிபோகின்றன. மாகாண மந்திரிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரம் மிகவும் குறைவு. மந்திரிகள் சாங்கத்தை நடத்தும் ஆபீசர்கள் போலத்தான் க பட்டிருக்கின்றனரே தவிர மக்களின் தேவைக்கு வே டியதை செய்பவர்களாக கருதப்படவில்லை. மாக அசெம்பிளிகள் சட்டமியற்றுவதை தடுக்க மறுக்கவோ மத்திய அரசாங்கத்திற்கு அதிகா கொடுத்திருக்கிறது. மாகாண நிதிவிஷயம் 193 ஆண்டு சட்டம் அமிர்தம் என்று கூறக்கூடிய யில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. முக்கியம வரிகள் எல்லாம் மத்திய அரசாங்கத்திற்குப் போய் டன. இப்பொழுது மாகாணங்கள் வசூலிக்கும் மற் தொழில் வரிகள், மூலப் பொருள்களில் விதிக்கு கள் யாவும் மத்திய அரசாங்கமே அபகரித்துக் கெ கிறது.

அரசியலமைப்புத் திட்டத்தை ஆராய் கொண்டே போனால் அதில் மத்திய அரசாங்கம் கிறதே ஒழிய மாகாண சர்க்கார்கள் கண்ணு தென்படவில்லை. "இந்திய உபகண்டம் ஒரே தே அதை ஆளுவதற்கு ஒரே தலைவன்" என்றுதான் சியலமைப்பு மறைமுகமாக நடக்குக் கூறுகிறது— "ஒரே தேசம்" என்ற வெறிபிடித்த தேசிய பான்மைதான் இந்தியை அரசியல் அடிப்படை களில் ஒன்றாக்கிவிட்டது. திராவிடத்தின் முழு எ பும் வைதீகத்தால் மூடப்பட்டு பாசிச மனப்பா யுடன் பதினைந்தாண்டில் இந்தியை பொது மொழி முடிவு செய்யப்பட்டுவிட்டது "ஒரு நாட்டின் மெ அழிக்கப்பட்டால் அந்த நாடு தானாகவே அடிமைப் விடும்" என்பதற்கேற்ப இந்திய உபகண்டத்தின் வேறு கலாச்சார தொகுதிகளையும், மொழிக் கொண்ட பல நாடுகளையும் அழிக்க இந்திமொழி மொழியாக்கப்பட்டுவிட்டது. சமீபத்தில் சென்னை கலாசாலை மண்டபத்தில் இலங்கை அறிஞர் ஒ கூறியதைப் போல் பல்வேறு மொழிகள் பேசும் டில் ஒரு மொழியை அடிப்படை சாசனத்தின் பொதுமொழியாக்குவது அடிப்படை சாசனத் ஆபத்து என்பதை அரசியல் நிர்ணய சபையார் ம விட்டனர் போலும்.

அரசியல் நிர்ணய சபையார் தங்கள் திட்ட தயார் செய்யும்பொழுது எந்தவித அடிப்படை கைகளையும் மனதில் கொண்டிருந்ததாக தெரிய பிரிட்டிஷார் தயாரித்து தந்துபோன அரசியலமை இன்னும் பலமாக்கி தங்களுக்கேற்றவாறு சில ம கள் செய்துள்ளனர். இதைத் தவிர அரசியல இந்திய மக்களுக்கு புதிய நன்மை எதையும் செ வரவில்லை. ஒவ்வொரு நாட்டிலும் "அடிப்படைசா அந்தந்த நாட்டின் ஜீவாதாரமான கொள்கை எடுத்துக் காண்பிக்கும். நமக்கு தயாரிக்கப்பட்ட திட்டமோ பல் சட்டங்களின் தொகுப்பாகவே கிறதே அன்றி கொள்கைகள் எதுவும் தென்பட காங்கிரஸ் தலைவர்கள் பெருமையாக அரசியலமை முதல் பாகத்தைப் பற்றி வானளாவப் புகழ்ந் வருகின்றனர். அப்படித்தான் அதில் என்ன கிறது? அரசியல் பொருளாதார சமூகத் துறை சமத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று கூறு இந்த அளவுக்குக் கூட எழுதிவைத்துக்கொள் இந்த இருபதாம் நூற்றாண்டில் உலாவ முடியும

இந்த கொள்கைகள் எந்த அளவுக்கு அரசாங்கம் பிடிக்கும் என்பதில்தான் கொள்கையில் காங்கிரஸ் ர்களுக்குள்ள பற்று விளங்கும். அல்லது இந்தக் ள்கைகளுக்கு ஊறுநேரிடாதவாறு அரசியலமைப்பு டி பாதுகாக்கும். எந்தநபரையும் விசாரணையின்றி துவைக்க பிரசிடெண்டிற்கு உரிமை இருக்கிறது. மனிதனின் உரிமை" பின்னால் ஒருவிதியில் காற் றக்கவிடப்பட்டிருக்கிறது! இந்த அரசியலமைப்பு ஏழ்மையிலேயே உழலவும் பணக்காரன் போக த்தில் வாழவுந்தான் வழிசெய்திருக்கிறதே தவிர, டு பலவாக நடந்துவரும் ஆண்டான் அடிமை ட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வழி தேட . தனிப்பட்ட மனிதரின் சொத்துரிமையை பாது அரசாங்கம் உத்திரவாதமளிக்கிறது. நாட்டில் முதலாளிகள் தங்களிஷ்டம்போல் வியாபாரம் பாதுகாப்பு கொடுத்திருக்கிறது. எந்த சொத்தை ல்லது தனிமனிதனுக்கு சொந்தமான எந்தபொரு எடுத்துக்கொள்வதில்லை என்று வாக்குறுதி தரு . இப்படியெல்லாம் வாக்குறுதிகள் தந்துவிட்டு ல அடிப்படை சாசனம் நாட்டிலே நிலைநாட்டும் கைதான் என்ன? முதலாளித்துவம் ஒழியாமல் ளி பிரச்னை தீர்க்கப்படாமல் ஏற்றத்தாழ்வுகள் து ஒருவரை ஒருவர் சுரண்டித்தின்னும் புரை ப்போன இந்த சமுதாயநிலை நீடிப்பதற்காகவே திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது — ஆட்சி வருகிறது. அதனுடைய தன்மையைப்பற்றி நாம் தைவிட காங்கிரசின் பிரச்சார இயந்திரமான து" பத்திரிகை கூறுவதை தருகிறோம்.

இந்த அரசியல் அடிப்படை சாசனம் சகலவிதத் சரியானதென்றோ அல்லது நமதுதேசத்திலுள்ள று அறிஞர்கள்கூடி இதைவிட அருமையானது க்க முடியாதென்றோ யாரும் கூறவில்லை."

வுண்ட்ரோடு மகாவிஷ்ணு இந்தமாதிரி கூறினால் பொருள் என்னவென்று எண்ணிப்பாருங்கள்.

திராவிடத்தை புறக்கணித்துவிட்டு வடநாட்டு வும் சனாதனமும் பிற்போக்குக் கும்பலும் து உண்டாக்கிய அரசியலமைப்பு நீண்டநாளைக்கு நம் என்று கூறுவதற்கில்லை. சரத்பாபுவோ ஜய நாராயிணனோ ஆட்சிமன்றம் ஏறினால் அன்றே படை சாசனம் காற்றில் பறந்துவிடும். அல்லது னிஸ்டு கட்சியோ, வடநாட்டில் தற்சமயம்வளர்ச்சி திருக்கும் ஹிந்து மகாசபையோ அரசசபை ஏறி அரசியலமைப்புத்திட்டங்கள் கிழிக்கப்படும்.

ப்பொழுது நாம் சொல்வதையெல்லாம் சிந் றுக்கும் மாகாண மந்திரிகள் நாளைக்கு டில்லிக்கு டுக்கும்போது உண்மை நிலையை உணர்வார் ந்தி ஆதிபத்தியமும், வடநாட்டு வாணிபமும் அரசாங்க ஆதரவில் திராவிடத்தில் தலையெடுத் ன் அரசியல் அடிப்படை சாசனத்தின் சுரூபம் தெரியும். திராவிட இயக்கத்தின் டைகொள்கைகளான சமூக அரசியல் பொருளா த்துவத்தை (செயலாற்றுவதில்) ஏற்காதவரை அரசியலமைப்பும் திராவிட மக்களின் உள் பெறமுடியாது. வெவ்வேறு கலாச்சாரங்களை ாழிகளையும் கொண்ட மக்களை ஒருக்காலும் ஒன்றுக பிணைத்துவைக்க முடியாது, என்று பேரறிஞர் வெல்ஸ் கூறியது அரசியல் நிர்ணயசபை அங்கத்தினர் களுக்கு தெரிந்திருக்க வேண்டும். "தனித்தனியான கலாச்சாரங்களை கொண்ட பல்வேறு இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை அளிப்பது மனித முன்னேற்றத் திற்கு வழிசெய்வதாகும்' என்று லெனின் கூறியதை அரசியலமைப்பை தயாரித்தவர்கள் ஞாபகத்திற்கு கொண்டு வந்திருக்கலாம். ஓரளவு இருக்கின்ற நிலைமை யுடன் தாங்கள் செய்வதை ஒத்திட்டு காலத்திற்கேற்ற திட்டத்தை தயார் செய்திருக்கலாம்.

காலம் கற்பித்துள்ள பாடத்தை மறந்து அரசியல் நிர்ணய சபையார் அரசியல் அடிப்படை சாசனம் தயா ரிப்பதற்குபதில் அரசியல் அடிமை சாசனம் தயாரித்து விட்டனர். இந்த அடிமை சாசனம் எந்த நேரத்தில் யார் யாருக்கு என்னென்ன தீங்குகள் புரியும் என்பதை காலம் பதில் கூறும். அரசியல நிர்ணய சபையார் செய் யத்தவறியதை காலம் செய்யும். சரித்திரம் தன்வழக்க மான வழியை பின்பற்றும் அதில் சந்தேகமில்லை.

அமெரிக்க விடுதலை வீரன் ஆப்ரகாம்லிங்கன் குடி-யாட்சியைப் பற்றிக் கூறும் போது

"மக்களுக்காக மக்களாலான மக்கள் அரசாங்கங்கள் தான் குடியாட்சி' என்றார். நமக்கு காங்கிரசார் அளித் திருக்கும் அரசியலமைப்பை ஒரு தடவை படித்தால் இந்திய அகராதியில் குடி-ஆட்சியின் அர்த்தத்தை பின் வருமாறு மாற்ற வேண்டியதுதான். -

"பிரசிடெண்டிற்காக, பிரிசிடெண்டால் ஆக்கப் பட்ட பிரிசிடெண்டின் அரசாங்கம்தான் குடியாட்சி!"

## ஆசிய ஜோதி

17-ம் பக்கத் தொடர்ச்சி

ததைவிட மூன்று மடங்காக உற்பத்திபெருகி, சாமான் களை விற்பதற்கு ஆள் தேடிக்கொண்டிருக்கும் அமெ ரிக்காவிற்கு இதைவிட அருமையான மார்க்கெட் எப் படி கிடைக்கமுடியும். இவைகளையெல்லாம்விட, இவ் வளவும் ரஷ்யாவுடையது ஆகிவிட்டால்......? இதை நினைக்கும்போது அமெரிக்காவிற்கு நடுக்கமெடுக்காமல் இருக்கமுடியுமா?

பலகோடி டாலர்கள் செலவு செய்து காப்பாற்றப் பட்ட சீன அமெரிக்காவை கைவிட்டுவிட்டது. சீன காலிசெய்த இடத்திற்கு ஆள் தேவை. பிரிட்டிஷார் உற்பத்தி செய்த பலம்வாய்ந்த ராணுவமும் அரசியல மைப்பும் இந்தியாவை உள்நாட்டு குழப்பத்திலிருந்து காப்பாற்றுகிறது. நிரந்தரமான சர்க்காரைக்கொண்ட இந்தியா சீனவினிடத்தை பூர்த்திசெய்வது அமெரிக்கா விற்கு அளவற்ற உதவி. இந்தியாவின் உதவியால் இந்து மகாசமுத்திர ஆதிக்கமும் முன்னமேயே அதற்கு சொந்தமான பிலிப்பைன்ஸ் தீவுகளின் உதவியில் பசி பிக் ஆதிக்கமும் கிடைக்கும். தூரக்கிழக்கின்பிடி அமெ ரிக்காவில் சிக்கும். ரஷ்யாவுக்கு போட்டியாக அமெ ரிக்கா உயரும். இந்த நிலையை அடைய இந்திய உபகண் டம் ஆசியாவின் தலைமை பீடமாக்கப்படுகிறது. நேரு ஆசியாவின் தலைவராக்கப்படுகிறார்.

(18-ம் பக்கம் பார்க்க)

# கவிழ்ந்த படகு

[கே. எ. மதியழகன்]

"ஆண்டவன் என்பது அபத்தமாமே"

"கடவுள் என்பது கற்பனைச் சொல்லாமே!"

"கர்த்தரின் போதனை கயமை நிறைந்ததாமே!

"கிருத்துவ மகமே மூடநம்பிக்கையாம்!"

"புரோகிதர்கள் மக்களின் சுதந்தரத்தை சாகடித்த புல்லுருவிகளாம்"

"அவ்வளவு தானா?"

"நாத்திகத்தின் அவசியமாம்—ஏட்டின் பெயர்"

"அதற்கு முன்னுரை மற்றொரு மடையன் தீட்டியிருக்கிறான்"

"வாதிட வரலாமாம்! வெளியீட்டில்கண்டிருப்பவை சிந்தனையின் விளைவாம். விமர்சனம் செய்யலாமாம். மறுப்புக்கூட வெளியிடலாமாம்"

"அறைகூவல் கூட விட்டிருக்கிறானா அக்கிரமக் காரன். அவ்வளவு துணிச்சலா"

1811-ம் ஆண்டு ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்திலே அன்றோர் நாள் ஒரே அமளி. எங்கும் பரபரப்பு மாணவர்களெல்லாம் திரு திருவென்று விழிக்கின்றனர். பேராசிரியர்களின் முகத்திலே அசடு வழிகிறது. குருமார்களின் கண்களிலே கோபம் பொங்குகிறது.

இவ்வளவும் இதைவிட அதிகமாகவும் அன்று அங்கு சத்தித்தவர்கள் எல்லோரும் பேசினர். எல்லோருடைய கரங்களிலும் "நாத்திகத்தின் அவசியம்" (Necessity of Atheism) என்ற துண்டு வெளியீடு இருந்தது. ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் என்றாலே யாருக்கும் புரியும் கர்த்தரின் காவலர் உறைவிடம் என்பது. கத்தோலிக்கக் குருமார்களின் கோட்டை. ஆண்டவனின் நேர் புத்திரர்கள் என்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள். அப்படிப்பட்டவர்களின் கண்களிலே எவனோ ஓர் விதண்டாவாதி வெட்டிப் பேச்சைக் கிளப்புவது என்றால் விட்டுவிட முடியுமா? பிறகு மார்க்க போதகர்கள் என்ற பட்டம்தான் அவர்களுக்கு எதற்கு! ஆகவேதான் "நாத்தீகத்தின் அவசியம்" என்ற துண்டு வெளியீட்டைக் கண்டவுடன் துடித்தார்கள்.

பரமனுக்கு எதிராக எந்த பாவி பழி கற்பித்தாலும், போராடவேண்டிய அவர்கள், ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்திலிருந்தே ஒருவன் அத்தகைய நச்சை உமிழ்கிறான் என்றால் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா! ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் என்றால் எவ்வளவு அருமையான இடம். ஆதிக்கம் தழைப்பதற்காகவே இருக்கும் ஆஸ்ரமம். இப்படிப்பட்ட இடத்திலே இந்த இழிச் செயலா, எவ்வளவு திமிர் அந்தத் துடுக்கனுக்கு. அடக்கியாக வேண்டும் இல்லாவிட்டால் ஆண்டவன் பெயருக்கே மாசு; ஆக்ஸ்போர்டுக்கே அபகீர்த்தி என்று நினைத்தனர், அதுவும் வயது வந்த வயோதிகன் கூட அல்ல. சின்னஞ்சிறு பிள்ளை, வாலிபன், மா இப்படியா "பகுத்தறிவு"ச் சோதனை புரிவது ஆசிரியர்களான பாதிரிகள் பதை பதைத்தனர்!

இவ்வளவு குழப்பத்திற்கும் காரணம் "நா தின் அவசியம்" என்ற வெளியீட்டைப் பிரசு பேராசிரியர்கள், குருமார்கள், பாதிரிகள் ஆகிய கும் வழங்கியிருந்தான் ஓர் மாணவன். இந்த கருத்து மாணவர் மத்தியிலே பரவினால் மதம் வது என மருண்டனர். கல்லூரித் தலைவரு பிரதியைப் படித்தார். "எங்கே, கூப்பிடுங்கள் மாணவனை" என்றார். எதிரே ஒரு பையன் வ றான், ஒல்லியான உருவம், நீண்ட தலைமயிர், ஒ உடுத்தப்படாத ஆடை., வெண்மையான அழகி அகன்ற கண்கள், பெண் போன்ற சாயல், இவ தயத்திலே இவ்வளவு எண்ணங்களை வைத்து டிருப்பவன் என்ற ஐயம் ஏற்படுகிற அளவுக் வளவு அப்பாவிபோல் காணப்பட்டான்.

"நீதானா இதைத் தீட்டியது"

"ஆம்"

"இறைவனை இழித்து இப்படி எழுதலா

"அறிவு என்னைத் தூண்டியது, எழுதின

"சரியென்றா சாதிக்கிறாய், சண்டாளா, சர் னுக்கே விரோதமல்லவா!"

"என் சிந்தனையின் கருவூலம் அவை, அடகுவைத்து ஆட்டுமந்தையாகச் சொல்கிற

"அட பாவி! தவறு என்று ஒத்துக்கொள் டாயா? அவ்வளவு முரட்டுத்தனமா?"

"தங்களுக்காக நான் மனமார நம்பும் தவறுடையது என்பதா"

"எனக்காக அல்லவே ஆண்டவனுக்காக.

"அங்கேதானே அபிப்பிராய பேதம்!"

அபிப்பிராய பேதத்திற்கு ஆக்ஸ்போர்டு கழகத்திலே இடமில்லை"

"அறிவுக் கேணிதானே பல்கலைக் கழக வித் கருத்துக்களும் நடமாடவேண்டாமா"

"கேணியிலே ஓடுகிற நீரைத்தான் பருக சாக்கடையைக் கலக்கக்கூடாது"

"அப்படியென்றால்"

"ஊரிலே யாராவது உன்மத்தர்களுக் உன் உபதேசத்தை. இந்த இடம் உனக்கு பல்கலைக் கழகத்திலிருந்து உன்னை கிறோம். இந்த நிமிடத்திலிருந்து நீ மாண கல்லூரித் தலைவர் தீர்ப்புக்கூற பக் இருந்த பாதிரிகளும் தலையசைத்தனர். மாணவனை பல்கலைக் கழகம் பட்டம் கொடுத்

யில்லை, விலக்கியது, விரட்டியது படிப்பு முடியா முன்னம் ஆனால், "நாத்தீகன்" என்ற பட்டத்தைக் குற்றமாகச் சாட்டி.

மாணவன் நினைத்தான் பல்கலைக் கழகத்திலே படிக்கப்போகிறோம். அங்கு விவாதம் நடக்கும், விவேக விளக்கம் இருக்கும்; அறிவு, இருக்கும், ஆராய்ச்சி இருக்கும், சந்தேகங்களுக்குத் தெளிவு பிறக்கும் அறிவு மலர வழி அமையும் என்றெல்லாம். ஆனால் அவன் அங்கே கண்டது, அவர் கல்லூரித்தலைவரானால் எப்படியிருப்பார், இந்தப் பேராசிரியரிடம் என்ன தவறு இருந்தது என்ற இந்த விவரத்தை. பாடப்பகுதியிலே கர்த்தரின் பெருமையை, கன்னிமேரியின் கருணையை கத்தோலிக்க மதத்தின் அருமையைத்தான் கண்டான். அவனது கனவு கலைந்தது. அவனது அறிவுத்தாகத்தைத் தணிப்பதற்கு மார்க்கம் காணோம். அவனுக்கு இலக்கியங்களிலே ஏராளமான ஆசை. மணிக்கணக்கிலே புத்தகங்களிலே மூழ்கிவிடுவான். கற்பனை உள்ளம் நிறைந்தவன். காவியங்கள் புனைவதிலே அவனுக்கு ஓரே வெறி. தத்துவ விசாரணையிலே அவனுக்கு மிகுந்த வேட்கை நாட்டிலே இருக்கிற புரோகிதர்களும் மன்னர்களும் மக்களின் உரிமையை நசுக்கி விட்டார்கள் என்பது அவனது கருத்து. மனித சமுதாயம் கட்டுப்பாடற்று சுதந்தரமாய் விளங்கவேண்டுமென்பது அவ்னது கொள்கை. எதையும் பகுத்தறிவுக் கண்கொண்டு பார்க்கவேண்டுமென்று விரும்பினான் அவனது இந்த எண்ணங்களுக்கு பல்கலைக்கழகத்திலே இடம் காணோம் எனவே அவனது கருத்துக்களை வாதிக்க வழியில்லை. அடக்கி வைக்கவும் முடியவில்லை ஆகவேதான் "நாத்திகத்தின் அவசியம்" என்ற வெளியீடாக வெளியிட்டான். நண்பர்களுக்குக் கடிதம் எழுதுகிற நேரத்திலெல்லாம் பக்கம் பக்கமாக தனது கொள்கைகளை வலியுறுத்தி வந்தான். அந்த இளைஞனைப் பல்கலைக் கழகம் தாங்கிக்கொள்ள முடியவில்லை. "வெளியேபோ" என விரட்டியது. இந்த வேதனையைத் தாங்கிக் கொண்டு வெளியே வந்த மாணவனின் பெயர் பெர்சி பைஷி ஷெல்லி. (Percy Bysshe Shlley) இன்று ஆங்கில இலக்கிய வானில் மங்காத தாரகையாய் ஒளிவிடுகிறானே கவிஞன் ஷெல்லி, அதே ஷெல்லிதான் இவன். இவனை கல்லூரியிலிருந்து விலக்கியது தகாது என வாதாடினான் மற்றொரு மாணவன். அவன்தான் இவனது அருமை நண்பன் ஹாக் (Hogg) என்பவன். ஹாக்தான் இவன் எழுதிய 'நாத்திகத்தின் அவசியம்" என்ற ஏட்டிற்கு முன்னுரை தீட்டியவன். இவனுக்கும் அதே கதி கிடைத்தது.

நண்பர்கள் இருவரும் பல்கலைக் கழகத்திலிருந்து இலண்டன் பயணமானார்கள். வீட்டிற்குச் செல்லவில்லை. ஷெல்லியின் தந்தை செய்தியைக் கேள்விப்பட்டார். செந்தேள் கொட்டியது போலிருந்தது அவருக்கு ஷெல்லியின் செய்கை. டிமோதிஷெல்லி (Timothy Shelley) என்பது அவர் பெயர்சஸ்ஸெக்ஸ் பகுதியிலே பில்டுப்ளேஸ் என்ற இடத்தைச் சேர்ந்தவர். சிறிய சீமான். வசிகரமாக வாழ்வதற்கு வசதியிருந்தது. விக்கட்சியிலே உறுப்பினர். தனது மைந்தன் பல்கலைக் கழகத்திலே படிக்கிறான். பட்டம் பெறுவான். பாராளுமன்ற உறுப்பினனாவான். விக்கட்சியினுக்கு தூணாக அமைவான். குடும்பத்தின் கீர்த்தியைக் காப்பான். பிரஞ்சு, ஜெர்மனி மொழிகளில் வல்லுனனாவான், வையகம் தன்பிள்ளையை கவிஞனென்று வாழ்த்தும் என்றெல்லாம் கனவு கண்டவர். இவனது கவிதா வெறியும் காவியப் புலமையும் கடவுளை நிந்திக்கும் 'கயவனுக்கும்' என்று அவர் கருதவில்லை. சிறுவனாக ஈட்டன் (Eton) பள்ளியிலே பயின்ற நேரத்திலே இத்தகைய இடரான எண்ணங்களை கொண்டிருக்கின்றானே என்று எண்ணியதுண்டு. ஆனால் ஆக்ஸ்போர்டு அவனை அருமையான பிள்ளையாக்கும் என்று நினைத்திருந்தார்.

சீட்டாடிக் கொண்டிருந்தான் சீமான் வீட்டுப்பிள்ளைகளுடன் என்று யாராவது சொல்லியிருந்தார் சீறியிருக்க மாட்டார். நளினிகளுடன் நடனவிருந்து நடத்திக் கொண்டிருந்தான் உங்கள் பிள்ளை என்றிருந்தால் நாகரிகத்தின் அம்சம் என்றிருந்திருப்பார். மங்கையரும் மதுக்கோப்பையாய் அலைகிறான் உங்கள் மைந்தன் என்றிருந்தால் மருண்டிருக்க மாட்டார். இவையெல்லாம் ஆக்ஸ்போர்டு மாணவர்களின் அன்றாட நிகழ்ச்சிகள் என்றிருந்திருப்பார். ஆனால் ஆண்டவன் இலலையென்கிறான், அரசு கூடாது என்கிறான், அறிவு வேண்டும் என்கிறான் என்ற இந்த விஷயம் அவருக்கு வேப்பெனக் கசந்தது. வீட்டிற்குவா என ஷெலலியை அழைத்தார், அவனுக்கோ வீடு சிறைச்சாலையாய் இருந்தது. கையிலே கொஞ்சம் பணமும் இருந்தது. லண்டன் வாசியானான். தந்தை பணம் அனுப்புவதையும் நிறுத்திவிட்டார் கோபத்தால. அவனது சகோதரிகள் உதவிய கொஞ்சம் பணத்தைகொண்டு வாழ்க்கையை ஓட்டினான். இதன்பிறகு அவன் வாழ்வு முழுதும் ஓரே புயல வீசியது. அந்தப்புயலிலிருந்து அவன் மீளவேயில்லை.

ஹாரியட்க்ரோவ் என்றோர் அழகி. இவனின் அத்தைமகள். இவனுக்கு அவள்மீது அடங்காதகாதல். அவளுக்கும் அப்படித்தான். இவனது சொந்த ஊரிலே வாழ்ந்தாள் அந்த சுந்தரி குழந்தைமுதல் இருவருக்கும் நட்பு. கூடிக்குலாவி மகிழ்ந்திருந்தனர், குட்டிக் கதைகள் சொல்லுவான் குமரிகளைக் கூட்டிவைத்துக்கொண்டு. குழந்தைக்ரோவ் குமரியானாள். பெற்றோர் வேற்றூர் சென்றனர் இவர்களது நட்பு பட்டுப்போகவில்லை. கடிதங்கள் அவர்களின் தூதுவர்களாயின. ஷெல்லி, சிங்காரக்கவி புனைந்து அனுப்புவான். அவளது சிற்றிடை, சிரிப்பொலி, சிவந்த அதரம் இவை பற்றிமட்டும் அவன் மடல் தீட்டவில்லை. அவனது பகுத்தறிவுக் கொள்கைகள், பழைமைப் பலிபீடத்தைத் தகர்க்கவேண்டிய அவசியம், மார்க்கத்தைப் பற்றி அவனது எண்ணங்கள் ஆகியவைகளைப்பற்றியெல்லாம் எழுதி அனுப்பினான். இந்தக்கருத்துக்களைக் கண்டு பாவை பயந்தாள். அவளுக்கு அவன்மேல் ஆசைதான். ஆனால் அவனது நாத்திக வாதம் அவளுக்குப் பிடிக்கவில்லை. மெள்ள ஓர்நாள் மாதாபிதாக்களிடம் காட்டிவிட்டாள் அவனது கடிதக்குவியலை மகளின் மகிழ்ச்சியான வாழ்விற்கு இந்த இலட்சிய புருஷன் லாயக்கில்லை என்றனர். ஹாரியட்க்ரோவும் அலங்காரி; ஆடம்பரத்தில் அதிக மோகமுள்ளவள். அந்தஸ்தில் பிரியமுள்ளவள். அவளுக்கு இந்த அதிசய புருஷன் எங்கே பிடிக்க போகிறது? நமது திருமணம் நன்மையல்ல என்று மறுத்துவிட்டாள். வேறொருவனை மாலையிட்டாள். கொண்டிருந்த கொள்கைக்காகநேசித்தகோமள

(18-ம் பக்கம் பார்க்க)

# ஆசிய ஜோதி

"ஆசியாவின் தலைமைப் பீடம் எது?" இந்தக் கேள்விக்குப் பதில் கொடுப்பதில் இப்பொழுதெல்லாம் தேசியப் பத்திரிகைகள் தயங்குவதேயில்லை.

"ஆசிய நாடுகளின் நலத்தைப் பாதுகாக்க இந்தியாவைத் தவிர வேறு யாருமில்லை. இந்தியாதான் ஆசியாவின் தலைமை பீடம். நேருதான் ஆசியாவின் தலைவர்." என்று பலவிதமான தலைப்புகளுடன் அன்றாடம் பத்திரிகைகள் வெளிவருகின்றன. அரசியலமைப்பு சபையிலிருந்து தெருக்கோடியில் நடக்கும் திண்ணைப் பேச்சு வரையிலும் இந்த பிரச்னை விவாதிக்கப்பட்டு ஒரு முகமான முடிவுக்குக் கொண்டுவரப் பட்டுவிட்டது. மந்திரிகளும் நாடு சுற்றிவரும் தேசியத் தலைவர்களும் சர்வ தேசிய அரங்கில் இந்தியாவிற்கு கிடைத்திருக்கும் தலைமைப் பதவியைப் பற்றி பேசாமலிருப்பதில்லை.

சமீபத்தில் தன் பிரசங்கமொன்றில் இதைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது "ஆசிய நாடுகளில் முன்னேற்றம் வாய்ந்ததும் பலம் வாய்ந்த சர்க்காரையும் கொண்டது இந்தியா ஒன்றுதான். ஆகவே அது இயற்கையாக ஆசிய நாடுகளின் தலைமைப் பீடத்தை அடைகிறது." என்று பெருமையாகக் கூறிக்கொண்டார் இந்திய உபகண்டத்தின் பிரதமர் நேரு. மறுப்பாரில்லாமல், போட்டி போடுவாரில்லாமல் தானாகவே தலைமைப் பீடத்தை அடைந்துவிட்டது இந்தியா! இதுதான் பிரதமரின் தீர்மானமான முடிவு.

* * *

இந்த 'தலைமை பீடம்' பிடிக்கும் எண்ணம் மூன்றுண்டுகளுக்கு முன் டில்லியில் கூடிய ஆசிய கலாச்சார மாநாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. பின்னால் இந்தோனேஷிய விடுதலைக் குறித்து கூட்டப்பட்ட மாநாட்டில் இதற்கு பிரச்சாரம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தோனேஷிய விடுதலைக்காக மாநாடு கூட்டிய காரணத்தால் இந்தியாவுக்கு ஆசியத் தலைமைப்பீடம் தானாகவே வந்துவிட்டதாக கூறப்பட்டது. கடைசியாக நேருவின் அமெரிக்க விஜயம் இந்த தலைமைப் பீடத்தை ஊர்ஜிதமாக்கிவிட்டது. ஆசியாவின் தலைவருக்கு அமெரிக்காவில் க்ரீடம் சூட்டப்பட்டது. அமெரிக்காவில் காலடி வைத்தது முதல் அவர் சுற்றுப் பயணம் பூராவும் ஆசியத் தலைமைக்கு அவருடைய பொருத்தத்தைப் பற்றியே பேசப்பட்டது. க்ரீடத்தை ஏற்றுக்கொண்ட இந்திய பிரதமரும் ஆசியப் பிரச்னைகளைப் பற்றிதான் பேசினார். அவர் இந்திய உபகண்டத்தில் திரும்பி நுழைந்த பிறகு ஆசியாவின் நிரந்தர தலைவராக்கப் பட்டுவிட்டார்!

* * *

"ஆசியாவின் தலைமை பீடம் எது?" இந்த கேள்வி இப்பொழுது எழுவதற்கு காரணம் என்ன? 'தலைமைப் பீடம்' என்று ஒன்று இருக்கிறதா? இருக்கவேண்டுமா? அப்படி இருந்தால் யார் அந்த இடத்தில் அமர முடியும்? என்ற பல கேள்விகள் எழும்புகின்றன நம் மனதில். தலைமைப் பீடத்தை நாடுகிறவர்கள் இவைகளைப் பற்றி எண்ணியதாகத் தெரியவேயில்லை.

ஆசியா என்று குறிப்பிடும்பொழுது அதில் இந்தியா, பாகிஸ்தான், பர்மா, மலேயா, இலங்கை, இந்தோனேஷியா, சீனா முதலிய தேசங்கள் அடங்குகின்றன. இத்தனை தேசங்களுக்கு இந்தியா தலைமை வகிக்கிறது. இதுதான் 'ஆசியாவின் தலைமை' என்பதின் பொருள். இத்தனை தேசங்களும் இந்தியாவின் தலைமையை ஒத்துக்கொண்டதா, கொள்ளுமா, என்பது யோசிக்கப்படவேண்டிய விஷயம்.

சிவப்பாக மாறிய சீன நாடும், வெறுப்பில் விலகிப் போன பாகிஸ்தானும் இந்தியத் தலைமையை ஒத்துக் கொள்ளுமா என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். சீனத் தலைவர் மா—சே—டாங் இந்திய கம்யூனிஸ்டு கட்சி காரியதரிசிக்கு சமீபத்தில் அனுப்பிய வாழ்த்துச் செய்தியிலிருந்து இதை இன்னும் விளக்கமாக தெரிந்து கொள்ளலாம். பாகிஸ்தானைப் பற்றி அதிகம் எழுதத் தேவையில்லை. காஷ்மீர் சண்டையில் ஆரம்பித்து நாணய மதிப்புக் குறைப்பு வரை நடந்துவரும் பலவிதமான சச்சரவுகள் யாவரும் அறிந்ததே. சீனா, பாகிஸ்தான் நீங்கலாக மீதியுள்ளவை தூரகிழக்கு நாடுகள் தான்.

தூரகிழக்கு நாடுகள் இன்றைய தினத்திலிருக்கும் நிலைமையை பத்திரிகை படிக்கும் சாதாரண மனிதனும் நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். சென்ற யுத்தம் முடியும் வரை இலங்கை, பர்மா, மலேயா, மூன்றும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திலிருந்தன. ஆதிக்கம் என்றால் சுரண்டப்பட்டு வந்தன. பொருளாதார, சமூக, அரசியல் துறையில் மிகவும் பிற்போக்கான நிலையிலிருப்பவை. இந்தோ சீனா பிரஞ்சு ஆதிக்கத்திலிருந்தது. இந்தோனேஷியா டச்சுக்காரர்களின் ஆதிக்கத்திலிருந்தது. இந்த அடிமைப்பட்ட நாடுகள் தங்கள் எஜமானர்களுக்கு கொடுத்த பொருள்கள் அளவற்றன. மேல்நாடுகளில் இயந்திரம் சுழல, கச்சாப் பொருள்கள் அனைத்தும் இந்த பிராந்தியங்களிலிருந்தே எடுத்துப் போகப் பட்டது. அதேமாதிரி அங்குஉருவாக்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் இங்குதான் கொண்டுவந்து விற்கப் பட்டது. மார்க்கெட்! ஆம்! உலக மார்க்கெட், தூரக்கிழக்குப்பிரதேசம்.

திடீரென்று இந்த சுரண்டல் முறைக்கு பேராபத்து ஒன்று ஏற்பட்டது. உலகப் பெரும் போர் சுரண்டல் முறைக்கு சாவுமணி அடிக்கத் தொடங்கியது. போர் ஆரம்பித்த சில நாட்களுக்கெல்லாமே ஜப்பான் தூரக்கிழக்கைத் தன் வசப்படுத்திக் கொண்டது. ஜப்பானியர்களை தோற்கடிப்பதற்கு நேச நாடுகள் ஜனநாயகத்தையும் மனித உரிமையையும் காரணம் காட்டி காலனி நாடுகளின் ஒத்துழைப்பை பெற வேண்டி ஏற்பட்டது. உலக அரங்கில் ஜனநாயகம் பேசப்பட்ட அதே நேரத்தில் தன்னிடம் பிடிபட்ட நாடுகளை தன் வசமே வைத்துக்கொள்ள ஜப்பான் தூரக்கிழக்கு நாடுகளுக்கு ஐரோப்பியரின் சுரண்டல் கொள்கையை எடுத்துக்காட்டி ஆதரவு தேடியது. ஆக, சண்டைமுடியும் தருவாயில் ஆசிய காலனி நாடுகளில் ஒரு புதிய மாறுதல் நேர்ந்தது. மூன்று நூற்

றூண்டுகளாக இருந்தது போல் ஆசியா இன்னமும் தூங்கிக்கொண்டிருக்க வில்லை. தேசிய உணர்ச்சியும் விடு தலை வேட்கையும் ஒவ்வொரு நாட்டிலும் தோன்றி விட்டன. இந்த புதிய சூழ்நிலையில் தங்களுடைய நேரடி யான சுரண்டல் கொள்கை இனி பலிக்காது என்பதை ஆதிக்க வல்லரசுகள் கண்டு கொண்டன. இனியும் வளர விட்டால் தங்கள் சுக வாழ்வுக்கு ஆபத்து என்பதை நன்முக உணர்ந்து கொண்ட வல்லரசுகள் இந்த புரட்சி வேகத்தை பாதியிலேயே நிறுத்த புதிய திட்டங்களை கொண்டு வந்தன. பிரிட்டன் இந்த விஷயத்தில் முன் னேடும் பிள்ளையானது. இந்தியா இரு துண்டாக்கப் பட்டு 'காமன் வெல்த்'களாக மாற்றப் பட்டது. இலங் கையும் அவ்விதமே மாற்றப்பட்டது. பர்மாவுக்கு முழு சுதந்தரம் அளிக்கப்பட்டது. மலேயாவில் சமஷ்டி அர சாங்கம் நிறுவப்பெற்றது. இவ்வளவு மாறுதல்கள் ஏற் பட்டும் தனக்கு கிடைக்கும் லாபத்தில் இடையூறு நேராவண்ணம் கவனிப்பாக பார்த்துக் கொண்டது பிரிட்டன். இந்தோனேஷியாவும் டச்சு அரசாங்கமும் ஒரு வித உடன் படிக்கைக்கு வந்துவிட்டன. இந்தோ சீனுவுக்கு பிரான்ஸ், அங்நாட்டு முன்னுள் மன்ன னையே அரசாளவைத்து விட்டு தன் சுரண்டல் வேலையை செய்கிறது.

இந்நிலையில் உலக மக்களிடையே ஆசிய நாடுகளின் விடுதலையும் வல்லரசு நாடுகளின் தாராள மனப்பான் மையைப் பற்றியும் பிரச்சாரம் செய்யப்பட்டது. மனித உரிமையை ஆதிக்கக்காரர் காப்பாற்றி விட்டதாக கூறிக் கொண்டனர்.

வல்லரசுகளின் திட்டங்கள் ஒருசில தேசிய தலை வர்களுக்குத்தான் பிடித்ததே தவிர ஆசிய நாடுகள் ஒவ்வொன்றிலும் தீவிர புரட்சிவாதிகள் இருக்கத்தான் செய்தனர். ஜப்பான் விட்டுப்போன ஆயுதங்களுடன் அவர்கள் உள்நாட்டு கலகங்களை ஆரம்பித்தனர். கலகங் கள் வளர்ந்து ஆசியாபூராவும் குழப்ப மயமாகிவிட்டது. பர்மாவில் கரேனிஸ்தான் "கம்யூனிஸ்டுப் பிரச்னைகள் அவுங்சானிலிருந்து பல தேசியத் தலைவர்களை பிண மாக்கியது. பர்மாவின் வடபாகம் இன்னும் தக்கின்நூ அரசாங்கத்திடம் வரவில்லை. ஒவ்வொருநாளும் ராணு வத்திற்கும் கம்யூனிஸ்ட் மக்களுக்கும் போர்நடந்தவண் ணம் தானிருக்கிறது.

மலேயாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நேரடி யான பிரதிநிதிகள் இருப்பதால் கலகம் இன்னும் அதிகம் ஆங்கில மேலதிகாரிகள் பலர் கொலை செய்யப் பட்டனர். சமீபத்தில் கூட சரவாக் பிரதேசக் கவர்னர் கொலை செய்யப்பட்டார் மலேயா அரசாங்க மும் ஈவு இரக்கமின்றி கணபதிகளை தூக்கிலிட்டவண்ண மிருக்கிறது.

இந்தோசீனுவின் நிலைமை விசித்திரமானது. இந்தோசீனு வின் வடபாகம் பூராவும் கம்யூனிஸ்டு தலை வர் ஹோ—சி—மின் ஆதிக்கத்திலிருக்கிறது. பல ஆயி ரக்கணக்கான போர் வீரர்களின் துணை கொண்டு, இந்தோ சீனுவில் கம்யூனிஸ்டு அரசாங்கத்தை நிறுவ சந்தர்ப்பத்தை எதிர் நோக்கியபடி இருக்கிருர். தன்னுடைய நாட்டில் அரசனின் ஏவலாளை கூட தூக்கிலிட்ட பிரஞ்சு அரசாங்கம், இந்த சமயத்தில் தான் இந்தோ சைனுவின் முன்னுள் மன்னன் 'பாவோ டாயை' அந்நாட்டு தலைவராக நியமித்திருக்கிறது. ஹோ—சி—மின்க்கு சரியான சந்தர்ப்பம்! அரச பரம்ப ரையை ஒழித்துக் கட்டவேண்டிய பொறுப்பு அவருக்கு சேர்ந்து விட்டது.

இந்தோனேஷியா டச்சு அரசாங்கத்தின் ஆதரவில் குடியரசாகப்பட்டிருக்கிறது. இதனுல் அங்கு அமைதி ஏற்பட்டு விட்டது என்று கூறிவிட முடியாது. சுகர்னேவின் தலைமையை எல்லாக் கட்சிகளும் ஒத்துக் கொண்டன என்று கூறமுடியாது. உள்நாட்டுப் போரில் சென்ற இரண்டாண்டில் டச்சுக்காரர் நடத்திய 'போலிஸ் நடவடிக்கை'களினுல் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் முக்கியமானவர்கள் பலர் கொலை செய்யப் பட்டு விட்டதாயும் வெகு விரைவில் அங்கும் குழப்பம் ஆரம்பித்து வரும் என்றும் சமீபத்தில் இந்தோனேஷி யாவைப்பற்றி செய்தி கிடைத்திருக்கிறது.

இப்படி குழப்பம் மிகுந்து உள்நாட்டு கலவரம் நடக்கும் சமயத்தில்தான் ஆசியாவின் தலைமை இந்தியா வுக்கு தரப்படுகிறது. ஆசிய கண்டத்தில் ஒரு நாட்டி லாவது பலமான அரசாங்கம் கிடையாது. ஒருதேசத் திலாவது மக்களின் முழு நம்பிக்கை கொண்ட ஆளும் வர்க்கம் ஏற்படவில்லை. இன்றைக்கு இருக்கும் பிரதமர் நாளைக்கு இருப்பார் என்று தைரியமாக கூறுவதற் கில்லை. ஆசியாவின் விடுதலை சரித்திரம் இன்னும் எழு தப்பட வேண்டிய நிலையிலேயே இருக்கிறது. இந்த குழப்ப நிலையில் அவசரமாக இந்திய பிரதம ருக்கு ஆசியாவின் கிரீடம் சூட்டப்பட்டது. யாரால்? ஆசிய மக்களால் அல்ல. அமெரிக்க ஆளும் வர்க்கத் தால். ஏன்? இதுதான் கூர்ந்த கவனிக்கப்படவேண்டிய விஷயம்.

உலகப் பெரும்போரில் ஐரோப்பிய வல்லரசுகளை தன்டாலருக்கு அடிமையாக்கிக்கொண்ட அமெரிக்கா ஆசியாவில் தனக்குப் பாதுகாப்புத்தேட ஆரம்பித்தது. சீனு சிவப்பாக மாறியகாரணத்தால் ஆசியாவின் முக்கி யத்துவம் இன்னும் அதிகமாகிவிட்டது. ரஷ்யாவுக்கு சமமாக உடர! தூரக்கிழக்கில் ஆதிக்கம் அதிகம் வேண் டும். அதோடுமாத்திரமில்லை, தூரக்கிழக்கின் மதிப்பும் அதிகம். உலகின் ரப்பர் உற்பத்தியில் பாதி தூரக் கிழக்கை சேர்ந்தது. மூன்றிலொரு பாகம் கொப் பரை இங்குதான் கிடைக்கிறது. மேலும் ஆறிலொரு பாகம் வெள்ளீயம், நூறில் எழுபதுபாகம் மாஎண் ணெய்கள், தொண்ணூறுபாகம் கொய்னு முதலியவை கிடைக்கின்றன. பர்மாவில் கிடைக்கும் மண்ணெண்ணை யும் இந்தியத் தனிசொத்தாகிய சணலும் கவனிக்கப்பட வேண்டியவை. தூரக்கிழக்கில் தோண்டப்படாத தங்க மும், வைரமும், மற்ற விலையுயர்ந்த உலோகங்களும் காடுகளில் அடங்கிக்கிடக்கும் பொருள்களும் அளவற் றன. இவ்வளவு பெரியபொக்கிஷத்தை இழக்க அமெ ரிக்காவுக்கு மனம் வருமா? அதோடு "மார்க்கெட்" பிரச்னை வேறு ஒருபக்கம் இதன் முக்யத்துவத்தை அதிகமாகிறது. உலக ஜனத்தொகையில் மூன்றில் இரண்டுபங்கு ஆசியமக்கள். தொழில் துறையில் முன் னேறுமல் விவசாயத்திலும் பண்டைமுறையுடன் சமூக பொருளாதார அரசியல் துறையில் பிற்போக்கில் வதி யும் மக்கள் கூட்டம் ஆசியர்கள். மார்க்கெட் பாஷை யில் அதன் அர்த்தம் வியாபாரம் செய்வதற்கு தகுதி யானவர்கள் என்பதுதான். ஈண்டைந்த முன்றுலிருந்

(19-ம் பக்கம் பார்க்க)

## ஆசிய ஜோதி

13-ம் பக்கத் தொடர்ச்சி

பூகோள அமைப்பில் இந்தியா தலைமைப்பீடத்தை அடைகிறது. மற்றபடி "ஆசியா கலாச்சாரம்" என்று ஒன்று தனியாக கிடையாது, இந்தநாடுகள் ஒன்றுபட. தலைமைவகிக்கும் இந்தியாவுக்குக்கூட ஒருகொள்கையை பரப்பவேண்டுமென்ற எண்ணமோ லட்சியமோ கிடையாது. ஆசியநாடுகளுக்கென்று பொதுவான பிரச்னைகள் எதாவது இருந்தாலே அப்பொழுது தலைமை தேவைப்படுகிறது. பொதுப்பிரச்னை என்று தனியாக எதுவுமில்லை. மற்றபடி தேசத்திற்கு தேசம் நடக்கும்சண்டை சச்சரவுகளைத் தீர்த்துவைக்க ஐக்கியநாட்டு சபை தயாராகயிருக்கிறது. அங்கேசென்று ஆசியாவைப்பற்றி பேசவேண்டியதை இந்தியா பேசலாமே, ஆசியப் பிரதிநிதிகள் கூட்டுமுயற்சி செய்தால் ஐக்கியநாட்டுச் சபையில் ஆகாதது எதுவுமிருக்கமுடியாது. இந்நேர்வழி இருக்க குறுக்குவழி எதற்கு? இதோடுகூட இன்னொரு முக்கியமான விஷயமும் கவனிக்கப்படவேண்டும். இந்தோனேஷியவிடுதலையில் 'ஆசியத்தலைவர்' நேருகாட்டிய அக்கரையில் நூறில்ஒருபாகம்கூட மலேயாத் தோழர்களின்மீது காட்டவில்லை. மலேயாவில் வெள்ளை முதலாளிகள் செய்யும் அக்கிரமம் யாருக்கும் தெரியாததல்ல. இருந்தும் ஏன் நேரு வாயைப் பொத்திக்கொண்டிருக்கிறார். கொஞ்சம்எண்ணிப்பார்த்தால்காரணம் தெரியும். மலேயா மக்கள் போராட்டத்தைப்பற்றிபேசினால் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கோபத்திற்கு ஆளாகவேண்டும். காமன்வெல்த்தாக இருக்கஉடன்பட்டவுடன் 'ஜான்புல்'லின் கோபத்திற்கு ஆளாகமுடியுமா? அதற்குப் பக்கத்தில் இந்தோசினாவில் நடக்கும் அக்ரமத்தைப்பற்றி ஒரு வார்த்தை பேசமுடியாது. காரணம் நேருவுக்கு இந்தியாவில் தொலலை கொடுத்துவரும் கம்யூனிஸ்டுகட்சியை சேர்ந்தவர் ஹோ—சி—மின். இப்படி நேருவின் அயல்நாட்டுறவுகள் ஆசியாவில் விடுதலை இயக்கங்களோடுசேர முடியாதபடி செய்துவிட்டது. சுரண்டும் ஆதிபத்தியக்காரர்களுக்கு கோபம்வரக்கூடிய எதையும் நேரு செய்ய முடியாது. அலசிப்பார்த்தால் 'ஆசியத்தலைமை' என்ற பதத்திற்கு அர்த்தம் என்ன என்பதே தெரியவில்லை. ஆசியமக்களுக்கு அவசியமில்லாத, தேவைப்படாத, ஒரு விஷயம் 'ஆசியத்தலைமை' 'ஆசிய ஜோதி' ஆனால் அமெரிக்காவுக்குத் தேவைப்படுகிறது இந்த வார்த்தை.

ஆசியாவின் கிரீடம் நேருவின் தலையில் ஏறுவது ஆதிக்ககாரர்களுக்கு களிப்பூட்டும். ஆனால் ஜனநாயகவாதிகளுக்கு பயத்தைதான் கொடுக்கிறது. "எல்லாநாடுகளிலும் நாம்தான் உயர்ந்தவர்கள். நமக்குத்தான்மற்ற நாடுகளுக்கு வழிகாட்டக்கூடிய சக்தி உண்டு" என்று நம்மைப்பற்றி வரட்டுஜம்பம் பேசிக்கொண்டே செல்வது ஹிட்லரைத்தான் நமக்குஞாபகமூட்டுகிறது. இந்த வீண்ஜம்பம் பேசுவதற்குத் தித்திப்பாகத்தானிருக்கும். ஆனால் இந்த கிரீடத்தைசூட்டிவிட்டு நம்மை சுரண்ட பின்னால் அமெரிக்கா வருவதை பார்க்கும் போது ஆபத்து தெரியும். இதைப்பற்றி மாஸ்கோ பத்திரிகை நியூடைம்ஸ் குறிப்பிடும்போது "சீனப்பிரதமர் சியாங்காலி செய்துவிட்டுப்போனஇடத்தில் நேரு நுழைகிறார். நேருவைப்பற்றி வானளாவ புகழ்ந்துவிட்டு அதன்மூலம் இந்திய உபகண்டத்தை ஆசியமக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக உபயோகப்படுத்த ஏற்பாடு செய்கின்றனர். இது இந்தியமக்களுக்கு எந்தவழியிலும் நன்மை செய்யாது" என்று எழுதுகிறது. இதிலிருந்து ஆசியாவின் தலைமை என்றால் என்ன என்பதை சிந்திக்கவேண்டியது. நாட்டின் நன்மையில் அக்கரை கொண்டவர்களின் கடமை.

❁

## கவிழ்ந்த படகு

15-ம் பக்கத் தொடர்ச்சி

வல்லியையே இழந்தான். இந்தவேதனை அவன்உள்ளத்தை ஆயிரம் ஈட்டிகொண்டு தாக்குவதுபோல் இருந்தது. இந்த பிரிவைப்பற்றி, அவள்மீது கொண்டிருந்த அடங்காத ஆசையைப்பற்றி அருமையான சொல்லோவியங்கள் புனைந்தான் அவனது இதயதாபத்தைஎதிரொலிக்கும் இலக்கியம் அவை!

இலண்டனிலேஇருந்தபோது ஹாரியட்வெஸ்ட்புருக் (Harried West Brook) என்பாளதுதோழமை கிடைத்தது. அவள் பள்ளிச்சிறுமி. 16 வயதிருக்கும். அவளுக்கு ஷெல்லியின்மீது ஒரேகவர்ச்சி. இந்த சூழ்நிலையில ஹாரியட்டின் பெற்றோர் அவளைத்தொடர்ந்து படிக்குமாறுவற்புறுத்தினர். அவளுக்கோபடிப்பில்மனம் நாடவில்லை. ஷெல்லிக்கு கடிதம் தீட்டினாள். அவனும் அவள் தந்தையை வேண்டினான், பயனில்லை. கடைசியாக ஷெல்லி நேரேவந்தான். அவளது வாடாமேனி வாடியிருந்தது. அவள் கண்கள் குளமாகியிருந்தன. கன்னங்களிலெல்லாம் நீர்த்தாரை வடிந்தது. புட்டுப்புட்டுப்புகன்றாள்அவள் தன்காதலை இதயத்தைத்திறந்து காண்பித்தாள். ஷெல்லியே மணம் செய்துகொள்ள வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாள். இவனது நிலைமையோ சங்கடமாகிவிட்டது. இவனுக்கோ அவள்மீது காதல் அரும்பவில்லை. ஆனாலும் அவளது நிலைமை இவனை செயலாற்றத்தூண்டியது. சனியன்களானபெற்றோரிடமிருந்து அந்தப்பேதைப் பெண்ணை விடுவிக்க வேண்டுமென்ற உணர்ச்சி அவனுக்குக்கிளம்பியது. விடுதலைவீரன், சமுதாயத்தொண்டன் என்றிருக்கவேண்டுமென்றிருந்தது. அந்த பூங்கொடியாளுடன் பறந்துவிட்டான் பெற்றோருக்குத் தெரியாமல்! மணப்பதிவு நிகழவேண்டுமென்றாள் மாது. எடின்பர்க்கிலே திருமண ஒப்பந்தம் செய்துகொண்டு 19 வயது மணமகன் ஒருவனும் 16 வயது மணமகள் ஒருத்தியும் வெளியேவந்து கொண்டிருப்பதைப் பார்த்தனர்.

குடும்பவாழ்வு ஆரம்பமாகியது. குதூகலம் என்னவோ குறைவுதான். தந்தை கொஞ்சம் பணம் தந்தார். கவி புனைவதிலேகாலந்தள்ளினான். அழகைஅவன் ஆராதனைபுரிந்தான். காதல் அவனது ஒப்பற்ற இலட்சியம். புனிதம்என்ற பெயர்சொல்லி, வேலியிட்டுஎல்லா அக்ரமங்களையும் மறைக்கிறார்கள் ஆண்டவன்பெயரைச் சொல்லி என்று கவிபாடினான்! மன்னர், புரோகிதர்கள், கபட வேஷதாரிகள். மனிதப் பண்பை மொக்கிலே கிள்ளியெறிந்தவர்கள் என்றான். யுத்தம் என்பது ராஜதந்திரியின் விளையாட்டு, புரோகிதனின் மகிழ்ச்சிக்கருவி, வாடகைக்கு வாங்கப்பட்ட கொலைக்காரர்களின் வாணிபம் என்றான். அவனது அரசியல் கருத்துக்களைத்தொகுத்து உரிமைப் பிரகடனம் (Declaration of Right) என்ற வெளியீடாக்கி

ன் இதில் அரசாங்கம் அங்கீகாரம் பெற்றதல்ல. னிதனின் கைகளில் விலங்கு மாட்டியிருக்கிறது என் றெல்லாம் விளக்கியிருந்தான். அந்த வெளியீட்டை நியோகித்துக்கொண்டிருந்த இவனது வேலைக்காரனை ர்க்கார் கைது செய்து 6 மாதம் கடுங்காவல் விதித்தது. ஷெல்லியின் அரசியல் நடவடிக்கைகளை கண்காணித் தது அரசாங்கம்.

ஹாரியட் இவனை மணந்தது இவனது இலட்சிய வாழ்விற்கல்ல, இன்பபுரி பயணத்திற்கு! ஆனால் இவன் லகமோ எங்கெங்கோ அலைஓசையில், தாரகைகளில் இயற்கையின் எழிலில், பனிக்கட்டியின் வெண்மையில், ஞ்சைபாரியின் பரிதாபவாழ்வில், ஏழையின் துயரில் சென்றது. அவளோ ஆணழகனுடன் ஆனந்தபுரியில் அரசியாக விளங்கவேண்டும் என நினைத்தாள். பள்ளம் பிரிந்தது. வேறுவழி நடக்கலாயினர்.

ஷெல்லியின் மனமும் அவளுடன் இசையவில்லை. மேரிகாட்வின் என்று ஒருத்தி இவனுக்கு பிரியமுள்ள ளானாள். அவளுடன் பாரிசுக்கு பறந்துவிட்டான். ங்கெங்கோ சுற்றிவிட்டு வறுமை அலைக்கழிக்க லண் டன் வந்தான். மனைவியையே பொருளுதவி கேட்டான். லைநாளில் அவளும் தற்கொலை புரிந்துகொண்டாள். வாழ்வே சூறுவளியாய்விட்டது. தனிமையை விரும்பி னான். அவனது கவிதைகளைப்பற்றி இங்கிலாந்துப் பத் திரிகைகளிலே கண்டனமாறி பொழிந்தது. அவனது ருத்துக்கள் கேளிக்கூத்தாக்கப்பட்டது. வீட்டிலே ரோதம், நாட்டிலே நாஸ்திகன், மனைவிக்குத் துரோக ழைத்தவன், நண்பர்களுக்கு பகைவன், உற்றார்உறவி ருக்கு வேண்டாதவன், பல்கலைக்கழகம் விரட்டிய னவன் என்ற இவ்வளவையும் தாங்கிக்கொண்டு 818, மார்ச் 11-ம் நாள் இங்கிலாந்தைத் துறந்து பான்னாடு எனப்போற்றிய இத்தாலிக்குச் சென்றான். ரும்பி இங்கிலாந்திலே அடிவைக்கவேயில்லை. ஆல்ப்ஸ் லைச்சாரலும், அழகியமாநதிகளும், அலைகடலும், ரண்யவெளிகளும் அவனுக்கு ஆனந்தபுரியாய் இருந் தது. தனிமையை நாடி தவித்தான். பைரன், கீட்ரப் போன்றோரின் நேசமும் உறவும் அவனுக்குக்கிடைத்தன டகோட்டுவதிலே, பாக்கள் புனைவதிலே தனதுகாலத் தைக் கழித்தான்.

1822 ஜூலை 7-ம் நாள் மாலைநேரம். இத்தாலியக் டற்கரை. ஷெல்லி அலைகளைக்கிழித்துக்கொண்டிருந்த டகிலே சென்றுகொண்டிருந்தான். மணி 6 இருக்கும் வானமண்டிலத்திலே கருமேகம். மேகங்கள் திரண்டன. பெரிய புயற்காற்று, கடுமழைபொழிய ஆரம்பித்தது. டலும் வானமும் கைகுலுக்கியது. பேரிடிச்சப்தம் ண்ணைப்பறிக்கும் மின்னல்! கடலிலே கலம். கலத்திலே ஷெல்லி. கலம் திண்டாடியது. கலத்திலே சூறுவளி மோதியது. படகு கவிழ்ந்தது. கடல்தனது அலைக்கரங் களால் அறிஞன் ஷெல்லியின் உடலைத் தழுவிக்கொண் டது. உயிரைக்குடித்தது. பத்துநாட்களுக்குப் பிறகு மணலோரத்தில் ஒல்லியான ஓர் சவம்கிடந்தது. அதன் சட்டைப்பையிலே இலக்கியப்புத்தகம்ஒன்று இருந்தது. டலலைகள் மணலிலே பிணத்தை இருத்திவிட்டு 'ஓ' வென்று அலறிக்கொண்டிருந்தன.

'கவிழ்ந்த படகு! காவிய உலகைக் கண்ணீர் வடிக் கச் செய்தது! ஷெல்லி மறைந்தான்—அவன் புகழ் ஆங்கில இலக்கியம் உள்ளளவும் நிலவும்!

*

## இரத்தப் போங்கல்

21-ம் பக்கத் தொடர்ச்சி

சங்கமேசுவரத்தில் இருந்த வீரரிலே பலர் ஓட்டம் பிடித்தனர். சில உண்மை வீரர்களே மன்னனைக்காக்க முன்வந்தனர். உடனே இக்லாஸ்கானை முன்பே போய் மன்னனைச்சந்திக்கச்செய்யும்படி நிஜாம் ஏவினான் ஆனால் எதுவுமே தேவையில்லையென்பது பின்னர் தெரிந்தது. ஏன்? சாம்பாஜியின் தூக்கம் இன்னுந்தான் கலையவில் லையே! கலேஷாவின் மந்திரம் எதிர்ப்படையை எரிக்கா விட்டாலும், மன்னனுக்கு மாறாத மயக்கத்தைக் கொடுக் கத் தவறவில்லை! ஷேக் அந்த மாளிகையின் அருகில் வந்துவிட்டான். எஞ்சியிருந்த மராட்டியர் எதிர்ப்பை நடத்தினர்.

இப்பொழுதுதான் சாம்பாஜி சுயநினைவடைந்து குதிரையில் ஏறித் தப்புவிக்க ஓப்பினான். குதிரையில் ஏறினான். அதற்குள் கவி கலேஷாவின் கண்ணொன்றில் அம்புபாய்ந்து விட்டது என்று கேட்டான் உடனே அவனை எடுத்துவரச் செய்து குதிரையிலே ஏற்றிக் கொண்டு இரகசிய வழியாக வெளியில் வந்தான். அரு கிலிருந்த சிவன் கோயிலினுள் நுழைந்து பண்டாரம் போல வேடமிட்டுக்கொண்டான். கவி கலேஷா பண் டார குலந்தானே—ஆகவே மந்திரிவேடத்தை கலைத்து தனது இயல்பான உருவடைந்தான்! ஆனால் இக்லாஸ் கான் அடையாளம் கண்டுபிடித்து விட்டான். ஒரு முத்துமாலை அவனைக் காட்டிக் கொடுத்து விட்டது— ஷேக்கும் அவன் படையும் வந்துவிட்டது கொஞ்ச நேரத்தில்! வெற்றிவீரன் சாம்பாஜியின் கரங்களிலே விலங்குகள்—வேதனை, வேதனை, வேதனை! கலேஷா வும் கைதியாக்கப்பட்டான். அவன் நடுங்கினான். இன் னும் சில வீரர்களும் கைது செய்யப்பட்டனர்.

கலேஷா, அந்த கானோஜ் பிராம்மணன் மன்னன் சாம்பாஜியின் மனதை தன் வயமாக்க பேய் பூதங்க ளுக்கு ஆடு, மாடுகள் வெட்டி இரத்தப் பொங்கல் நடத்தினானோ என்னவோ நமக்குத் தெரியாது. ஆனால் அவுரங்கசீப் டெல்லியில் ஒரு இரத்தப் போங்கல் நடத்த சாம்பாஜியை ஆடாக வளர்த்து வந்தான் போலும் அந்தப் புரோகித நரி! அந்தப் பொங்கலுக் குக் கடைசியில் அவனே மணந் தரும் ஏலக்காய், குங்குமப் பூவாக மாறிக்கொண்டான். ஏன்? டெல்லியில் கடைசியில் சாம்பாஜியை மராட்டிய மண்ட லத்தின் கண்களிலே அருவி ஓட, அனல் எழும்ப வெட்டி வீழ்த்தினான் முகம்மதிய மன்னன்!

மாயாசொரூபி, மந்திரவாதி, தந்திர வித்தைகளில் சிறந்தவர் என்று கூறப்பட்ட கலேஷாவுக்கும் அதே கதி கிடைத்தது! அவனுக்கு இருப்பதாகக் கூறப்பட்ட எந்த "சக்தி"யும் தடுக்கவில்லை! அவனது சதி ஒரு சாம்ராஜ்யச் சிங்கத்தைப் படுகுழியில் வீழ்த்தியது! டெல்லியில் மராட்டிய மாவீரனின் மகனுடைய இரத் தம் பொங்கி ஓடும்படிச் செய்தது!

அரும்பாடுபட்டு சிவாஜி சிருஷ்டித்த வீரமராட்டி யத்தின் வீழ்ச்சி, காஷாயமேந்திகளின் கால்டி பணிந்த தால் நேரிட்டது! புரோகிதப் படை வில், வேல், வாள் இன்றி தன் வஞ்சகத்தால் ஒரு சாம்ராஜ்யத்தையேச் சரியச் செய்தது!

வேஷத்துக்கு மண்டியிட்ட மராட்டிய மாவீரன் சாம்பாஜியின் உடல் 'டெல்லி'யில் 'இரத்தப் பொங்கல்' என, வெட்டுண்டு விழ நேர்ந்தது!

*

# இரத்தப்—பொங்கல்.

[ தில்லை. வில்லாளன் ]

"என்னைச் சுற்றிலும் சூதுக்காரர்கள் வாழ்கிறார்கள். என் சோற்றைத்தின்று கொழுத்து எனக்கே அழிவு தேடுகிறார்கள். எனது தளபதிகளிலே பலர் வஞ்சகக்காரர்கள் — பாசாங்குத்தனம் செய்கிறார்கள். பசப்பு வார்த்தைகளால் என்னை மயக்கி விடலாம் என்று பார்க்கிறார்கள். ஆம், கலேஷா சொல்வது நூற்றுக்கு நூறும் உண்மை! அவர் தெய்வப் பிறவி. இந்தச் சதிகார சண்டாளர்களிடம் பகிர்ந்தளித்துள்ள அதிகாரங்களைப் பிடுங்கிவிடவேண்டும்."

மராட்டிய மண்டல பூபதி சாம்பாஜி எண்ணப் பொறிகளிடையே இப்படி அப்படி உலவினான். கோவா படையெடுப்பில் அவன் கண்ட தோல்வி அவன் மனதைக் குழப்பியது. அவன் நெஞ்சு குமுறும் எரிமலையாகியது.

அவன் அப்படியே சிலையாக நின்றான் பல மணி நேரம் அவன் உணர்ச்சியிழந்த ஒரு பிம்பம் போல இருந்தான். ஏன்? அவனால் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. யோசித்தான்......மேலும் யோசித்தான்...... ஆலோசித்தான் மீண்டும் ஆடாமல், அசையாமல்!

"இந்த நாடு உன் கைவிரல் மோதிரம்— ஆனால் அதிகாரம் அதில் ஒளிவிடும் வைரம். ஆகவே அந்த அதிகாரப் பிரயோகத்தின் முறையும், விளைவும் உன் கண் பார்வையிலேதான் இருக்கவேண்டும்"

"உன்னைச் சுற்றிலும் பட்டுத்திரை— ஆனால் அங்கெல்லாம் எதிரிகள் கூடாரம் அடித்திருக்கிறார்கள். மறந்துவிடாதே"

"நிர்வாகத்தின் வலிவு வளரவேண்டுமானால் அந்த அதிகாரங்களை மலைபோல ஒரு இடத்தில் குவி. அதுவும் ஆண்டவத் துணையுள்ள ஒரு 'நெற்றிப்பிறவி'யிடம் ஒப்புவி. பிறகு பார்"

"அஞ்சாதே. நாட்டு மக்கள் நான்கு நாள் கஞ்சிக்கு அலையும் நாய்போலக் குலைப்பார்கள். பிறகுதானே அடங்கி விடுவார்கள். இது என் பல நாள் அனுபவத்திலேகண்டு பிடித்த பேருண்மை!"

"கலேஷா சாதாரண மனிதனல்ல சாம்ராட், மராட்டிய மண்ணுக்குப் புண்ணியம் அவன் வருகை. ......மறக்கவேண்டாம்!"

இப்படி பல நெஞ்சைக் குத்தும் ஈட்டிகள் வந்து விழுந்து கொண்டே இருந்தன.

அருகிலிருந்த அழைப்பு மணியை அடித்தான், ஒரு பணிமகன் ஓடிவந்தான்.

"அழைத்துவா கலேஷாவை......"

மண்டலாதிபதியின் கட்டளை — அந்த வேலைக்காரன் ஓடினான் அந்த வேதிய சிகாமணியை வெற்றி வேந்தன் கட்டளையைக் கூறி அழைத்துவர! சாம்பாஜி

இன்னமும் தனிமையாகவே சிந்தனை உலகத்திலே எ
ணக் கோட்டைகட்டி அழகு பார்த்துக் கொண்
ருந்தான்!

அன்றைக்கு கலேஷா தன் எண்ணத்தின்படி
வாதிகாரியானான்—பல நாள் உழைப்பின் அறுவடை
அன்று அவன் போட்ட திட்டத்திற்கு வெற்றி—சதிக்
விருந்து, சூழ்ச்சிக்குக் கொண்டாட்டம், நயவஞ்சக
துக்குக் கும்மாளம், குதூகலம்! மராட்டிய மன்ன
பெரு வீரன் சிவாஜியின் மகன், சாம்பாஜி முடிசூ
ஏற்பட்ட தடைகளையெல்லாம் இரத்த வெள்ளத்தி
மிதக்கவிடத் திட்டம் சொல்லிக் கொடுத்தவன் அவ
பிறகு மராட்டிய மாவீரர்களிடம் நம்பிக்கையிழக்க
செய்ததும் அவன். இப்பொழுது சர்வ அதிகாரங்
ளும் அவன் கையில்—அவன் விரல் ஆடியபடி வீ
மரபு ஆடவேண்டும். அவன் குரல் கேட்டு அந்த ம
காப் புகழ் படைத்த மராட்டிய மண்டலம் பா
வேண்டும்!

கலேஷா—ஆ, இப்பொழுது சாதாரண க
ஷாவா என்ன......கவி கலேஷா! வேதவிற்பன்ன
என்று பொருள்தரும் சந்தகோமாத்யா என்ற பட்ட
வேறு! அவன் பெ
டுமோ வாலாக ஒட்ட
பட்டு விட்டதே! ஆ
லும் அவன் பழை
கதையை அவன்மறந்
விட முனைந்தாலு
அவனது மனச்சாட்
'கதா காலட்சேப
செய்துகொண்டே இரு
தது!

......ஒருநாள் நி
சென்று நள்ளிரவி
தடதட வென கதவை
தட்டினார்கள். கலேஷ
கதவைத் திறந்தா
இரு வீரர்கள் தங்களைப் பதுக்கிவைக்கவேண்டு
என்று கேட்டபடியே உள்ளே நுழைந்
விட்டார்கள். விடிந்த பிறகுதான் அவர்கள் டெல்லி
லிருந்து தப்பிவரும் முகம்மதிய மதச்சமட்டி யென்
ஆரிய மதத்தவருக்குள் அறிமுகமான சிவாஜியு
அவன் மகன் சாம்பாஜியும் என்று தெரிந்துகொ
டான். ஆகவே ஓடோடியும் உபசரித்தான். ப
விடைகள் செய்ய முன்வந்தான். ஆனால் அவர்க
அவனுக்கு அதிக மரியாதைகள் காட்டினர். ஏன
அவன் பிராமணன்—அதுவும் வடக்கத்தியபிராமண
தென்னாட்டிலிருந்து யாத்திரை சென்று அங்கே
தங்கிவிட்டவர்கள் அவனது மூதாதையர். அங்
புரோகிதத் தொழில் அவர்களுக்கு அவர்க
பிரிவிற்குப் பெயர் கலேஷாதான்!

சிறிது நாட்கள் அங்கு சிவாஜி வந்த பிற
சாம்பாஜி தங்கியிருந்தான். கலேஷாவின் ஒரே ம
........அன்பு வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்தா
பிறகே தென்னாடு வந்தான். வந்த வுடனேயே மு
நாடிச் சண்டைபோட வேண்டிவந்து விட்டது. க
ஷாவையும் வரவழைத்துக் கொண்டான். முடி சூ

..., கலேஷாவிடம் கொண்ட அன்பும், மதிப்பும் ...றவில்லை. கலேஷா குருவானான்—சாம்பாஜி சிட ...ன்! பர்ணகசாலையிடம் பணிந்துவிட்டது அரண் ...—செங்கோல் ஜெபமாலையிடம் அடங்கிவிட்டது— ...த்தோலாசனம் சிங்காதனத்தைத் தன் பக்கம் ...ழுத்துக் கொண்டது!

கலேஷா திட்டம் போட்டபடியே தனது மாளிகை ...க்கி நடந்தான். அதிகாரம் கிடைத்துவிட்டது ......ஆனால் அரசனின் குறுக்கீடும் கூடாதே! ...தற்கு வழி என்னவென்று எண்ணினான்.

நச்சுக்கிண்ணம்...அவன் கண்களின் முன்னே! ...முடியாது, கூடாது! அவன் சாவு அவனுக்கும் 'எம ...யம்'தான்! சாம்பாஜி உயிரோடு இருக்கவேண்டும். ...ல் தன் நடவடிக்கைகளில் கண் காணிப்பு செய்யக் ...ாது அவன் யோசித்தான், அவன் மனத்திரையில் ...க்கிண்ணம் வந்தது......கஞ்சா......அபின் உருண் ...கள்......பிறகு, பிறகு......அழகுப் பதுமைகள்... ...கலேஷாவின் முகம் ஒளிவிட்டது. அவன் கண்களில் ...ிப்புக் கூத்தாடிற்று!

ஆனால்.........

...நாட்டு மக்கள் இந்த கானோஜ் பிராமணனைப்பற்றி ...ன எண்ணினார்கள்?......ஆத்திரத்தால் பொங்கி ...கள்—இவனது வேடம் அவர்களுக்கு நன்றாகப் ...ந்துவிட்டது என்றே சொல்லவேண்டும்! அவன் ... திறமையில்லாதவன் என்று கருதினார்கள். நிர்வா ...திற்கும் அவனுக்கும் நெடுநாள் பகையென்றே ...ண்ணினார்கள். அது மட்டுமா? பூசை வேலை செய்ய ...ண்டிய இந்தப் பூசுரனுக்கு நிர்வாக வேலை என்ன ...ரியும்? தருப்பையும் கையுமாக ஆற்றங்கரையில் ...க்கவேண்டிய ஆள் அதிகாரக் கோலேந்தி அரண் ...யில் ஆற்றப்போகும் செயல் என்ன? அப்படியே ...இருக்கட்டும் இதற்கு வடநாட்டுக்காரன்தான் வர ...ண்டுமா? கானோஜ் வேதியனைவிட புரந்தர் புரோகி ... மட்டமானவனாக இருக்கமாட்டான்! இப்படி ...ல்லாம் மராட்டிய மக்கள் அவனைப்பற்றி 'அர்ச்சனை' ...ய்தவண்ணமிருந்தனர். அவனுக்கு நிரந்தர எதிர்ப்பு ...ளர்ந்து, வளர்ந்து கொண்டிருந்தது.

"அவன் ஒரு சூன்யக்காரன்......வசிய மருந்தால் ...ால் வெல்ல முடியாததையும் வென்று விடுவான்!"

"மந்திர தந்திரங்களால் மன்னனின் மதியை ...ட்சியடையச் செய்துவிட்டான். அவன் பயங்கர ...கிரவாதி!"

"கலேஷா ஒரு பெரிய ஜாலக்காரன்......பேய், ...ங்களெல்லாம் அவன் சொற்படி கேட்குமாம். ...ன் அவைகளுக்கு வாரத்திலே ஒரு நாள் ஆடு ...டுகளை வெட்டி, ஆம், ஓம், அது, இது என்று கூவி ...வைகளுக்கு இரத்தப் பொங்கல் செய்து போடுகின் ...றும்! ஐயோ என்ன பயங்கரம்........",

இப்படியும் மக்கள் பேசினர்.

கலேஷாவுக்கு இவையெல்லாம் தெரியும். ஆனால் ...வைகளைப் பற்றிய கவலை துளியும் இல்லை அவனுக்கு! ...னன் சாம்பாஜியின் மகத்தான ஆதரவு இருக்கும் ...ழுது இந்த மக்களின் எதிர்ப்பு என்ன செய்யும் ...ற இருமாப்பு—அவன், தலையிருக்க வாலாடி என்ன ...ன் என்று கேலி பேசினான் மராட்டிய மக்களைப் ...த்து!

கலேஷா வடநாட்டான்—தென்னாட்டு தட்ப வெப்பம் அவனுக்கு ஒத்து வருவதில்லை. அதற்காக தொலைதூரங்களில் இருக்கவும் மனமில்லை. ஆகவே ரேய்காட் நகருக்கு அருகிலேயே சங்கமேசுவரம் என்ற இடத்தில் ஒரு அழகு மாளிகைக் கட்டிக்கொண்டான். சுற்றிலும் மலர்க் காடுகளை உண்டாக்கி அதனை ஒரு மன்மத புரியாக்கினான், மன்னனுக்குஅதனைக் கோடைக் கால இன்பமாளிகையாகத் தந்துவந்தான். தலைநகருக்குத் திரும்பவே மனமில்லை இந்த வேதியகுல மந்திரிக்கு—ஆகவே அவன் மன்னன் அந்தப்புரத்திற்கு நாளைக்கொரு அழகு தேவதையாக அனுப்பிக்கொண்டே இருந்தான். மதுமலர்கள் கசங்கிக் கொண்டே இருந்தன—மதக்குடங்கள் காலியாகிக்கொண்டே இருந்தன. மன்னன் நாட்டை மறந்தான். அவனது கடமைகளை காற்றிலே பறக்கவிட்டான். படைகள் தாமே கலைந்துவிடும் நிலைமைக்கு வந்துவிட்டன. அவன், பஞ்சணையே போதும், பாவையரின் இதழ்ச் சுகமே போதும், அவர்கள் பரிந்தளிக்கும் மதுர பானத்தின் சுவையே போதும்......என்று 'போதும்' கவிதை பாடினான்.

கட்டிலிலே அலங்கோலமாக சாம்பாஜி படுத்துக் கிடந்தான். பக்கத்திலே ஒரு 'புதுமலர்' தேனிழந்து வாடிக் கிடந்தது! ஒரு காவலாளி வழக்கத்திற்கு மாறாக உள்ளேயே வந்துவிட்டான். அவன் நெஞ்சு படபடத்தது. அவன் அவசர அவசரமாக வார்த்தைகளைக் கொட்டினான்.

"சாம்ராட்......ஆபத்து, ஆபத்து முகலாயப் படையொன்று வந்து கொண்டிருக்கிறது. எழுந்திருங்கள்...தலைநகருக்குத் தப்பிச் செல்லுங்கள்"

சாம்பாஜி கண்களைத் திறந்தான். அவனது விழி வட்டத்திலே அவன் போதை நிலை நன்றாகத் தெரிந்தது. இரவாடிய கூத்தின் விளைவினால் ஏற்பட்ட களைப்பும் புலப்பட்டது.

"போடா......கழுதை.........வெறிநாய் மாதிரி குலைக்காதே. நம்ம கவி கலேஷா யார் தெரியுமாடா... பெரிய மாயாவி...அவர் ஒரு மந்திரத்தைச் செபித்தால் வரும்படை அப்படியே செத்து மடிந்து சாம்பலாகிவிடும்...ஓடடா, ஓடு"

போதையிலே உளறினான் மராட்டியத்தின் 'ஆவி'!

"மன்னிக்கவேண்டும் மகாராஜ்! நிலைமை மிகவும் பயங்கரமான நெருக்கடியில் உள்ளது. ஆகவே புறப்படுங்கள்...வருவது குதிரைப்படை...மிக விரைவில் வந்து விடுவார்கள்!" மற்றொரு வீரன் கூறினான் இப்படி.

"சீ...முண்டங்களா...ஒரு நாய் கூட இனி இங்கு நிற்கக் கூடாது. எவனாவது நின்றால் அவனவன் மூக்கைக் கடித்து விடுவேன்!"

அந்தோ...புரோகித பரம்பரை, சிங்கத்தை இப்படிச் சிற்றெறும்பாக்கிவிட்டதே! சாம்பாஜியா பேசுகிறான் இப்படி...ஆமாம் ஆரிய நஞ்சு அப்படி அவனை மாற்றி விட்டது! கலேஷா கையாண்ட மயக்க வித்தைகள்—மது, மாது! அவை இரண்டும் செய்த வேலை இது, என்று அலறினர் வீரர்கள்!

வெளியில்—?

ஷேக் நிஜாம் முகலாயப் படைக்குத் தலைமையேற்று காற்றினும் வேகமாக முன்னேறி வந்தான்.

19-ம் பக்கம் பார்க்க

முடியுமா? என்று கேட்டான்!

முடியாதா! என்று கதறினன்!

—முடிவு—

அவன், இருளை விலக்கிய.........

# ஒரு விடிவெள்ளி

**பொ**ங்கல் நாள். உள்ளத்திலே மகிழ்வும், புதுக் களிப்பும் கூத்தாடுகிறது! உழவர் மனைகளிலே அழகும் அவர்கள் உள்ளங்களிலே குதூகலமும் நிறைந்து கிடக்கும்!! இன்று நிறைந்து நிற்கும் இன்பம் என்றுமே எல்லோர் வாழ்விலும் நிறைந்து விட்டால்......?

முடியுமா?—இதயக் குமுறல்களிடையே இக் கேள்வி, வெடிக்கிறது, வேதனைகளைத் தாங்கிக்கொண்டு!

கிராமங்கள், நாட்டின் செல்வம்—நமது வாழ்வின் களஞ்சியம். ஆனால் அவைகளின் நிலை, அங்குள்ள மக்களின் நிலைமை — வர்ணிக்க முடியாத சோகக் காட்சிகள்!

எண்ணெய் இல்லாத தலை, துணி போர்த்தாத உடல், மெலிந்து—நலிந்த உடம்பு—அதோ, ஏழையின் பிம்பமாக வரும் விவசாயி!

பக்கத்தில், கையில் கூடை, காலில் சேறு, களத்திலிருந்து திரும்பும் சோர்வுடன், கொளுத்தும் வெய்யிலை மறைக்கவும் துணியில்லாது ஒடிந்துவிழும் குச்சி போல் வரும் அவன் மனைவி!

சிறு குடிசை—ஒருபுறம் ஆடுமாடு, இன்னொரு புறம் சாணியும் புழுதியும் நிரம்பிய குப்பை. அதைக் கிளறிக்கொண்டிருக்கும் கோழிகள் — அவைகளுடன் பிறந்த மேனியராய் விளையாடிக்கொண்டிருக்கும் குழந்தைகள்!

அங்கு ஆரம்பமாக வேண்டும் இன்பம்—அன்றே புதுவாழ்வு பொங்கும் நாள்! அந்நாள் வர, ஏழை விவசாயியின் பரம்பரைச் சொத்துக்களாயிருக்கும் பழைமையும் வைதீகமும் முறியடிக்கப்பட வேண்டும்!

அறிவு பாழாகும் வயல்களாயிருக்கும் மூட நம்பிக்கையும், 'முன்னோர்கள்' பக்தியும் விரட்டப்பட வேண்டும்!

விளையாடிக் கொண்டிருக்கின்றனவே, கோழிகளுடன், குப்பை மேட்டில்—கொளுத்தும் வெய்யிலையும் கருதாமல் அந்தக் குழந்தைகள்—இந்நாட்டின் எதிர்காலம்—வாழ்வில் அறிவு எழும்பவேண்டும்! கல்வி மணம் பரவவேண்டும்! வீட்டுக்கொரு விஞ்ஞானி எழும்ப வேண்டும்!

முடியுமா? — மீண்டும், உள்ளத்தைப் பிறிக் கொண்டு வெடிக்கிறது இக்கேள்வி!

* * *

முடியுமா?—இதே கேள்விதான் அவனது உள்ளத்திலும் எழும்பியது!

சுற்று முற்றும் பார்த்தான்—துயரமயமான ம... கள், தூசு படிந்த தெருக்கள், வேதனை விளையாடி... கொண்டிருந்த வீதிகள், கஞ்சிக் கலயத்துடன் அல... வரும் பெண்கள், துள்ளித்திரிய வழியில்லாது தோ... ஒட்டிக் கிடந்த குழந்தைகள்—அவன் கண்ணி... பட்டன!

ஒரு பெருமூச்சு, அவன் இதயத்திலிருந்து எழு... பியது—இது எனது நாடா? இதுவா எனது மக்க... நிலை? என்று அலறினன், அழுதான்! எப்போது, திரு... தும் இச்சமுதாயம் என்று ஆத்திரம் தீரக் கத்தின... அப்போதும் அவன் ஆவேசம் அடங்கிய பாடில்லை.

எதிரேயிருந்த வெள்ளைக் கடலை எட்டிய மட்டு... பார்த்தான், பார்த்துக் கொண்டேயிருந்தான்.

அவன் இதயத்திலிருந்து ஒரு எண்ணம் மின்... யது. பரந்து கிடக்கும், இந்த நீர்ப்பரப்பைப் போ... எனது நம்பிக்கையும் விரிந்தால்...?

ஏன், முடியாது—மீண்டும், அவன் இதயத்... லிருந்து, இக்கேள்வி, சிறிது மகிழ்ச்சியுடன் கிள... பியது. எழுந்து நின்றான், அவன் எண்ணங்கள் இற... கைக் கட்டிக்கொண்டுப் பறந்தன.

என் நாட்டை விஞ்ஞானிகளின் சோலையாக்... வேன், என் பூமியை 'இன்பப்பிரதேசமாக்குவேன், எ... கும் அறிவு மணம் கமழச் செய்வேன்! என் தொண்... என் சேவை இதற்குத்தான்! இங்கு நியூட்டன்களையு... பிளேட்டோக்களையும் சிருஷ்டித்து உலவ விடுவே... இதுவே என் இலட்சியம்! என் வாழ்க்கைப் ப... என்று மீண்டும், ஒருமுறை, ஆவேசமுடன் கத்தின...

அப்போதும், அவன் உணர்ச்சிவேகம் தணி... வில்லை! எதிரே, மோதி முழக்கமிட்டுக் கொண்டிருந்... கடலலைகளுடன் போட்டியிடுவது போல, கத்தி... கொண்டே இருந்தான்!

கடலலைகளைக் கண்டு, தன கனவை, ஆத்திர... மாக்கிக் கூச்சல் எழுப்பிக்கொண்டிருந்த அவன... ஆசை—முடியுமா என்று கேள்வி—முற்றுப்பெற ... டத்தட்ட இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேல் பிடித்த...

அவன் எண்ணியதெல்லாம், தன்னாட்டில் நில... பழைமையும், மூடநம்பிக்கையும் விலக்கப்படவேண்டு... மக்கள் வாழ்வில் தன்னம்பிக்கை மலரவேண்டு... தொல்லையில்லாத வாழ்வு ஏற்படவேண்டும்—அப்ப... பட்ட சமுதாயம் அமையவேண்டும் என்பதுதா... அவனது, அந்த ஓயா ஆசை முற்றுப்பெற இரு... ஆண்டுகள் ஆயின! எண்ணற்ற நிகழ்ச்சிகள், இர...

ந்தப்பட்ட போராட்டங்கள், தொல்லைகள் ஆகியவை னுக்குப் பின்னரே அவனது ஆசை—தன் சமுதாயம் ஞானபுரியாக வேண்டும் என்ற விருப்பம்—வாயிற்று!

X X X

"யாரப்பா, நீ"

"நான்........"

"என்ன, இழுக்கிறே, எந்த ஊர்?

ஏன், இங்கே வந்தே!......"

"படிக்க வந்தேனுங்க..."

"படிக்க வந்தாராமில்லே இவுரு படிக்க! இவுருக் கத்தானே காலேஜ் கட்டி வச்சிருக்கு போடா! ம்...போடான்னா போடா!"

ஆசையுடன் நுழைகிறான் ஒரு கல்லூரியில், யாரோ படிக்கிறார்களே, புத்தகத்தைச் சுமந்து காண்டு புன்சிரிப்புடன் செல்கிறார்களே, நாமும் ன் அங்கு செல்லக்கூடாது என்ற ஆசை துடிக்க!

ஆனால், அவனைக் கண்டதுமோ கல்லூரித் தலை ர், கண்டிக்கிறார், வராதே போடா என்று விரட்டு றார். இலாயக்கில்ல தவன், கல்லூரியில் சேர்வதற்கு குதியில்லாதவன், கல்வி பெறாதவன், காட்டுமிராண்டி ன்பதல்ல அவனை அவர் விரட்டியடித்தமைக்குக் ரணம். அவன் ஒரு விவசாயியின் மகன்! எனவே, வனுக்கு அங்கு இடமில்லை!!

இன்று இன்ப புரியாக இருக்கும் ரஷ்யாவிலே—ருபோது நடந்த சம்பவம் இது. விவசாயியின் மகன், லூரிப் படிப்பைக் கருதுவது ஏளனம் என்று தப்பட்டது. எதற்கு அவர்களுக்கு இந்தப் ப்பு! சீமான் வீட்டுக் குழந்தையா, உத்தியோகஸ்த ன் மகனா, இவனுண்டு இவன் கலப்பையுண்டு என்று டக்க வேண்டியதுதானே, ஏனிந்த பேராசை! என்று ற்றப்பட்டது, யாராவது ஒரு விவசாயி தன் மகனும் லூரியில் சேர்ந்து பட்டம் பெறவேண்டும், படித்து னுக்கு வரவேண்டும் என்று கருதினால்!

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் ரஷ்யாவிலே ருந்த நிலை இது. கல்வி நீரோடை, மாளிகை வாசிக டையதே தவிர, கல்லும் முள்ளும் வெட்டி கழனி ருத்திப் பாடுபடும் விவசாயி நெருங்க முடியாததாக ருந்த நேரம்.

* * *

லோமாஞஸோவ் — ஒரு ஏழை விவசாயியின் ன், உழைத்து உருக்குலையும் ஒருவனுக்குப் பிறந்த ழந்தை. எனவே, கல்வி மாளிகையை எப்படி எட் பிடிக்க முடியும்! இருந்தும், எழுத்துக்களைக் டி எடுத்ததைப் படிக்கக் கற்றுக்கொண்டான்! தா கோவில் நூல்களைப் பார்ப்பது, அவைகளின் ழுத்துக்களைக் கூட்டுவது, படிப்பது என்று தனது யற்சி மூலம் எழுதப் படிக்கத் தெரிந்துகொண்டான்.

படிக்கவேண்டும் என்ற வேட்கை, அவனை அத் ன் விட்டுவிடவில்லை, போதுமென்ற மனமே பொன் ய்யும் மருந்து என்று அந்த ஏழையின் இதயத்தில் எழும்பவில்லை! இன்னும் என்ன இருக்கிறது, எங்கே இருக்கிறது, எப்படி அவைகளைக் காண்பது, என்ற ஆவலும் ஆசையும் அவனை நெரிக்க ஆரம்பித்தன. கல்லூரிகளுக்குச் சென்று திரும்பும் தன்னொத்த இளைஞர்களைக் காண்பான்! ஏன், நான் இவர்களைப் போல அங்கு செல்லக்கூடாது என்ற எண்ணம் எழும்பும்! 'என்ன செய்துவிட்டேன், ஏன் நான் மட்டும் போகக்கூடாதாம்!' என்று சிந்திப்பான்—இதன் முடிவு அவனை, அங்கு செல்வது, எப்படியாவது சேருவது என்று தூண்டியது. உள்ளூரிலுள்ள கல்லூரிக்குச் சென்றால் இவன் 'உண்மை' புரிந்துவிடுமே என்ற நினைவு கவனத்துக்கு வந்தது! சரி, இங்கில்லாவிட்டால் என்ன என்று கூறிக்கொண்டு தனது சொந்தஊர் விட்டு புறப்பட்டான், நடந்தான் மாஸ்கோ நோக்கி! கால்நடையாகவே நடந்து மாஸ்கோ நகரடைந்த லொமானு ஸோவ் மாஸ்கோவிலிருந்த கல்லூரி யொன்றில் சேர்ந்தான்—விவசாயியின் மகனாக அல்ல—அந்த நிலையை மறைத்துக்கொண்டு சீமான் வீட்டுப் பையனாக தன்னை மாற்றிக்கொண்டு! நடித்துக்கொண்டு!!

* * *

இவ்வளவு வேதனையுடன், கல்வி கற்ற லொமானு ஸோவின் உள்ளத்திலதான் 'முடியுமா'! என்ற கேள்வி பிறந்தது—தனது குடிசைகள் நிரம்பிய கிராமத்தையும் கோவணாண்டிகளாய்த் திரியும் விவசாயிகளையும் கண்ட பொழுது!

இவர்கள் வாழ்வு வளமாகுமா, அதோ நான் குழந்தைப் பருவத்தில் கோழிகளுடன் விளையாடித் திரிந்ததைப்போல கவலையற்றுக் 'கத்தியும் தத்தி'யும் ஓடும் ஏழ்மைக் குழந்தைகள் இன்ப வாழ்வு பெறுமா, என்னைப்போல் படித்துப் பட்டம் பெற்று அறிவின் வாசலை அடையுமா, உலக வரலாற்றை உண்மையுரைகளை புழுதியும் புகைச்சலும் போட்டியிட்டுக் கிடக்கும் குடிசை வாசிகளின் குழந்தைகள் அறிய வாய்ப்புக் கிடைக்குமா, இது நடக்குமா, முடியுமா, என்று நினைத்தான், கதறினான், துடித்தது இதயம், வெடித்தது வேதனை. தான் கல்வி கற்கப்பட்ட கஷ்டநஷ்டங்கள் ஓடி வந்தன-மின்னி மின்னி மறைந்தன! விவசாயியின்மகன் என்றதும் "போடா, படிக்க இங்கு இடமில்லை" என்று விரட்டியடித்ததும், தான் மாறுவேஷம்பூண்டு கல்லூரி சென்று கலைகள் அறிந்ததுமான எண்ணங்கள் அவன் இதயத்தைப்பிளந்தன! நாட்டின் நிலையையெண்ணி நடுங்கினான், இவ்வளவு மோசமான சமுதாயத்தை எப்படி தூய்மையாக்கமுடியும் என்று நினைத்தான். வேதனையுடன் சோகமும் கவலையும் போட்டிபோட ஆரம்பித்தது கடல்அலைகளைக்கண்டு கதறித்தன் ஆத்திரத்தை அடக்க முயற்சித்தபொழுது விரிந்த பரந்துகிடந்த கடல் அவன் உள்ளத்திலே நம்பிக்கையையூட்டியது. இவ்வளவுபெரிய சமுத்திரத்தையே, கப்பல் கடக்கும்பொழுது......... ......? கேள்வி மீண்டும் தலைதூக்கியது, 'முடியுமா?' —பதில் இடியென எதிரொலித்தது, 'ஏன் முடியாது?' பார்க்கிறேன், என்னால் முடிந்தமட்டும் பார்க்கிறேன், என்வாழ்வே ஒடிந்துநொறுங்கி சுக்குநூறானாலும் விட மாட்டேன்! உழைப்பேன்!! ஊர், சீர்பெறப் பாடுவேன்! என்று கர்ச்சனை எழுப்பினான்!

* * *

"வைத்தியக் கல்லூரிக்குப் போகவேண்டுமா? சரி, சம்ஸ்கிருதம் படித்திருக்கிறாயா!"

"சட்டக்கல்லூரியில் சேர ஆசைப்படுகிறாய்! சேரு ஆனால் ஒன்று. உனக்கு சம்ஸ்கிருதம் தெரியுமா!"

இதுபோன்றநிலை, இங்கு, நமது மாகாணத்தில் ஏற்படவேண்டுமென்று கூறப்படுகிறதல்லவா இப்போதும் ஒருசாரால், சம்ஸ்கிருதமொழிதான், வைத்தியசட்டப் படிப்புகளுக்கான வழிகாட்டி என்ற காரணங்களுடன்! இதேபோல ரஷ்யாவிலும் லத்தீன் கற்றவர்மட்டுமே விஞ்ஞானக் கல்லூரி செல்லமுடியும், ஆராய்ச்சிப் படிப்புகளைப்படிக்க அனுமதிக்கப்படுவர் என்ற நியதி இருந்தது!

சம்ஸ்கிருதம்—சட்டவைத்திய படிப்பிற்குமுக்கியமானது என்றுகாரணமோ, விளக்கமோ எதுவும் கூறப்படாமல் இந்த கூச்சல் போடப்படுவதுபோல, அன்று, அங்கு 'லத்தீன்' ஒருசாராரால் வலியுறுத்தப்பட்டது. அது கற்றவனே, கல்விமான், கரைகண்டவன், என்ற எண்ணம் சிருஷ்டிக்கப்பட்டிருந்தது சீமான்களாலும் பூமான்களாலும்! தாய்மொழி கற்கவேத்திண்டாடும் ஏழை விவசாயியும், இடுப்பொடியும் தொழிலாளியும் "லத்தீன்" எங்கே கற்கப்போகிறான்! அவனுக்கு நேரமோ அல்லது பணமோதான் ஏது! எனவே பணவருவாய் தரும் 'படிப்புகளை'த் தங்கள் ஏகபோகச்சுரண்டல் வழியாக என்றும் நீடிக்கச்செய்யும் நினைப்புடன் 'ரஷ்ய ஆதிக்கவர்க்கம்' இந்த நிபந்தனை போட்டிருந்தது! லத்தீன் படித்தவன்தான் விஞ்ஞானி, விஷயமறிந்தவன் என்று கருதப்பட்டான்; லத்தீன் படிக்கவிரும்பி கல்லூரிகளுக்குச் சென்றாலோ சீமான்வீட்டுமகன் என்ற சின்னம் இருந்தாலொழிய அனுமதி கிடையாது! இந்நிலையில் ஏழை எப்படி கல்வி மாளிகையைக் காண முடியும்!

விசித்திரமும் வேதனையும் விளையாடிய இந்நேரத்தில்தான் லொமனோஸாவ் தன்னை சீமான்மகன் என ஆக்கிக்கொண்டு கல்லூரிசேர்ந்து, கலைகள் பயின்றான். அவனது ஆசையும் ஆர்வமும் அவனை சிறந்தவொரு விஞ்ஞானியாக்கிற்று! கணிதம், தத்துவம், பௌதிகம், ரசாயனம் ஆகிய ஒவ்வொரு துறையிலும் பாண்டியத்யமும் பலர் பாராட்டக்கூடிய பெருமதிப்பும் பெற்றான்!

பேரும் புகழும் பெற்ற லொமனோஸோவ்—அவைகளைத் தன்ஆட்டக்காயாக வைத்துக்கொண்டு நாகரிகத் தோல் போர்த்தி உலவுபவர்களைப்போல தன் சுய வாழ்வை வளமாக்கிக்கொள்ள நினைக்கவில்லை! மக்களை——தன் கிராமத்தாரை—கோழிகளுடன் கோழியாய் நிற்கும் குழந்தைகள் கூட்டத்தை மனத்திரையில் கண்டான், விம்மினான், கதறினான், முடியுமா என்று கேட்டான்! "முயல்வேன்" என்று முழக்கமிட்டான்!!

* * *

அந்த முழக்கத்தின் விளைவுதான், ரஷ்யாவிலே விஞ்ஞானத்தின் வித்து தாய்மொழி என்ற பூமியிலே ஊன்றப்பட்டது. விஞ்ஞானத் தந்தை என்று மக்கள் அவனுக்குமகுடம் சூட்டினர், மகிழ்ந்தனர் அவன்பெயரைச்சொல்லி! தனது தாய்மொழியிலே, ரஷ்யமொழியிலே, விஞ்ஞான நூல்களை எழுதினான். லத்தீனை, விஞ்ஞானமொழி என்று விதண்டாவாதமும், வீண் பெருமையும் கொண்டு கிடந்த 'ஏதேச்சபுரி'யினரின் எண்ணத்தைத் தரைமட்டமாக்கினான்! மக்களுக்கா வல்லவா இவைகளிருக்கின்றன! மக்களறிய முடியா மாபெரும் கலைகள் ஏன், இங்கு என்று கேட்டான் ரஷ்ய மொழியில் விஞ்ஞான நூல்களை மொழிபெயர் தான்—புதுப்பித்தான்! எனவேதான் யாரும் செய்யா ததைச் செய்து, விஞ்ஞானம் வீட்டிலெல்லாம் பர வேண்டும் என்ற விழைவுடன் தாய் மொழியில் நூ களைச் செய்த, செய்கையால் மக்கள் அவனை விஞ்ஞான தந்தை என்றழைத்தனர்!

வீட்டுக்கொரு விஞ்ஞானிகள்வெளியாகவேண்டும் கிராமங்களிலிருந்து வரவேண்டும் சிந்தனைச்சிற்பிகள்— கிராமங்கள் கவனிப்பாரற்றக்களஞ்சியங்களாகயிருக்கின் றன. இந்நிலைமாறவேண்டும் — என்று அன்று அவன் எழுப்பிய ஆவேசக்குரல் காற்றுக்கூச்சலாகிவிடவில்லை

நாடெங்கும் பள்ளிகளை நிறுவினான், பொதுமக்க படிக்க, அறிவுபெற, அவர்களும் வாழும்வகை அறிந்துகொள்ள!

லோமானுஸாவ் நாட்டின் கருவூலம்
நமது பல்கலைக் கழகம்
நற்கலை பரப்பிய நல்லோன்
சீரிய செயல்புரிந்த சிந்தனையாளன்.

என்று ரஷ்யக்கவிஞர் புஷ்கின், இவனைப்பற்றி புகழ்ந் பாடியுள்ளார்! உண்மையில், ரஷ்யாவில்முதல் பல்கலை கழகத்தை நிறுவியது லொமனோஸோவ்தான்! ஏழையின் வயிற்றில்பிறந்து கிராமப்புழுதியில் விளையாடித்திரிந் இக்கட்டுகளிடையே கல்விபெற்று, பாசாங்குகளினூடே பட்டம் பெற்று விஞ்ஞானத்தந்தையென்ற விருதையு "பல்கலைக் கழகம்" என்ற பாராட்டுப் பெயரையு கொண்ட லொமனோஸோவ் 1711-ல் ஆர்கேஞ்சல் மாக ணத்தைச்சேர்ந்த தேனிஸோவ்கா (இப்போது லொ னோஸொவா) என்ற கிராமத்தில் பிறந்தவன்.

தான் பிறந்த கிராமத்தையும், அங்கு விளையாடு ஏழ்மையையும் கண்டு கதறி, அழுது, முடியாதா இங் அறிவு மணம் கமழச்செய்ய என்று முழக்கமிட் "சாதிப்பேன்!" என்று வெள்ளைக்கடலை நோக்கி சபத செய்த லொமனோஸோவ் விஞ்ஞானத்தின் பலதுறைக லும்,பலஅரும்பெரும்ஆராய்ச்சிகளைச்செய்தான்;புதி புதிதாக அவன்பலபேருண்மைகளைக்கண்டு பிடித்தா அவைகளை மக்களிடம் சொன்னான், புறவெனப்பறந் சென்று நாடெங்கும் பரப்பினான்! பௌதிகம், ரசா னம், வானநிலை, ஆகியவைகளில் மட்டுமல்ல இவன் அ வும் செயலும் பரிமளித்தது—கடலலைகளைக் கண் இவைகளை மனிதன் கடக்கும் பொழுது, ஏன் நா மக்கள் மன்றத்தில் நிலவும் ஏழ்மை, பழமையென் கடலை, கடமையென்கிற கப்பல்கொண்டு கடக்கக்கூடா என்று கேட்டானல்லவா, ஒரு நாள்! அதைப் போல கடல்யாத்திரையிலும் இறங்கினான் — ரஷ்யாவி ருந்து ஆர்க்டிக் மகாசமுத்திரத்தைக் கடந்து அ ரிக்காவுக்குச் செல்லவழிகண்ட பெருமையும் இவ டையதுதான்.

X X

இருநூறு ஆண்டுகளுக்குமுன் அவன் கண் கனவு இன்று நனவாயிற்று! ரஷ்யா—இன்று விஞ்ஞ

(26-ம் பக்கம் பாக்க)

# ★ பெண்கள் – பேசும் புறாக்கள்! ★

ஒரு வார்த்தை சொன்னாள், சிறினர், இவள்
ங்கேயிருந்து முளைத்தாள் என்றனர், குட்டிச் சுவ
கப் போகிறது நாடு என்று கூறினர், "இந்தக் குட்டி
ளைப் பாருங்களேன்" என்றனர், "உரிமையாம் உரிமை.
துகளுக்கென்ன தெரியுமாம்" என்று கண்டித்தனர்!

"கெட்டுப் போகாதே, அம்மா, அந்தக் கேடு கெட்
வளின் பேச்சைக் கேட்டுக்கொண்டு பெரியவர்கள்
சால்லைக் கேள்! பெண்ணாக பிறந்துவிட்டாய்,
புதுமை கொள்ளாதே. நம்பவந்த வழி இது என்று
ண்ணி நல்லவளாக நடந்துகொள்" என்று பல்விழுந்து
பான தாத்தா பேத்திக்கு உபதேசம் கூறுவார்!

"ஏன் தாத்தா, அடுத்த வீட்டுக்காரர் புதிதாகக்
யாணம் செய்துகொண்டாராமே!" என்று பேத்தி
கட்பாள், "பாவம், அவன்தான் என்ன செய்வான்.
வனுக்கு வாய்த்தது அடங்காப் பிடாரியாம் கோலா
லம் செய்கிறதாம். ஆகவே அவள் வேண்டாமென்று
திதாக இப்போது இரண்டாவது தாரம் கல்யாணம்
சய்துகொண்டிருக்கிறான்"

"அது சரி தாத்தா! அவள் புருஷன், நாடோடி
க இருந்து அவளுக்கு நல்லது செய்யாதவனாக இருந்
ல் அவள் விவாக ரத்து செய்துகொள்ளலாமா?"

"அது எப்படியம்மா முடியும்? கணவன் தான்
வாகரத்து செய்துகொள்ள முடியும். அதுதான்
டம் பரம்பரை முறை.

பெண்ணும் ஆணும் ஒன்றா? பெண்களின்
மை ஆண்களுக்கு அடங்கிக் கிடப்பதுதான்—கண
் ஒழுங்கானவனாகக் கிடைக்காவிட்டால் அது அவள்
லை விதி! அதை நினைத்துக்கொண்டு அவள் காலந்
ள வேண்டியதுதான்!"

தாத்தா பதில் பேத்திக்குப் பிடிக்காது, கேள்வி
ழும்பும், தாத்தா திணறுவார்! முடிவு, முதலில் நாம்
றிப்பிட்டது போல 'அந்தச் சிறுக்கி சந்தோசா வுடன்
ர்ந்து கெட்டுப்போகாதே, அம்மா!' என்ற முகாரி
டன் இருக்கும்.

X X X

சந்தோசா — இந்தப் பெயர் அங்குள்ள பெண்
ின் இதய கீதமாகும். நெடு நாட்களாக, நிலவிவந்த
ராமங்களை, பெண்ணடிமையை, சம்பிரதாயத்தை,
ழமையை எதிர்த்துப் போராடப் புறப்பட்டவர்
வர்! எனவே நீண்டகாலமாக உரிமையின்றி அடிமை
லங்கால் பிணைக்கப்பட்டுக் கிடந்த பெண்களுக்கு
லட்சிய விளக்காயிருந்தார்—விவாக ரத்து, பெண்க
க்கும் சொத்துரிமை இருக்கவேண்டும், என்ற இரு
க்கியப் பிரச்னைகள் தான் இவரது முதல் முழக்க
யிருந்தது. ஆணுக்கொன்றும், பெண்ணுக்கொன்று
க நீதி வழங்கப்பட்டது. இது ஏன், என்று நினைத்
ள், கேட்டாள், கூடாது என்றாள், அக்கிரமமல்லவா
என்று சொன்னாள், ஆகவேதான் அவளை, அங்கிருந்த
வயோதிகர்களுக்கெல்லாம், பழைமை விரும்பிகளுக்
கெல்லாம், மதவாதிகளுக்கெல்லாம் பிடிக்கவில்லை—தூற்றி
னர், சனியன் என்றனர், சண்டாளி என்று கூறினர்!

* * *

சமீபத்தில் அந்நிய ஆதிபத்தியத்திலிருந்து விடு பட்டு, சுதந்தரமடைந்து, புதுக் குடியரசு நாடாக ஆகியிருக்கும், இந்தோனேஷியாவில், — பெண்களுக்கு விவாக ரத்து, சொத்துரிமை ஆகியவைகள் கிடைக்க வேண்டுமென்பதற்காக, கடந்த பல ஆண்டுகளாக முனைந்து நின்று பணியாற்றி வருபவர்தான் சந்தோசா. இப்போது கூட, அவருடைய பணிக்கு, அவ்வளவு இடைஞ்சல்களில்லை—துவக்கக் காலத்தில், வயோதிகர்களிலிருந்து, வறட்டு ஜம்பம் பேசும் மதவாதிகள்வரை, சீறினர் — இவ்வளவு அவ்வளவு என்று கூறமுடியாத வகையில்.

இது அன்று! ஆனால், இன்றோ, பெண்களின் உரிமை முழக்கம் ஓரளவு அரசாங்கத்தாலேயே, ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. பரம்பரை முறை எங்களைப் படுகுழியில வீழ்த்துகிறது ஆகவே அவைகளைத் தகர்ப்போம்! உரிமை பெறுவோம்!! என்று முழக்கமிட்டதற்காக, விவாக ரத்து பெண்களுக்குச் சொத்துரிமை ஆகியவைகளைக் கேட்டதற்காக, பாய்ந்த பழைமையை, மதவாதிகளை, புதுமையின் பக்கம் திரும்புங்கள் என்று போதிக்கும் 'புனித' காரியத்தை, மத மந்திரி காரியாலயம் செய்து வருகிறது. அரசாங்கம், இவ்வளவு தூரம், பெண்கள் உரிமை விஷயத்தில் சிரத்தையும் ஊக்கமும் காட்டுவதற்குக் காரணம் தோழியர் சந்தோசா தான். இவர், மேற்படி மந்திரி சபைக் காரியாலயத்திலிருந்து கொண்டு, யோசனைகளாலும், ஒத்துழைப்பாலும் வேண்டிய ஒத்தாசை புரிந்து வருகிறார்.

X X X

பாய்ந்த பழைமையும், சீறிய சனாதனிகளையும் கண்டு பயப்படாது, அறியாமையில் கிடக்கும் தன் நாட்டுப் பெண்குலத்தைச் சீர்திருத்தும் பணியைப் புரிந்துவந்த சந்தோசாவுக்கு இடையே வந்த கடந்த உலகப்போர் ஒரு இடியாக இருந்தது!

இந்தோனேஷியாவை ஜப்பானியர் வீழ்த்தியதும், இந்தோனேஷியப் பெண்கள் சங்கங்களுக்குப் பதிலாக வேறொரு மாதர் ஸ்தாபனத்தை சிருஷ்டித்தனர். இந்த ஸ்தாபனத்தின் 'அரும்'பணி போரில் ஈடுபட்ட ஜப்பானிய வீரர்களுக்கான உணவு, உடை ஆகியவைகளைக் கவனிப்பதுதான்! இந்தோனேஷிய மாதர் யாவரும் இதில் சேரவேண்டுமென ஜப்பானியர் கட்டாயப் படுத்தினர்; சேர்ந்தனர். விடுதலை வேட்கையும், பெண்மணிகள் உயர் வாழ்வும், தன் வாழ்க்கைப் பணி

யென நினைந்த சந்தோசாவுக்கும் அவரது சகாக்களுக்கும் இது பிடிக்கவில்லை! கூடியவரை விலகி இருந்தனர்.

இடி ஓய்ந்தது, போர் ஒழிந்தது, ஜப்பானியர் தோற்றனர். மீண்டும் இந்தோனேஷிய மாதர் சங்கம் பணி புரிய ஆரம்பித்தது—விட்ட இடத்திலிருந்து துவங்கி. 1945-ல் "காவனி" என்ற மாதர் காங்கிரசை, கல்வி சமுதாய முன்னேற்றத்துக்காகப் பாடுபடுவதை லட்சியமாகக் கொண்டு துவக்கினர். இம்மாபெரும் மாதர் கழகத்தில் ஐந்து லட்சம் உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

டச்சு — ஆதிபத்தியத்துடன் இந்தோனேஷியர் எதிர் நின்று நடாத்திய சுதந்திரப் போரில் மாதர் கழகத்தின் பங்கு பாராட்டக்கூடியதாகும். 1947 ஜூலையில் 'போலீஸ் நடவடிக்கை' என்ற போர்வையில். ஜப்பானியர் விட்டுப்போன போர்த்தளவாடங்களையும், இராணுவப்பயிற்சியையும் கொண்டு வீறு கொண்டெழுந்த இந்தோனேஷிய சுதந்திரக் கிளர்ச்சியை அடக்க டச்சு ஆதிபத்தியம் 'தாக்குதலை' ஆரம்பித்தது! இதன் விளைவாக பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டன, மாணவர்கள் கல்விச்சாலை செல்லவழியற்று, திகைத்து, நிர்பலராயினர்,

இந்த இக்கட்டான நிலையில் "காவனி"யின் கடமை, அதிகமாக வளர்ந்தது. வருங்கால உலகமாகிய மாணவர்களின் படிப்பு கெடாமல் பார்த்துக்கொள்ளும் அரும்பணியில் ஈடுபட்டது. அதோடு சுதந்திரக் கிளர்ச்சிக்கும் உதவி செய்துவந்தது.

சுதந்திரக் கிளர்ச்சியில் மாணவர் ஆற்றிய அரும்பணிகள் பல. விடுதலை வேட்கையும், சுதந்திரத்தாகமும் கொண்ட மாணவர்களை ஒன்று சேர்க்கு முகத்தான் இந்தோனேஷிய சுதந்திரக் கிளர்ச்சியினர் மாணவர் ராணுவம் ஒன்றை அமைத்து, ஒன்று சேர்த்து, உயர் வாழ்வுப் பணியில் ஈடுபடும்படிச் செய்தனர்.

இந்தக் கூட்டு முயற்சியில் ஏராளமான மாணவர்கள் அணிவகுத்து நிற்க ஆரம்பித்தனர். 14 வயதுப் பையன்கள்கூட 'நானும் பட்டாளத்தில் சேர்வேன் பாடுபடுவேன். உதவுவேன் என் நாட்டு விடுதலை வீரர்களுக்கு!" என்று கூறிய வண்ணம் சேரத்தலைப்பட்டனர். இவர்களைச் சரிவர கவனிக்கவும், வேண்டிய உதவி செய்யவுமான பொறுப்புக்களை காவனி, மகிழ்ச்சியுடன் ஏற்றது. தங்கள் உதவி சிறு துரும்பு எனினும், அதுவும் அவசியம் விடுதலைப் போருக்கு என்று கருதி பணியாற்றினர். மாணவ ராணுவத்திற்கான சகாயங்களைச் செய்வதில் மாணவிகள், ஈடுபட்டு, தொண்டாற்றினர். மாணவிகளின் மன எழுச்சியைக் கண்ட டச்சு ஆதிபத்தியம் அவர்களில் சிலரை சிறையிலடைத்தனர்; செய்யாதே அப்படியெல்லாம் என்று அடக்குமுறைகளை வீசினர்!

* * *

வீரமும், விவேகமும் பெண்களுக்கும் உண்டு என்று பேச்சாலல்ல—செயலால் நிரூபித்துக் காட்டிய பெருமைகொண்ட இந்தோனேஷிய பெண்களுடைய வாழ்க்கை, யாவரும் அறியவேண்டிய ஒன்றாகும்.

அழகு, அறிவு, பணம்-இதில் எதம்மா உனக்குத் தேவை, எதை நீ அதிக முக்கியமாகக் கருதுகிறு என்று கேட்டால், "இதில் எதையும்விட சுதந்தி வாழ்வுதான் முக்கியம்" என்ற பதில் நமக்குக் கிடை கும்.

சுதந்திரமாகத் தன்னிச்சையாக, வாழ்வதி அவர்களுக்கு அலாதி மோகம். சுதந்திரம் என் குறிப்பிட்டது அவர்கள் நாட்டுக்கு விடுதலை வேண் என்பது மட்டுமல்ல, பெண்குலமும் சுதந்திரமு வாழவேண்டு என்பதேயாகும்,

(அடுத்த பக்கம் பார்க்க)

ஒரு விடிவெள்ளி

24-ம் பக்கத் தொடர்ச்சி

புரியாக இருக்கிறது—உலக நாடுகளிலேயே பெரு மான ஆற்றலரசர்களையும் அரிய அறிஞர்களை கொண்டு விளங்குகிறது. இத்தகைய நெஞ்சம் பூ கும் நிலை தனது மக்களுக்கு ஏற்படவேண்டும் என் அவன் பாடுபட்டான்—தனதுவாழ்நாளை இந்த அ பணிக்குப் பாடுபட்டான்! தாய் மொழி என்ற ணிலே விஞ்ஞானம் என்ற வித்தைப் புதைத்தா இன்று அது வளர்ந்து, ஆலமரமாகி நிற்கிறது—ஆச் யப்படத் தக்க அளவில!

கோமான்களும், கோலோச்சுபவர்களும், வாழ் வளம் பெற்றவர்களுமே அறிவுக் கல்வியைப் பெற யும். அவர்கள்தான் தகுதியுள்ளவர்கள் என்ற சறுக்குப் பாதையைத் தரைமட்டமாக்கினான், த தான், குடிசை புரியினர் கொஞ்சி விளையாடும் தோ மாக்கினான்! அவன் வித்து ஊன்றினான்; இன்று ஞானச் சோலை மணம் வீசி நிற்கிறது, மாளிகை களிடம் அல்ல—மக்கள் மன்றத்தில்!

முடியுமா?—இந்நிலை, இங்கு ஏற்பட முடியு மீண்டும் நம்மை இந்தக்கேள்வி தூறி அலைக்கழிக்கி நம்நாடு 'ரஷ்யா' ஆகமுடியுமா, குடிசையில் அதி கலப்பை பிடிப்போர் கவிஞர்களாக, ஏர்முனையில் புகழும் விஞ்ஞான முடிபுகள் வெளியாக, குப்பை கள் கலைபயில் கழகங்களாக முடியுமா!

—முடியும்—

பழைமையும், மூடநம்பிக்கையும் தூள்தூளா பட்டு, கல்வி வசதியும், அதைக் கற்பதற்குள்ள வசதியும் 'மாளிகைவாசி'களுக்கு என்ற நிலை மாறி களுக்கு என்ற நிலை மலரவேண்டும், அப்போது யும் திறமையும் உழவர் மனைகளிலிருந்து வெளிக் புப், பெருமித முழக்கத்துடன்! அந்த நா படித்துப் பட்டம்பெற்றவர்கள் — லொமனுஸே ளாகவேண்டும்! மக்கள் வாழ்வுக்குப் பணிய கிளம்பவேண்டும், வீட்டுக் கொரு விஞ்ஞானியைத் வேன் என்று வீரஒலி எழுப்பவேண்டும்!

பழைமை படர்ந்திருந்த ரஷ்ய மண்ணுக்கு விடிவெள்ளி—லொமனுஸாவ்! அதுபோன்ற விடி ளிகள் நமது நாட்டில—ஏழைகள் குடிசைகளில்— மாக வேண்டும் இருள் நீங்கி, புதுவாழ்வு மலர!

சமுதாயத்தில் சமநிலை வேண்டுமென்ற இந்த கைதான் இந்தோனேஷிய மாதர்களை, ஆசியாவில், சிறப்புடையவர்களாக்கியிருக்கிறது! இந்தோனே —பெரும்பாலும் முகம்மதிய மதத்தினர் வாழும் ஏனவே, பெண்களுக்குரிய சமுதாயச் சட்ட ங்களின் அமைப்பு மிகவும் கண்டிப்பும் கட்டுப் ும் உடையதாக இருப்பினும், இந்தோனேஷிய கள் விரிவான அடிப்படை உரிமைகளைப் பெற்றி ும் நிலை ஏற்பட்டிருக்கிறது. சொந்த வாழ்க்கையில் மல்ல, சமுதாய வாழ்க்கையிலும் தங்கள் கடமை தாங்களே தீர்மானித்துக் கொள்ளும் உரிமை பெற்றிருக்கின்றனர்.

"அடுப்பூதுவதே மாதர் கடமை" என்று கூறப் றதல்லவா இங்கு, இதுபோல பெண்களின் கடமை யல் வேலை மட்டுமல்ல; கால்நடைகள், கோழிகள், கள், வாத்துகள் ஆகியவைகளை வளர்ப்பது, காய் தோட்டம் போடுவது, சந்தைக்கு அவைகளைக் ண்டுசென்று விற்பனை செய்வது, முதலியவைகள், ாமீய வாழ்வில் இப்படியென்றால், நகரப் புறங் வாழும் பெண்களின் வாழ்க்கையும் சோம்பல் றந்ததில்லை. எடுபிடிகள் வைத்துக் கொள்ளவும், ன்னதைக் கேட்க ஆட்கள் நியமித்துக் கொள்ள கள் படைத்த குடும்பத்திலுள்ள பெண்கள்கூட, து பொழுதைச் சோம்பேறித்தனமாய்க் கழிப்ப ல். ஓய்வுநேரத்தில் தனது குழந்தைகளுக்கு ண்டிய சொக்காய்கள், கணவருக்கு வேண்டிய பணி கள், தனக்குத் தேவையான இரவிக்கைகள் ஆகிய களைத் தயாரிப்பர்.

இந்தப் பழக்கம் சிறு குழந்தைப் பருவம் முதலே, மார்களால் போதிக்கப்படுகிறது—பொறுப்பானது ற கருத்துடன்! முஸ்லிமல்லாத பெண்களிடம் மணம், விவாகரத்து முதலிய விஷயங்களில் அதிகச் திரம் தரப்பட்டிருக்கிறது. தனக்குப் பிடிக்காத ஆணை மணக்கும்படி ஒரு பெண்ணை அவளது றோர் கட்டாயப்படுத்தக் கூடாது. இதுதான் ாரம் என்று, அங்கு கருதப்படுகிறது!

ஒரு பெண்ணைக் கண்டு ஒருவன் மோகிக்கலாம், வாழ்வின் மலர் இவள் என்று கருதலாம், மணந் இவளை மணப்பேன் இல்லாவிடில் உயிர் துறப் என்று கூறலாம், கூவலாம்! ஆனால் அவன் காத தம் பெண் அவனை விரும்பாவிடில், சாஸ்திரப் ருத்தம், குடும்பப் பொருத்தம், கோத்திரப் ருத்தம், எது சரியாக யிருந்தாலும் அந்தப் பெண் 'மனப் பொருத்தம்' தான்: அதிமுக்கியமானதாகக் ப்படும். அதேபோல திருமணம் ஆகியதும் வன், கொடுங்கோலனாகவோ, குடும்பத்தைக் கவனிக் வனாகவோயிருந்தால் ஒரு பெண் அவனுடன் திரு ரத்து செய்து கொள்வதும் மிகச் சுலபம். அந்த அதிகாரியிடம் சென்று தனது விருப்பத்தைத் வித்து ஒரு பத்திரத்தில் கையெழுத்திட்டுக் த்துவிட்டால் போதும்! இத்தகையச் சுதந்திர கு—பெற்றோர்களுடைய சொத்தில் பெண்களுக் பங்கு உண்டு என்ற நியதி அங்கு ஏற்பட்டிருப் ஒரு முக்கிய காரணமாகும்! மகனைவிட மகளுக்குக் க்கும் சொத்து குறைவானது என்றாலுங் கூட பிதுரார்ஜிதச் சொத்தில் கிடைக்கும் பங்கு அவளை கவலையில்லாதவளாக—பேசும் புறாவாக ஆக்குகிறது!

*  *  *

"பெண்கள்—வெறும் கூண்டுக்கிளிகளாக யிருக்கு மட்டும் நாட்டு வாழ்வு நிமிராது நல்ல நிலை ஏற்படாது. அவர்கள் பேசாமடந்தையராக வீட்டுக் கோடியில் கிடக்கும்வரை விமோசனம் ஏற்படுவது வீண் கனவு தான்!" என்று இடிமுழக்கமிட்டு, அவர்களை, பேசும் புறாக்களாக்க, பறந்து திரிந்து பல்வகையிலும் நாட்டுக் குப் பணியாற்றுபவர்களாக ஆக்கிய பெருமை, ஒன்று சேர்த்து "காவனி" கண்ட பெருமை தோழியர் சந்தோசா வுடையதாகும்!

சட்ட நிபுணராகப் பயிற்சி பெற்ற இவர், பெண் களுக்கான திருமண ரத்து, சொத்துரிமை ஆகியவை களையே தன் தொழிலின் முக்கிய கட்டமாக வைத்து வக்கீல் பணிபுரிந்து வந்தார். வக்கீல் மட்டுமல்ல; ஓய்வு நாட்களில் அவர் பள்ளி ஆசிரியராகவும் பணி புரிந்தார்! அந்நாட்களில் பணக்காரர்கள் மட்டுமே டச்சுப் பள்ளிக்கூடங்களுக்குச் செல்ல முடியும்—டச்சுப் பள்ளிக்கூடத்தில் படித்துத் தேறினால்தான் பல்கலைக் கழகத்தில் சேர முடியும்! இதைக் கண்ட சந்தோசா தன்னொத்த பெண் தோழியர்களைக்கொண்டு பல பள்ளிகளைத் திறந்து, பணிபுரிந்தார்!

முஸ்லிமல்லாத பெண்களின் வாழ்க்கை நிலை ஓரளவு முஸ்லிம் சமுகப்பெண்களைவிட திருந்தியதாக, முன்னேற்றங்கொண்டதாக அங்கு விளங்குகிறது என் பதை முன்னர் எடுத்துக்காட்டினோம்.

இந்தோனேஷியத்தீவுகளிலே, முக்கியமானவை களில், முஸ்லிம்கள்தான் அதிகம். எனவே, அங்கு திருமணரத்து, சொத்துரிமை ஆகியவைகள் ஏற்படச் செய்யவேண்டும், என்று பணியாற்றக்கிளம்பியபோது தான் சந்தோசாவுக்குத் தலைப்பில் நாம் குறிப்பிட்டது போன்ற "பட்டங்கள்" வயோதிகர்களாலும், வைதிகர் களாலும் சூட்டப்பட்டது!

சந்தோசா, பெண்களை "பேசும் புறாக்கள் ஆக்கு வேன், கூண்டுக்கிளிகளாக விடமாட்டேன்" என்று, முழக்கமிட்டபோது மதப்போதகர்கள் இதைப் பெரி தும் கண்டித்தனர் — கண்டனக்கூச்சல் எழுப்பினர் — சமீபத்தில் புதுடெல்லி சட்டசபையில் பெண் களுக்கு விவாகரத்து, சொத்துரிமை நல்க வேண்டுமென்ற நோக்கமுடன் இந்துச் சட்டத் தொகுப்பு மசோதா கொண்டுவந்தபோது இங்குள்ள சனாதனமும், வைதீகமும் கண்மூடித்தனமாக எதிர்த்து எக்காளமிட்டதல்லவா, அதைப்போல!

X  X  X

காலம் மாறுகிறது, அதன் சுழற்சியில் கருத்துக் களும் மாற்றம்பெற்று வருகின்றனபுது இந்தோனேஷி யக் குடியரசும் உதயமாகி விட்டது. பெண்களை 'பேசும் புறாக்களாக்க' சந்தோசா துவங்கிய அரும்பணிக்கு இப் போது ஆதரவு அதிகமாகிவருகிறது. விரைவில் இந் தோனேஷிய முகம்மதியப் பெண்மணிகளும் சுதந்திரப் புறாக்களாய் திகழுவர் என்பது திண்ணம்!

[ எங்கும் நடப்பது ]

# "தர்மம் தலை காக்கும்!"

இடம்:- மளிகைக் கடை

பாத்திரங்கள்:- முதலாளிச் செட்டியார், கணக்கப் பிள்ளை, எடுபிடிகள், அவர்களில் ஒருவனான குப்பன் :

செட்டியார்:- தலையைக் காக்குமாம்! புத்தி சொல்ல வந்துட்டான் புத்தி! போடா, உம்...போடா வெளியே! கால் காசுக்கு வழிகிடையாது; கழுதே தர்மோபதேசம் பண்ணக் கிளம்பிட்டாரு! பெரிய மகாப் பிரபுல்ல...... மானங்கெட்ட நாயே! இறங்குடா கடையைவிட்டு, இறங்குடாங்கிறேன்......

குப்பன்:- நான் ஒண்ணும் செய்யலீங்களே ஏங்க இப்படி கோவிச்சுகிறீங்க......

செட்டி:- கோவிச்சுக்கிறாங்களாம்...இல்லே! ஐயாவுக்கு மாலைமரியாதை செய்வாங்க! மண்டைக் கர்வத்தைப் பாரு! வயிறு வளர்க்க வழியில்லே—வாய்மட்டும் இருக்கு—புத்தி சொல்ல வந்துட்டான். போடா...... போறியா இல்லே...ஏய் கந்தா! கழுத்தைப் பிடிச்சுத் தள்ளு இந்தச் சனியனே......"

குப்பன்:- இல்லீங்க எஜமான்...ஐயோ பாவம்னு இருந்திச்சுங்க... ஒரே ஒரு வெல்லக்கட்டித் தாங்க... தெரியாமே செஞ்சுட்டேனுங்க...

செட்டி:- வெல்லக் கட்டியை எடுத்து வீசறதுக்கு இது என்ன உங்கப்பன் கடையா? ஒரே ஒரு வெல்லக் கட்டிதானும்......ஐயோ, பாவம்னு போட்டாராம்...... ஏண்டா! பிச்சைக்காரங்களுக்காகவாடா நான் கடை வச்சிருக்கேன்...

குப்பன்:- இல்லீங்க...

செட்டி:- ஏய்! உன் இராமாயணத்தைக் கேட்க, இங்கே நேரமில்லே... நீ இங்கே தேவையுமில்லே...... போயிடு. மரியாதையாச் சொல்றேன்!

(கந்தன் சோகம் ததும்பிய முகத்துடன் ரோடு நோக்கி நடக்கிறான். கணக்குப்பிள்ளையிடம் செட்டியார் பேசுகிறார்)

ஏன்யா, கணக்குபிள்ளை......உம்மைத்தானய்யா! ஆளிருந்தா என்னமோ கொட்டிக் குவிக்கிறதுபோலத் தான் கணக்குப் புஸ்தகத்தையே புரட்டுறது...

கண:- ஏங்க...

செட்டி:- கொஞ்ச நேரம் நான் இங்கே இல்லாட்டீ ......இப்படித்தான் நடக்குதாக்கும் எல்லாம். என்ன திமிரு...! நான் ஒருத்தன் உட்கார்ந்து கிடக்கிறேன் கல்லுப் பிள்ளையார் மாதிரி! அவன் பாட்டுக்கு எடுத்துப் போடறான் வெல்லக் கட்டியை...பிச்சைப் போடுறானும், பிச்சை! பெரிய கோடீஸ்வரு...

கண:- குப்பன், ரொம்ப யோக்யனுங்க...சொன்ன சொல் தட்டமாட்டான் நல்ல பயலுங்க!

செட்டி:-ஆமாம்! நீ என்ன செய்வே ஒரு குளத்திலே ஊறின மட்டைகதானே! நீ 'சர்ட்டிபிகேட்' தர வந்துட்டே:.......என்யா, அந்தக் கணக்கையெல்லாம் முடிச்சாச்சா? இன்கம்—டாக்ஸ் கணக்குத்தான்.. ஏன் தலையைச் சொறியறே!

கண:- ஆயிட்டு இருக்குதுங்க!

(கார் ஒன்று வந்து நிற்கிறது இருவர் இற வருகின்றனர் செட்டியார் கடைக்கு)

செட்டி:- வாங்க! வாங்க!! வரணும்! வரணு சவுகரியந்தானுங்களே...மெட்ராசிலேருந்தா?

வந்தவர்:- ஆமாங்க! சவுகரியந்தாங்க!

செட்:- (எடுபிடியைக் கூப்பிட்டு) ஏய்! போ இரண்டு கப் காப்பியும், ஏதாவது டிபன்......

வந்தவர்:- அதெல்லாம் ஒண்ணுங் வேணுங்க

செட்டி:- என்னுங்க, மெட்ராசிலே சாப்பிட் கிளம்பினு, செங்கல்பட்டு வர்றதுக்குள்ளேயே ஜீர ஆயிடுங்களே!

ஏய், இரண்டு காப்பி, இரண்டு ஸ்வீட்... என்னடா, சொல்றேன் நிக்கிறயே, ஓடுடா!

வந்த:- கடை, வியாபாரமெல்லாம் எப்படி இ குங்க......

செட்:- ஏதோ, நமக்குன்னு, ஈசுவரன் படிய காமலா போயிடுவான்......நடக்குதுங்க, சுமாரா!

வந்த:- கணக்கெல்லாம் முடிஞ்சிட்டுதா?

[காப்பி வருகிறது. எடுபிடி ஆற்றித்தருகிறான்]

செட்:- எங்கேங்க! எல்லாம், இந்தத் 'தல்'பி கிடக்கு, பாருங்களேன் நம்ப கணக்கப்பிள்ளை நானும் நாளைக்கொருதரம் கேட்கிறது, அவரும் ' துங்க'ன்னு சொல்றது...இந்த உலகத்திலே எதை நம்பறதுக்கு இல்லைங்க......

வந்த:- ரொம்ப வாஸ்தவமான பேச்சு!

செட்:- ஐபா யாருங்க...எங்கே இவ்வளவு தூர

வந்த:- எல்லாம் உங்க கிட்டேதான் செட் வாள்! இவுங்க நம்ப சிநேகிதாள். மெட்ராசிலே இரு ...சங்கீதத்திலே ரொம்ப பைத்யம்!

செட்:- ஓகோ!

வந்த:- ஒருகாரியம் செய்யணும்னு துடியா துடிக்கிறார்—அட, வேணுமய்யா அந்த வேலை, அ டீன்னு கேட்க மாட்டேன்கிறார்...ஆரம்பிச்சுட்டு மறுவேலைன்னு ஒத்தெகாலிலே நிற்கிறார்......

செட்டி:- ஏன் அப்படி? என்னது அப்படி!

வந்த:- ஒண்ணும் அப்படி பிரமாதமல்ல... சங்கீதசபா ஆரம்பிக்கணுமாம்! ஒரு இலட்சம் போ கட்டிடம் முடிக்கிறதாக ஒரு திட்டம்! இதுவரை... என்னங்க அனந்து எவ்வளவு வசூலாகியிருக்கு?

அனந்து:- நாற்பதாயிரத்துக்கு மேலே......

செட்:- பெரிய மனுஷாளாம் சேர்ந்திருக் போலேயிருக்கு......

வந்த:- ஆமாம்! சின்னப்பட்டி ஜமீன், ஜில்லா க்டர், இன்னும் பெரியபெரிய ஆளெல்லாம் சேர்ந் க்கா......

செட்:- ஓகோ! நம்ப வீட்டிலே குழந்தை குட் க எல்லாம் சவுகரியந்தானுங்களே!

வந்த:- சவுகரியந்தான்...வந்து, இந்த சங்கீதசபா ல தாங்களும் இருக்கணும்னு எனக்கு ஆசை!

செட்:- நான் என்னுங்க...சிறுதுரும்பு...

வந்த:- ஒண்ணு சொல்ல மறந்துட்டேனே......! த சங்கீத சபா-விலே வர்ர வருமானம் எதுக்குத் ரியுமோ! ஏழைப்பயன்க, படிக்கக் கஷ்டப்படுகிறானு லே, அவுங்களுக்கு உதவி ஒத்தாசை

செட்:- நல்லகாரியம் ஏழைக கண்ணைத் திறந்து ச்சா, போறகதிக்கு புண்யமாவது கிடைக்கும்......

அனந்து:- தர்ம கைங்கரியம் இருக்கே, எப்பவும் ட்டுப் போயிடாதுன்னு, எமக தாத்தா ஒருவர், ந்தார்! அவர் அடிக்கடி சொல்லுவார்...வந்து ...

செட்டி:- நேரே மெட்ராசுக்குங்களா, வேறெங்கேயா ங்களா!

வந்த:- உங்களைத்தானே பார்க்கவந்தோம். இதோ, ா திரும்பவேண்டியதுதான்......

வந்த:- நீங்க நம்ப சபாவிலே, சேர்ந்துடணுங்க ரவாளர் தொகை 200, நன்கொடையா எவ்வள ணும்னாலும் தரலாம்!

அன:- அட, செட்டியார்வாள் கிட்டே ஏங்க, விப எல்லாம் பேசுறீங்க. தருமகாரியத்துக்குஎப்போதும் ங்கறதேயில்லையே அவுரு! ஏங்க, செட்டியார்?

(செட்டியார்பாடு தர்ம சங்கடமாகிறது. ஒன்றும் சொல்லமுடியாமல்.........)

செட்டி:- ஆமாங்க.........ஆனால்

அனந்து:- இது என்னுங்க இருநூறு ரூபாய் உங்க க்குப் பிரமாதமா?...............

வந்த;- நீங்க, சும்மாயிருங்க, செட்டியார்வாள் ங்க கொடுக்கிற ஒவ்வொருதம்பிடியும் எங்கே போவது தரியுமோ, ஏழைக்குடிசைக்கு.........ஆமாம்!

செட்டி:- அது சரிங்க, ஆனா.........

வந்த:- நம்பநாட்டிலே, இந்த ஏழைகநிலையிருக்கே! ரொம்பப்பரிதாபங்க.........

செட்டி:- அதையேன் கேட்கிறீங்க! தலைவேதனை!

வந்த:- அதையெல்லாம், கண்ணால் பார்த்துக்கிட்டு ருக்க எப்படிங்க நமக்கெல்லாம் மனசு வரும்!

செட்டி:- ஆமாங்க, ரொம்ப சங்கடந்தாங்க!

வந்த;- சங்கீதசபாவின் ஆதரவாளர்களிலே தங்க ளையும் ஒருவராக!

செட்டி:- அதுக்கு என்னுங்க! ஆதரவாளர் இல் லாட்டீ என்னுங்க.........

(ஒருநூறு ரூபாயை எடுத்து)

இதை நன்கொடையாவச்சுக்குங்க.

வந்த:- சரி, உங்க இஷ்டம். அப்புறம்,

செட்டி:- சுடியசிக்கிரம் வந்துபார்க்கச்சொல்றேன்

வந்த:- ஆகா! கணக்குத்தானே, எப்பவேணுமானு ம் வரட்டும்!

(காரில் வந்தவர் இருவரும் ஏறுகிறார்கள் கார் புறப்படுகிறது)

அனந்து:- செட்டியார்! ரொம்ப தர்மிஷ்டர்போலி ருக்கு, ஏழைகளைப்பற்றிச் சொன்னதும், எவ்வளவு உருகினார், பார்த்தீங்களா!

வந்த:- ஆமாம்!

அனந்து:- நான்நினைக்கவேயில்லே......ஆள் பேச்சைப்பார்த்ததும்......ஏண்டா, இங்கேவந்தோமென்று நினைச்சேன்! ஆனால், ரொம்பத்தங்கக்கம்பி!

வந்த:- எல்லாம் வேஷம்! வெளிவேஷம்!!

அனந்து:- வெளிவேஷமா? இதென்னப்பா,

வந்த:- அனந்து, எனக்குத்தெரியாதா என்னஇதுகளோடு நிலை! 'ஆடிடர்' என்றால், இவர்கள் விஷயமெல்லாம் ஓரளவு புரிஞ்சுதானிருக்கவேண்டும். கேட்டதும் எப்படிப்பேசினான்......கடைசியில் ரூபா 100 கொடுத்தான்—கொடுத்தது உன் கண்ணுக்குப் பிரமாதமாப் படறது! ஏன், கொடுத்தான் தெரியுமோ?

அனந்து:- அதான், அந்த ஆளே சொன்னாரே, ஏழைகன்னாவே மனம் உருகுதுன்னு...........

வந்த:- அதனாலே இரக்கம்வந்து நூறுரூபாயைத் தூக்கித்தந்துட்டாருன்னு நினைக்கிறே!

அனந்து:- ஆமாம்! அதிலென்னவாம்!

வந்த:- அதான் இல்லே! அவுருகொடுத்தாரே பணம், அது ஏழைகளுக்காக அல்ல, எனக்காக!

அனந்து:- உனக்காகவா?

வந்த:- ஆமாம்! அவர் கடைகணக்கு என்னிடமல்ல அகப்பட்டுக்கொண்டிருக்கிறது! நான் பணங்கேட்கிறேன், அவுருஇல்லென்னு சொல்லாருரு இன்னைக்கு! நாளைக்கு...........யாருகிட்டே வரணும்?

அனந்து:- ஓகோ! அப்படியா!

* * *

ஒரு வெல்லக் கட்டியை வேலையாள் பிச்சைக்காரனுக்குப் போட்டான் என்பதற்காக செட்டியார் அவனைக் கடையினின்றும் விரட்டினார்! வேதனைப்படும் அவனை 'ஓடடா' என்று ஓட்டினார்!

அவனும் 'தர்மம்'தான் செய்தான், தலைகாக்கும் என்று சொல்கிறார்களே என்ற எண்ணத்தால்! அதற்குப் பரிசு அவனுக்குக் கடையிலிருந்து 'கல்தா' ஒரு 'வெல்லக் கட்டி'யால் அவன் வாழ்வில் வேதனை வீச ஆரம்பித்தது!

ஆடிடரும் அவர் நண்பரும் சங்கீத சபாவுக்கு நிதி கேட்டனர்! செட்டியாருக்கோ கொடுக்க இஷ்டமில்லை, ஆனால் ஆடிடரை நினைக்கும்போது கொடுக்காமலிருந்தால் தொல்லை ஏற்படுமென்று தெரிகிறது ஆகவே, 'தருமம்' என்று சொல்லிக்கொண்டு பணம் தருகிறார், பெரிய தர்மிஷ்டர் போல!

'தர்மம்'—நாட்டில் எப்படியிருக்கிறது என்பதன் ஒரு படப்பிடிப்பு இது! சுயநலம், சுயலாபம் இரண்டில் தான் 'தர்மம்' மலர்கிறது இங்கு!

ஆனால் கவர்னர் ஜெனரல் 'சி. ஆர்' விசாகையில் பேசுகையில் "தர்மம் செய்யாதவர்கள் மிருகங்கள்" என்று தர்மோபதேசம் செய்திருக்கிறார்! சமீபத்தில்!

தர்மம் கொடுக்கும் நிலையில் ஒருவனும், அதை வாங்கியே வாழவேண்டிய வேதனையில் இன்னொருவனும் நாட்டில் நீடிக்கும் வரை வறுமை வீசுவது மட்டுமல்ல, வாழ்வே சோபிக்காது! ஏழையும் பணக்காரனும், இருப்பவனும்—இல்லாதவனும் இருந்துகொண்டு தான் இருப்பார்கள்!

'தர்மம் தலைகாக்கும்' என்ற சொல் சுயநலமிகளின் சூதுக்குத்தான் பயன் படும்; மக்கள் வாழ்வுக்கல்ல!

# நாட்டு வைத்தியம்

[ வைத்திய வள்ளல், ஈ. வே. கிருஷ்ணசாமி ]

நமது நாட்டில், நாட்டு வைத்திய வசதிக்கு வேண்டிய மருந்துப் பொருள்களும், தழைகளும், வேர்களும், கிழங்குகளும் காய்கனி முதலியமற்ற ஏனையவகைகளும் ஏராளமாக மலிந்திருப்பதோடு, ஒவ்வொரு நோய்க்கும் 50க்கு மேற்பட்ட,—சிலவகைகளில் 100க்கு மேற்பட்ட—விதமானமருந்துகளும் அவைகளைக் குறித்துச் சொல்லும்படியான நூல்களும் அமைந்திருக்கின்றன. இது யாவராலும் மறுக்கமுடியாத ஒரு உண்மையாகும். இந்தவித மருந்துகளுக்கு வேண்டிய பணமும், மிக மிகக் கொஞ்சமாகவே இருக்கிறது. இருந்தும், நம்மவர்கள், இவைகளில் அக்கரை கொள்வதில்லை.

அக்கரை கொள்ளும் வகையில் இந்த மருந்துகள் இல்லையா, நோய்களைத் தீர்க்கச் சக்தியற்றனவா என்று கேட்டால், அப்படிப்பட்டவையல்ல. உடனுக்குடன் நோய்களைக் கண்டித்து, உடலுக்கு உறுதியையும் ஊக்கத்தையும் தருகின்றன. ஆயுள் வளரவும், சுகம் மலரவும் செய்கின்றன.

இது மாத்திரமின்றி உடல் உறுதி பெறவும், ஆயுள் நீடிக்கவுமான பல மருத்துவ முறைகள் நமது நாட்டு வைத்தியத்தில மலிந்துகிடக்கின்றன—நாம் அன்னிய நாட்டினரை நாடாமல் சுதந்திரமாக நமக்கு வேண்டியவைகளைச் செய்துகொள்ளும் வகையில்!

எனவே, எல்லாவகையிலும் நம் மக்களுக்கு வேண்டிய மருந்துகளும், மருத்துவ முறையும் இலகுவாகவும் எளிய முறையிலும் கிடைக்கும்படி செய்வதற்கான வழி வகைகள் காணும்படியான பல நூல்களும் இருக்கின்றன.

நோய்களைத் தீர்க்க மருத்துவ முறைகள் பலவழிகளில், மாதிரிகளில், இருக்கின்றன. இவைகளை விளக்கிக் கூறும் வித விதமான நூல்கள் இருக்கின்றன. கஷ்டமோ நஷ்டமோ இல்லாமல் குறைந்த காலத்தில் நமக்கேற்பட்ட வியாதிகளைப் போக்கடிக்கும் வழிகள் இருக்கின்றன. இத்தனையும் இருந்தும் நமது நாட்டு வைத்தியம் முன்னேற்றமடையவில்லை. அதன் நூல்களும் அபிவிருத்தியடையவில்லை. அதற்கு மாருக நாடோறும், நலிந்துகொண்டிருக்கிறது! மக்களிடம் இவைபற்றிய உண்மைவிளக்கங்கள் உரைக்கப்படவழியும் வசதியும் இல்லாத காரணத்தால் வெளிநாட்டுமருந்துப்பொருள்கள்மீது மக்களுக்கு மோகம் ஏற்படுவதோடு நமது நாட்டு வைத்தியத்திடமும், வைத்தியர்களிடமும் அலட்சியமும், ஆதரவின்மையும் அதிகமாகி வருகிறது! அதுமட்டுமின்றி, வளர்ந்துவரும் இக்குறை, நம்மக்கள் மனதிலாவது, வைத்தியர்களிடமாவது, தென்படவில்லையென்பதோடு, சிந்தனையையும் கிளறவில்லை. இது நெஞ்சில் வைத்து உணரும்போது நாட்டுவைத்தியம் எதிர்காலத்தில் இருக்குமா, நிலைக்குமா, என்ற ஐயமும்அவல நினைவுமே நமக்கு ஏற்படுகிறது! இருப்பினும் காலம் இன்னும் கடந்துவிடவில்லை; இப்போதுகூட இதற்கான சிரத்தை எடுத்துக்கொண்டால் முன்னேற்றம் காண முடியும்.

அதாவது முதலில் ரசவாதமும், யோகசாதன முறைகளும் மலிந்துகிடக்கும் நமது வைத்திய நூல்கள் திருத்தியமைக்கப்படவேண்டும். சித்தர்களின் உரைகளெல்லாம் பெரும்பாலும், மக்களுக்குப் பயன்படாத வழிகளில் சொல்லப்பட்டிருக்கின்றன. எனவேதான், யோகமுறைகளும் இன்னபிறவகைகளும் குறுக்கிட்டு நமது மருத்துவ நூல்களை மக்கள் சரிவரக் கற்கவிடாமல் ரசவாதம் போன்றவைகளில் மக்களை மயங்கவிட்டுவிட்டன!

நெஞ்சில் நச்சு நினைப்பையும் பேராசையையும் விளைவிக்ககூடியது ரசவாதம். பொருளாசை எவரையும் தன்வலையில் வீழத்தானே செய்யும்! ஆகவே, மக்கள் மனது ரசவாதத்தில் அதிகம்மயங்கி, உருவில்லாத வழிகளில் செல்லுமாறு செய்துவிட்டது. ரசவாதம் எத்தனையோ மாளிகைகளை மண்குடிசைகளாகும்படி செய்திருக்கிறது! பேராசையால், பெரும்பணக்காரர்கள் பல கோடீசுவரர்களாக வேண்டும் என்ற சபல புத்தியால் ஓடேந்தும் நிலைமைக்கு வந்திருக்கிருர்கள்! கஞ்சிக்குக் கதியின்றி அலையும்படியான நிர்க்கதியான நிலைமைக்கு உள்ளாகியிருக்கிருர்கள்!

ஆகவே, வைத்திய நூல்களில், வேறு எந்தவித விஷமும் கலக்காமல் வைத்தியத்திற்குமட்டும் என்ற அளவில இருக்குமாறு ஆக்கவேண்டும். அப்போதுதான் நன்மை ஏற்படமுடியும்—மக்களும் நலன் பெறவும், நமது நாட்டு வைத்தியத்தின் அருமை பெருமைகளை உணரவும் முடியும். அதோடு ஒருநூலில், ஒரு குறிப்பிட்டவிபரம்பற்றி இருப்பதற்குப்பதில் எல்லாவிதமான தகவல்களும், அதுவும் மனதை இலகுவில் வசப்படுத்தக் கூடிய வழிகளும் இருந்தால் எப்படி அந்நூல் பயன் விளைவிக்கமுடியும்? நல்லவைரம் இருந்தாலும் இமிடேஷன் வைரத்தின் படாடோபத்தால் மயங்கத்தானே நேரும்!

இதையெல்லாம் கவனித்து நாட்டுவைத்தியம் நல்ல நிலையடைய யாவரும் முயலவேண்டும்; அப்போதுதான் நாட்டுவைத்தியத்தின் அருமை பெருமையை உணரமுடியும், சிக்கிச் சீரழியாமல் அதனைக் காக்க வழியேற்படும்.

விளம்பரப் பூச்சுக்கும், விதவிதமான அன்னிய மருந்துகளில் ஆசை வைத்தும், மயங்கி இருப்பதை இழப்பது, என்றும் நாட்டுக்கும் நமக்கும் நன்மை விளைவிக்காது! நாட்டு வைத்தியத்தில் — நலன் விளைக்கக்கூடிய வழிகளும் வசதிகளும் எவ்வளவோ உண்டு! இவைகளை முறைப்படுத்தி, மக்களுக்குப் பயன்படுமாறு செய்தால் பலனும் பயனும் நிறைய உண்டு. இதை, நாட்டு நலனில் அக்கரை கொள்வோர், கவனித்து ஆவன செய்வது, அவசியம், மிக மிக அவசியம்.

# அவன் பொங்கல்!

[பாரதி சுப்பய்யா]

இன்று பொங்கல் நாள்! புதுசீராடி புத்தாடை த்திப் புதுப்பானையிலே மகளிர் பொங்கலிடுவர்! ம்பும் அரும்புத் தோரணமும் இல்லங்களுக்கு கூட்டும்! உற்றாரும் உறவினரும் ஒன்று சேர்ந்து ரயாடி மகிழ்வர்! எங்கும் குதூகலம் நிலவும்!

சிறுவர் சிறுமியர் ஆடிப்பாடி மகிழ்வர், "பால் ங்கிற்று உங்கள் வீட்டிலே" என்று உபசாரமாக ரயாடிக் கொள்ளுவர். பொங்கல் பொங்குவதைப் ல அவர்கள் உள்ளத்திலே இன்ப வெள்ளம் ங்கும். கண்களிலே மகிழ்ச்சி பொங்கும். எல்லாம் ப மயம்!

இவ்வளவும் யார் வீட்டில்? நாட்டிலே இன்று லோருடைய வீட்டிலும் இவ்வாறு இன்பம் நிலவு ா?

கள்ளமார்க்கட்டிலே கனதனவான்களான வணிக னர்கள், காருண்ய ஆட்சியாளரிடம் 'நஷ்ட ஈடு' ம் காட்டுராஜாக்கள், 'கருணை விலாச' மாளிகை கள், ஆலையரசர்கள், பெருநிலப் பிரபுக்கள் இவர் வீட்டிலே பொங்குகிறது இனிய பொங்கல், இன்பப் ங்கல், இவர்கள் நூற்றுக்கு இருபது பேர்!

ஆனால், சிறு நிலம் படைத்த உழவர்கள், நிலமற்ற தொழிலாளிகள், ஆலைத் தொழிலாளர்கள், ஆசிரி ர், குமஸ்தாக்கள் இவர்கள் வீட்டில் பால் பொங்கு ா? வீடும் காடுமின்றி வீதியிலோ, மரத்தடியிலோ, சிக் குடிக்கும் ஏழைகள், அதற்கும் வழியின்றி துண்ணும் பிச்சைக்காரர்கள், இவர்களுக்கெல்லாம் ங்குகிறதா பால், பொங்கல் நாளன்று? "பொங்குக ங்கல், தங்குக இன்பம்" என்று பத்திரிகைகளும் ப் பெரியோர்களும் கூறும் ஆசிகளால் மட்டுமே றக்கு எண்பது பேராயுள்ளவர்கள் வீட்டில் ம் பொங்கிவிடுமா?

உழவன், தான்வாழும் குடிசையைப் பார்க்கிறான். குடிசை, முகட்டிலே ஓட்டை, கறையான் தின்ற இடிந்த சுவர். பக்கத்திலே கனவானின் பளபளப் மாளிகை, அதிலே பழைய வர்ணங்கள் புதுப்பிக் டுகின்றன. உழவன் தன் குடிசையை வெள்ளை விரும்புகிறான். முடியவில்லை. இந்நிலை அவனுக்கு த்தையா ஊட்டும்?

பணக்கார வீட்டுப் பிள்ளைகள் பட்டாடை திப்பொங்கலைக் கொண்டாடுகின்றனர். உழவனின் பருத்தியாடைகூட வாங்கமுடியவில்லை. நிர்வாண ின்று ஏங்கும் குழந்தைகளின் முகத்தைப்பார்த் அவனுக்கு இன்பமா பொங்கும்?

உழவன் உற்பத்தி செய்யும் பொருட்களின் விலை ிக்கப்படுவதில்லை. பம்பாயிலோ, சூரத்திலோ ாரச் சூதாடிகளால் நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் உழவன் வாங்கும் இரும்பு, துணிமணி, சிமிந்தி முதலிய ஒவ்வொரு பொருளும் அவற்றை உற்பத்தி செய்யும் முதலாளிகளால் குறிக்கப்பட்டு முத்திரையிடப் படுகிறது. இதனால் உழவன் குறைந்த விலைக்கு விற்று விட்டு அதிக விலைக்கு வாங்க நேரிடுகிறது. இவ்வாறு சுயநலமிகளால் சுரண்டப்பட்டு ஆண்டியாகிறான். வாங்கும் சக்தி இழந்து கடனாளியாகிறான். இதை நினைத்துப் பார்த்தால் அவனுக்கு இன்பமா பொங்கும்?

நகரங்களிலே தூசியில்லாத காங்கிரீட் சாலைகள். வீடுகளிலும் வீதிகளிலும் மின்சார ஒளி. சுத்தமான குடிநீர், மருத்துவ நிலையம் முதலிய நவீன வசதிகள் நாள்தோறும் பெருகுகின்றன அணுகுண்டு வேகத்தில். ஆனால் நாட்டின் ஜீவநாடி எனக் கருதப்படும் உழவுத் தொழில் புரியும் மக்கள்வாழும் கிராமங்களிலே போக்கு வரவுச் சாலைகள் இல்லை மின்சாரம் கிடையாது. குளத்து நீரே குடிநீர். குப்பன் பண்டிதரே டாக்டர்! நாளுக்கு நாள் காரை வீடு கூரை வீடாகவும், கூரை வீடு குட்டிச் சுவராகவும் போய்க்கொண்டிருக்கின்றன. இங்ஙனம் கிராமங்களின் அழிவின்மீது நகரங்கள் கட்டப்படுவதை எண்ணும்போது உழவன் மனதில் இன்பமா பொங்கும்?

உழவன் தன் மக்களை உயர்தரக்கல்விக்கு அனுப்ப முடியவில்லை. ஆரம்பக் கல்வி கூடக் கற்பதற்கு அநேக கிராமங்களில் பள்ளிக்கூடம் இல்லை. இருக்கிற, ஒரு ஆசிரியரைக் கொண்ட, சில பள்ளிக்கூடங்களைக்கூட அரசாங்கத்தார் மூடிவிட்டனர். ஆனால் புதிய போலீஸ் நிலையங்கள் பல திறக்கப்பட்டுள்ளன. மத்திய சர்க்காரிலே சிக்கனத்துக்காக கல்விச் செலவு 6 கோடி நாலு கோடியாகி விட்டது. ஆனால் புதிதாக ஸ்பெஷல் போலீஸ் படையொன்று நிறுவியிருக்கிறார்களாம் 'கலகக்காரர்களை' அடக்க. இதனை எண்ணிப் பார்த்தால் உழவன் நெஞ்சில் இன்பமா பொங்கும்?

நாட்டிலே மக்கள் தொகை பெருகிக்கொண்டே போகிறது. பெரும்பாலும் ஏழைக் குடும்பங்களே பெருகுகின்றன. அதற்கேற்ப அவர்களின் வருவாய் பெருக வழியில்லை. இதனால் வறுமை, வீட்டு நெருக்கடி, உணவுப் பஞ்சம், சிசு மரணம் முதலிய பல தொல்லைகள் ஏற்படுகின்றன. உழவன் கருப்பாதை சாத்த வழி தெரியாமல் திகைக்கிறான். வறுமை மிகுதியால் 'நல்லதங்காள்' நிகழ்ச்சிகள் நாடெங்கும் நடந்துகொண்டிருக்கின்றன. கண்டும் காணாததுபோல கண்மூடி மௌனியாய் இருக்கிறது அரசாங்கம். தற்கொலை புரிய முயற்சிப்பவர்களைப் பிடித்துத் தண்டிக்கவும் செய்கிறது வெட்கமின்றி, பிழைக்கவும் விடாது, சாகவும் விடாது. இந்த வயிற்றெரிச்சலை எண்ணினால் இன்பமா பொங்கும் உழவன் உள்ளத்தில்?

மூன்றாவது உலகப் போர் வருவது உறுதியென்று உலக அரசியல் வட்டாரங்களிலே பேசப்படுகிறது,

ஆதிக்க வர்க்கங்கள் அமெரிக்காவின் பக்கமும். உழைக்கும் வர்க்கங்கள் ரஷ்யாவின் பக்கமும் நின்று போரிடப் போகின்றனவாம். ஒவ்வொரு போரின் முடிவிலும் பொருளாதார நெருக்கடியும் பஞ்சமும் கோரப் பற்களைக் காட்டி நிற்பது கண்கூடு. முதல் உலகப் போர் உழவனை ஒட்டாண்டியாக்கியது. இரண்டாம் உலகப் போர் அவனைக் குற்றுயிராக்கி விட்டது. மூன்றாவது போர் அவனை அழித்தே தீரும் என்பதில் ஐயமில்லை. இந்தப் பயங்கரத்தை எண்ணிப் பார்த்தால் உழவன் வீட்டில் இன்பமா பொங்கும்?

விடுதலை பெற்ற இந்திய நாட்டிலே புதிய அரசியல் ஒளிவீசப்போகிறதாம் ஜனவரி 26-ந்தேதி முதல். அதிலே ஏழைஉழவன்கூட ஜனாதிபதியாக உரிமையிருக்கிறதாம். என்னகேலிக்கூத்து! தேர்தலுக்குச் செலவழிக்க அவனால் முடியுமா? பணத்தைச் செலவழிக்கும் பிரபுக்கள் அல்லவோமக்கள் பிரதிநிதிகளாய்வரமுடியும் இவர்கள் தம்கடமைகளைச் செய்யத் தவறினால், நீக்கிவிட்டு மறுதேர்தல் நடத்த உரிமையில்லை புதிய அரசியலில். இதைக்கண்டு உழவன் மனம் இன்பத்தையா அடையும்?

வானம்பார்த்த கரிசல் பூமியில் வாழும் மக்கள் அகதிகளாய் மாறி பசுமை காணும் இடங்களை நோக்கிப் பஞ்சம் பிழைக்கப் போயிருக்கின்றனர். வீட்டைத் துறந்து வேற்றிடம் சென்றுள்ள அவர்கள் பொங்கல் நாளன்று சொந்தவீட்டை நினைத்துக்கொண்டால் இன்பமா பொங்கும் அவர்கள் உள்ளத்தில?

பொங்கல் திருநாட்கள் எத்தனையோ வந்து வந்து போகின்றன. உழவர்கள் வாழ்விலே பொங்குவது இன்பமல்ல, ஏக்கம். களிப்பு அல்ல, கண்ணீர்! அவர்கள் இரத்தம் கொதித்துப் பொங்குகிறது. உள்ளம் எரிமலைபோல் பொங்குகிறது. ஆத்திரம் பொங்குகிறது. அவலம் பொங்குகிறது. வேதனைபொங்குகிறது. விம்மல் பொங்குகிறது. கோபம் பொங்குகிறது, குமுறல் பொங்குகிறது!

இந்தச்சூழ்நிலை அறியாமல், அறியவிரும்பாமல், அரசாங்கம் தன்வழியே போய்க்கொண்டிருக்கிறது. "கொண்டுவா வரியை. கொடு கடனை" என்று பொங்கல் செய்தி விடுக்கிறது உழவனுக்கு.

உழவன் இன்று உறங்கவில்லை. விழித்துவிட்டான் ஊமையல்ல, பேசுகிறான். உரத்தகுரலில் இல்லாவிட்டாலும் ஊர் அறியும்படி.

"ஐயா, மேட்டுக்குடியினரே, பொங்கல் நாளன்று உங்கள் வீட்டிலே இனிய பொங்கல். எங்கள்வீட்டிலே புலம்பல். இதை நாங்கள் இனியும் சகித்துக்கொண்டிருக்கமுடியாது."

"ஊரையாள்வோரே! உல்லாசபுரியினர் உயர்ந்து கொண்டே போகின்றனர். நாங்கள் உருக்குலைந்துவிட்டோம். உழைக்கும் எங்களிடம் இன்பம் இல்லை. அது உல்லாசிகளிடம் சல்லாபம் புரிகிறது. பாடுபடுகிறோம் நாங்கள். அதன் பலன் பணமுடையோரைக் குலாவுகிறது. அதற்குப்பராக்குக் கூறுகின்றது உங்கள் சட்டம். இந்தநிலை மாறியே ஆகவேண்டும்."

"கனவான்களே! உற்பத்தி பெருகவேண்டுமென்று நாள்தோறும் முறையிடுகிறீர்கள். நல்லது இதோ நாங்கள் உழைக்கத் தயாராயிருக்கிறோம். ஆனால், எங்களிடம் நிலம் இல்லை நிலம் இருப்போர் உழைக்கத் தயாராய் இல்லை. இந்தமுரண்பாடு நாட்டில் இருக்கலாமா? இருக்கும்வரை உற்பத்தி பெருகுமா?" ஆதலின்,

நஷ்டஈடு தராமல், ஜமீன்முறையை ஒழியுங்கள். நிலங்களை உழவனுக்கு உரிமை யாக்குங்கள்.

குறைந்த அளவு ஒரு குடும்பத்துக்கு எவ்வளவு நிலம் வேண்டும் என்பதைக் கணக்கிடுங்கள். அதற்கு அதிகமாக வைத்திருப்பவர்களிடம் பறித்து நிலமற்றோருக்கு வழங்குங்கள்.

கிராமத்தில் வாழாமல் நகரத்திலிருந்து கொண்டு நேரடியாய்ப் பயிர் செய்யாமல், வாரத்துக்கோ, குத்[தகைக்கோ] கைக்கோ விடும் வக்கீல்கள், வணிகர்கள், ஆலைமுதலா[ளி]ளிகள் இவர்களிடம் உள்ள நிலங்களைப் பறித்து உழ[வ]வர்களுக்கு கொடுங்கள். தரிசு நிலங்களைப் பயிரிடு[வ]தற்கு, தகுந்த உழைப்பாளிகளைக் கொண்டு, 'நில[ச்] சேனை' ஒன்று அமைத்து நவீன வசதிகளை அளித்[து] பயிர் செய்ய உதவுங்கள். பெரிய தொழில்களை தேசி[ய] மயமாக்குங்கள். சிறியகைத்தொழில்களைத் இயந்திரம[ய] மாக்கிக் கூட்டுறவு முறையில் உற்பத்தியைப் பெரு[க்]குங்கள். பயிர்த் தொழிலை இயந்திர மயமாக்கிக் கூ[ட்]டுப் பண்ணை நடத்துங்கள். கிராம முன்னேற்ற வேலை[]களில் நிறைந்த அதிகாரம் கொண்ட பஞ்சாயத்துக்க[ளை] நிறுவி அவற்றிற்கு நிலையான பொருள் வருவாய் ஏ[ற்]படுத்துங்கள்.

வேலையற்ற வாலிபர்களைக் கொண்டு "தொண்ட[ர்] படை" ஒன்று ஆங்காங்கு நிறுவிக் கிராமங்களில் சா[லை] அமைத்தல், கிணறு தோண்டுதல், குளங்கள் தோண்[டு]தல், குட்டைகளைத் தூர்த்தல், வீடு கட்டுதல், [சே]களைப் புதுப்பித்தல் முதலிய வேலைகளைச் செய்யுங்க[ள்].

வியாபாரச் சூதைக் கட்டுப்படுத்தி விவசா[ய] உற்பத்திப் பொருட்களின் விலைகளுக்கு ஏற்ப வாங்[கும்] பொருட்களின் விலையை நிர்ணயுங்கள்.

எல்லா விவசாயக் கடன்களையும் ரத்து செய்யு[ங்]கள். அரசாங்கத்திலிருந்து கடன் கொடுத்து உதவு[ங்]கள். தனிப்பட்டோர் வட்டிக்குப் பணம் கொடுத்[து] வாங்கும் உரிமையை ரத்துச் செய்யுங்கள்.

கட்டாயக் கல்வியைக் கிராமங்களில் நடைமுறை[க]குக் கொண்டு வாருங்கள்.

கிராமங்களை மின்சார மயமாக்கத் திட்[டம்] போடுங்கள் என்று கூறுகிறோம். இன்று இதுதா[ன்] உழவன் உள்ளத்தில பொங்கி எழும்பும் 'பொங்கல்'

'பொன்னி' தரும் பொங்கற் பரிசு

பொங்கல் மலர்—1950

—✻—

நிறையப்பக்கங்கள்—கலைவல்லாரின் மூவண்[ண] ஓவியங்கள்—சித்திரப் பகுதிகள்—புகைப்படஇணை[]புகள் — தமிழகத்தின் சிறந்த எழுத்தாளர்களி[ன்] எழுத்தோவியங்கள்.

முற்றும் ஆர்ட்பேப்பரில் நல்ல கலைவிருந்து

விலை ரூ. 3—12—0

தபால்மூலம் ரூ. 4—0—0

'பொன்னி' அலுவலகம், புதுக்கோட்[டை]

# ஏன் கல்லாய்ப் போனார்?

[ புஷ்லீ ]

வழக்கம்போல் பணிமனையை நீங்கி வீடு
வரும்போது, பாட்டையிலே ஓர்புறத்தில்
கிழவயதின் நாருடலைத் தொங்கும் கந்தைக்
கிழிசல்களால் மறைத்திட்டே ஊர்ந்து வந்து
தொழுதிட்டான் ஓர்மனிதன்; "பிச்சைக் காரன்!"
"தொழுதிட்டேன்! துரை! ராசா!
தருமம்!" என்றே
நிழல்போலும் எனைத் தொடர்ந்து சோக மூச்சால்
நெஞ்சிலுறும் துயர்க்கதையைச்
சொல்லி வந்தான்!

"நானெனவே இளமையிலே அலைந்தலைந்து
நாடு, நகர் எவ்விடத்தும் வேலை தேடி
ஓய்ந்துலுத்தேன்! நோய்கொண்டேன்! படுக்கை
வீழ்ந்தேன்!
உலராத வறுமையினில் நீச்சலாடி
காய்ந்திருந்த என்மனைவி மக்களெல்லாம்
காலமெனும் விஷப்பல்லின் நுனியில் பட்டே
சாய்ந்தொழிய வெறுப்பேந்தி ஊர்கள் சுற்றி
சாண்வயிற்றைக் கழுவுகிறேன் பிச்சை ஏற்றே!

கலைகற்றேன்! தொழில்கற்றேன்! ஒன்றுமென்னைக்
காசடிக்கும் யந்திரமாய் ஆக்கவில்லை!
உலைபெற்ற நெருப்பாக எந்தன் உள்ளம்
உறுமிற்று! சீறிற்று தெய்வத் தின்மேல்!
கொலைகற்று கழுத்தறுக்கத் தெரிந்தாலுந்தான்
கூழேனும் என்அடுப்பில் புகைந்திருக்கும்!
அலை பெற்ற மழையருவி கண்ணில் காட்டி
மானத்தை விலையிட்டுப் பிச்சை ஏற்றேன்!

சுதந்தரமாம்! குடியரசாம்! நாட்டிலெங்கும்
சோபிதங்கள் புரிகின்றார் ஆள வந்தோர்!
கதறுகிறோம்! பதறுகிறோம்! பசிவயிற்றால்
காட்டாத அழுகையிலைப் பிச்சைக் கும்பல்!

விதவிதமாய்ச் சட்டங்கள் வரிவிதிக்க!
வெளிநாட்டில் தூதுவருக் காலயங்கள்!
பதவிக்குச் சம்பளங்கள்! ஆனால் எங்கள்
பசிதுடைக்க ஒருதடமும் அசையக் காணோம்!

சாக்கடைக்கும் சாக்கடையாய் எங்கள் சாதி
சாலையிலே நெளிவதனைக் கண்டு விட்டால்
தீக்கொழுந்தை விழிபாய்ச்சி விரட்டுகின்றார்
தேசத்தைத் "தியாக"த்தால் மீட்டா
ரென்போர்!
போக்கற்றோம்! புலம்புகிறோம்! ஐயா, நாங்கள்
புவியாள விரும்பவில்லை; புசிக்கச் சோறே
கேட்கின்றோம்; கெஞ்சுகிறோம்! கஞ்சே போதும்
கிளிகொத்தும் பழம்வேண்டாம்
எங்களுக்கே!"

என்றெல்லாம் ஏதேதோ சொல்லி வந்தோன்
இடையினிலே வார்த்தையினை அறுத்துக்
கொண்டான்!
கன்றீன்ற தாய்ப்பசுவை நோக்கல் போல
கருவிழியில் நீர்தளும்பப் பார்வை சிந்தி,
"தின்று பசி தீர்ப்பதற்கே ஏதோ உங்கள்
திருவுளத்தால் போட்டிடுங்கள் ஐயா!" என்றான்!
குன்றெனினும் அழுதிருக்கும் அவனைக் கண்டால்!
கொடுத்திட்டேன் முழுப்பணத்தை! வாங்கிச்
சென்றான்!

வேழத்தை அலைகடத்தி எங்கோ வுள்ள
விளையாட்டுச் சிறுவருடன் குலவுதற்கே
"மாழைப் பொன் திருமேனி" கொஞ்சமேனும்
வதங்காத தலைவருண்டு இந்த நாட்டில்.
கூழுக்கும் கந்தைக்கும் தவிதவித்துக்
கொடுங்காற்றுச் சருகாகச் சுழலுகின்ற
ஏழைக்கு வாழ்வளிக்க யாருமுண்டோ!
ஏனிந்த "மதிப்" தலைவர் கல்லாய்ப் போனார்?


மகத்தான ஆரம்பம்
ஜனவரி 14உ முதல்
மாடர்ன் தியேட்டர்ஸ்
பொன்முடி
உணர்ச்சி மிகுந்த காதல் கதை
கதை. பாரதிதாசன்
டைரக்ஷன்
எல்லிஸ் R. டங்கன்

# திருச்சி மாநாடு

திருச்சி மாவட்ட மாநாட்டிலே, கூடியிருந்த ...ளில பெரும்பாலோரிடையே மாநாட்டின் அமைப் ...பற்றிய சிறப்புப் பேச்சுக்கள், வித விதமாக எழும் ...கொண்டிருந்தன!

மாநாட்டுப் பந்தரின் சிறப்பு, மேடை அலங்காரம், ...கு அமர்ந்திருக்கும் கழகப் பிரச்சாரகர்கள் ...பற்றி ஒரு பக்கமும், நகரில் பற்பல இடங் ...ல் "வருக, வருக" என கை நீட்டி, வரவேற்பது ...ல, தாருடன் கூடிய வாழைமரம் நிறுத்தப்பட்டு ...ப்பட்டிருந்த வரவேற்பு வளைவுகள் பற்றி இன் ...ரு பக்கமும், 'எவ்வளவு பேர் கூடிவிட்டார்கள்' ...ா என்ன கூட்டம்!' என்ற பேச்சு வேறொரு திசை ...மாக பந்தல் முழுவதும், மாநாட்டுக்கென வந்து ...மியிருந்த மக்களிடையிலே நிலவிக்கொண்டிருந் ... ஆர்வம் ததும்ப, மாநாடு பற்றி அவர்கள் வர் ...த்துக்கொண்டிருந்த அத்தனை வார்த்தைகளிலும் ...த்தமில்லாமலில்லை!

பந்தல் அமைப்பு, மேடை அலங்காரம், மின்சார ...தி, குடிநீர் வசதி, இதுபோன்ற எல்லா வகைகளி ...ம், பார்த்துப் பூரித்துப் போகக்கூடிய அளவில், ஏற் ...டுகள் செய்யப்பட்டிருந்தன.

பிரதிநிதிகள் வந்து தங்குவதற்கும், அவர்களுக் ...ன உணவு வசதிகள் பற்றியும், அக்கறையுடன் ...ாட்டு நிர்வாகிகள் கவனித்து வேண்டிய சவுகரியங் ...ச் செய்து தந்தனர். எது கேட்டாலும், 'இதோ' ...ற அன்புச் சொல்லும், 'வந்துவிட்டது' என்ற சலிக் ...த மொழியும் கூறிக்கொண்டு பறவைகள் எனப் ...ந்து திரிந்தனர் மாநாட்டுத் தொண்டர்கள்!

## பூரிப்பு! புத்துணர்ச்சி !!

திருச்சி மாநாடு, மாவட்ட மாநாடாகக் காட்சி ...வில்லை—மாகாண மாநாடு போலவே எல்லா வகை ...லும் இருந்தது. வெளி மாவட்டங்களிலிருந்தெல் ...ம் மக்கள் வந்திருந்தனர் சென்னை, செங்கற்பட்டு, ...ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சை, கோவை, ...லம், இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி முத ... பல்வேறு மாவட்டங்களிலிருந்தும், கழகத் தோழர் ... வந்து குழுமியிருந்தனர். நெஞ்சிலே வீரமும் ...விலே தீரமும், 'வெற்றி பெற்றேம்' என்ற பூரிப் ... 'வளர்ப்போம் கழகத்தை, வாழ்வு பெறுவோம், ...று உறுதியும் அவர்கள் முகங்களிலெல்லாம் ...சிற்று! தலைவர் பேச்சிலும், துவக்கிவைத்தவர் ...ற்பொழிவிலும், கழக முன்னேடும் வீரர்கள் பிர ...சத்திலும், பூரிப்பும் பெரு மகிழ்வும், நிறைந் ...ந்தது.

"தொழிலாளரின் துயரம், உழவரின் ஏக்கம், ...புயலென காட்டாற்று வெள்ளமென உருவாகிறது. அரசாங்கமோ, அமைதியை நிலைநாட்ட அவசரச் சட்டம், பாதுகாப்புச் சட்டம் என்ற தீப்பொறிகளை—மக்கள் மனம் எனும் எண்ணெய்க் கிடங்கில்—பறக்கவிட்ட படி உள்ளது.

இந்தப் பாசிசப் போக்கு மாறினலொழிய என்றைக்கும், ஆபத்துச் சூழ்ந்த, நிச்சயமற்ற நிலையே காணப்படும். இப்போக்குமாற, எதேச்சாதிகாரம், பாசிசம் ஒழியவேண்டும்.

மக்களாட்சி மலர, மக்களைப் பிடித்துள்ள பழைமை மடியவேண்டும். வருணாசிரமக் கொடுமை, சாதிச் சனியன், வைதீக தர்மம், புராணப் பித்தம், கண்மூடிப் பழக்கம், மூட நம்பிக்கை ஆகியவற்றையெல்லாம் அவற்றின் ஆணிவேரோடும், மக்கள் மனதிலிருந்து களைந்து எறிந்தாகவேண்டும்.

பகுத்தறிவுடன் கூடிய சிந்தனையும், சுயமரியாதையுடன் கூடிய தன்னம்பிக்கையும் தோன்றச் செய்ய வேண்டும்—மக்கள் தாங்கள் பெற்றுள்ள, வாக்குரிமையை நல்ல முறையிலே பயன் படுத்தி நல்லாட்சியை ஏற்படுத்திக்கொள்ள இவற்றை நிறைவேற்றத்தான் நமது முன்னேற்றக் கழகம் பணியாற்றுகிறது. ஆனல், அரசாங்கமோ, நமது பிரசாரத்திற்கு ஆங்காங்கே 144, பத்திரிகைகட்கு ஜாமீன், புத்தகங்கள் பறிமுதல் எழுதியவர் மீதும் அச்சடித்தவர் மீதும் வழக்கு, நாடகங்கட்குத் தடை என்ற தனிக் காட்டாட்சி முறையை கையாண்டு வருகிறது இவற்றிற்கெல்லாம் நாம் அஞ்சவில்லை. எனினும் நமது உரிமைகள் பறிக்கப்படுவதை நாம் பொறுத்துக்கொண்டிருக்கவியலாது!" என்று வரவேற்புரையாற்றிய தோழர் சங்கரன் குறிப்பிட்டார். "கட்டுண்டோம், பொறுத்திருந்தோம் காலம் மாறும்" என்பது போன்று, இதே எண்ணம், நினைவில் துடிக்க, அடக்குமுறை அம்புகள் பாய்ந்துகொண்டிருக்கும் காரணத்தால் சீறி நிற்கும் சிங்கங்களாக இருந்த கழக மக்களின், கை கொட்டுதல் முழக்கம், அலைகடலென ஒலித்தது. ஆட்சியாளரின் அடக்குமுறைகளை எதிர்த்தேயாகவேண்டும் என்பதில் அவர்களுக்கிருந்த ஆர்வத்தை மட்டுமல்ல கடமைப் பொறுப்பையும் அது காட்டியது. தோழர் நெடுஞ்செழியன் பேச்சில், தோழர் என். வி. நடராசன் சொற்பொழிவில், தோழர் சி. பி. சிற்றரசுப் பேச்சில், ஆட்சியாளரின் போக்கு பற்றி குறிப்பிடப்பட்ட இடங்களில் எல்லாம் 'அடக்குமுறையைப் பொறுத்துக்கொண்டிருக்கமாட்டோம்' என்ற வீரஒலி எழும்பியபோதெல்லாம், மாநாட்டு மக்களிடம், தாய்மார்கள் உள்படயாவருடைய இதயத்திலும் எழும்பிய வேகமும், வீரமும் அவர்களது கை தட்டல் ஒலி மூலம் வெளிப்பட்டது.

"திராவிடம் தனித்து நின்று ஆட்சிபுரிந்து மற்ற மாகாணத்தினருக்கும் வடநாட்டுப் பாசிசத்தை அழிக்கும் வழிவகையை எடுத்துக் காட்டும் குறையில் தொடர்ந்து பணியாற்ற திராவிட முன்னேற்றக்கழகம் ஒரு சிறிதும் பின்வாங்காது என்பதைநம்மை அடக்கப் பார்க்கும் அரசியலார்க்கு எடுத்துக் காட்டுகிறேன்" என்று மாநாட்டைத் துவக்கி வைத்த பெத்தாம்பாளையம் தோழர் பழனிச்சாமி முழக்கமிட்டார்.

'உரிமை உரிமை' என்ற முழக்கமும், 'அடக்கு முறையைச் சகியோம்' என்ற ஆத்திரமும் நாட்டு மக்களிடையே நிலவுவதை, இம்மாவட்ட மாநாடு நன்கு விளக்கியது. ஆளவந்தாருக்கு ஒரு எச்சரிக்கை, விடுப்பது போல இருந்தது.

## சேவைக்குப் பரிசு!

மாநாடு—பெயரளவில், ஒரு மாநாடு நடைபெற வேண்டுமேயென்பதற்காக நடைபெற்றதல்ல. நம்முடைய திராவிடர் கழகச் சரிதத்திலே, நடைபெற்ற துண்டு பல மாநாடுகள்— அதுவும் அடிக்கடி. ஒரு மாநாட்டிலாவது, பெரியார் இல்லாமல் இருக்கமாட்டார்—அநேகமாக பலமாநாடுகள் அவரது தலைமை தவிர்த்து வேறு எவருடைய தலைமையிலும், நடைபெறுது—நடைபெற்றதில்லை.'

அந்த நிலைக்கும் இன்று முகிழ்த்துள்ள புது நிலைக்குமுள்ள வேறுபாடுகள், நன்கு விளங்கின. மாநாட்டுப் பந்தலில் கூட இதே எண்ணம் நிலவியது. "கழகத்தில் ஜனநாயகம் மலர்ந்திருப்பதைப் பார்!" "உழைத்தும், உருவந் தெரியாதவர்களாக ஆக்கப்பட்டிருந்த வீரர்களைப் பார்!", "தலைமை வகிப்பவர் யார் தெரியுமா?" என்பது போன்ற சொல்லாடல்கள் பரவிக் கிடந்தன.

இந்த நிலையை, இயக்கத்தின் நரை மூதாட்டி மூவலூர் இராமாமிர்தத்தம்மையார் அவர்களின் உள்ளப், சொல்லிற்று. 'தம்பி! எத்தனையோ ஆண்டுகளாக இருந்து வருகிறேனப்பா இயக்கத்தில். ஒருநாள் கூட, எதற்கும் தலைமை தாங்கி நானறியேன். சில தினங்கள் முன் தந்தி ஒன்று வந்தது. வீட்டில்தான் என்ன நேர்ந்ததோ, உறவினரிடையில்தான் யாருக்காவது என்னமோ, என்று பதறிப்போனேன்—ஏனெனில் சாதாரணமாக எனக்கு எப்போதும் தந்தி வராது! பிரித்துப் பார்த்தால் 'தூத்துக்குடி நாடகத்துக்கு தலைமை தாங்கவேண்டும். தயவு செய்து வருக' என்று இருந்தது. பூரித்துப்போனேன், உண்மையடா, தம்பி! என் உள்ளம் அப்படி மகிழ்ந்தது இருக்காதா என்ன? காலமெல்லாம் கழகம், இயக்கம் என்று உழைத்து 'காடு வா வா, வீடு போ போ' என்ற நிலையிலிருக்கும் எனக்கு இதுஎவ்வளவு மகிழ்வைத்தந்தது தெரியுமா!" என்று ஒரு தோழரிடம் சொல்லிக்கொண்டிருந்தார். உண்மையுங்கூட! உழைத்து, கொடிதூக்கி, தடியடிப்பட்டு, "வாழ்க! வாழ்க!!" என்று வயிறு குலுங்கக்கத்தி, வீட்டையும், பாராது, மனைவி மக்கள் நினைவையும் மறந்து, உணர்ச்சி—ஏன்? வெறி!—மேலிட்டு உழைத்த, உருக்குலையும் உண்மைத்தோழர்களை நமது "பழைய" இடம் கவுரவித்ததில்லை! புன்சிரிப்பையும், பாராட்டையும் கூடப் பரிசாக வழங்கியதில்லை! ஆகவே, கூட்டுப்பொறுப்பும், "எல்லோரும் இக்கட்சித் தலைவர்" என்ற எண்ணம்

சிருஷ்டிக்கப்பட்டிருப்பதையுங்காண இயக்கத்துக்கெ
உழைக்கும் இளம்வீரர்கள் இதயம்மகிழாமலாபோகு
அவர்களும் மனிதர்கள்தானே, தனது உழைப்பு
தாம், உணரப்படுகிறது நாட்டுமக்களால் என்பன
அறிந்து மகிழ!

## "அந்த"ப் பணம்!

மாவட்ட மாநாட்டிலே, திருச்சியின் பலபாகங்க
லிருந்தும் ஏராளமான தொண்டர்களும்பிரதிநிதிகளு
மக்களும் வந்திருந்தனர். எல்லோர் இதயத்தி
மகிழ்ச்சியும், போரார்வமும் பூரித்துக்கிடந்தது. வே
மாகஉருண்டுசென்றுகொண்டிருந்த, இயக்கரதம்,இவ
யிலே வந்துவிழுந்த பாராங்கல்லால், நின்றுவிடுமே
அப்படியே கிடந்துவிடுமோ என்று எல்லோர் மனதி
எழும்பியிருந்த அச்சமும், துக்கமும் மறைந்திரு
நிலை, நன்கு விளங்கியது.

செங்கல்லும், சிமெண்டும் போட்டுக்கட்டித்த
"கற்கோட்டை"யைவிட்டு வெளியேறுவதா, எத்த
நாள் உழைப்பு, எவ்வளவுபணம் — அதுவும் ஓர
இரண்டல்லவாக நாம் தந்தபணம் — இவ்வளவை
கொடுத்துவிட்டு வருவதா, 'ஏகாந்தியாய்' வெளி
வந்து நம்மால் என்னசெய்யமுடியும், நிதியில்லையே,ப
மில்லையே, பலம் இருக்குமா என்றெல்லாம் திரா
முன்னேற்றக்கழகம் துவக்கப்பட்டநேரத்தில் சில
நண்பர்களின்உள்ளத்தில், ஏக்கமும், ஆத்திரமும்,ஆ
சமும் நிலவியது. ஆனால், இது திருச்சியில், தென்
வில்லை; சீமான்கள் நம்மிடம் இல்லைஎனினும் 'சிங்கங்க
இருக்கின்றன, பணமில்லை எனினும் திரட்டிக்கொள்
வழியுண்டு, கொடுக்க மக்கள் இருக்கிறார்கள், பத்திரி
வசதியில்லை ஆயினும் தத்தித்தவழ நம்மால் முடி
என்ற எண்ணம் எல்லோரிடையிலும் நிலவிக்கிடந்த

"பலப்பல உண்மை ஊழியர்களின் பலவருஷ
உழைப்பையும் பாழாக்கும் விதத்தில், சொந்தவிஷய
இயக்க ஏற்பாடு என்று சொல்லி, அவர்செய்துகொண்
திருமணத்தால் சில லட்சம் ரூபாயையும் நாம் இழ
வேண்டியிருந்தபோதிலும், அதற்காகக் கூட நாம்வரு
வில்லை. அந்தச்சில லட்சக்கணக்கான ரூபாய்க
அவரது தலைமையில் நாம் இருந்தவரை, நமக்கா
இயக்க வளர்ச்சிக்காக, ஏதாவது பயன்பட்டதா? த
மூக்காக உயிர்கொடுத்த தாலமுத்து நடராசன்களி
குடும்பத்திற்கு ஏதாவது உதவிசெய்ய முடிந்தத
பெருந்தனவந்தராயிருந்தும் இயக்க லட்சியத்தி
காகவே தனது மூதாதையினரால் சேர்த்துவைக்க
பட்டபொருள் அனைத்தையும் பாழாக்கி உயிர்பிரியு
வரை பெரியார், பெரியார் எனக்கூறிப் பூரிப்படை
ஈரால்வேல் வெள்ளைச்சாமியை இழந்த குடும்பத்
ரைக்காக்க முடிந்ததா? மரக்கிளையிலே பிணமா
தொங்கிய இலட்சியவாதி ஆசிரியர் வேலாயுதத்தி
துணைவியாருக்கு, அருமை மகளுக்கு "அந்தப்" பண
திலிருந்து ஒருசிறு நிதியேனும் கொடுத்துதவ மு
ததா?........பட்டிதொட்டிகளிலும், நாடு நகரங்க
ளும் பகுத்தறிவுப் பிரசாரம் செய்! அதன் காரண
மாகவே கொடும்வியாதியால் பீடிக்கப்பட்டிருந்தும்,
சாரியார் சென்னைவரும்போது அவரைப்பகிஷ்கரி
வேண்டுமெனப் பெரியார் அறிக்கை விடுத்ததும் ஓடோ
வந்து சிறைவாசம் அனுபவித்தும் ஈரோடு மாநாட்

ந்துநிற்கமுடியாத நிலையிலும் கலந்துகொண்டு
வேதான் கடைசிமாநாடு என்று சொல்லி உயிர்
த மாவீரன் பட்டுக்கோட்டை அழகிரிசாமியை
ந்து வருந்தும் அவரது அருமை குடும்பத்தாருக்கு
சிறு உதவியேனும் செய்ய அந்தப்பணம் பயன்பட்
ர்? உழைப்பையே உயிராகக்கொண்ட பெருந்தியா
ர் பலரை இழந்தபோதும் உதவாத இந்தச் சில
சருபாய்களையா நாம் பெரிதாக மதிக்கமுடியும்?"
று மாநாட்டில் தலைமைதாங்கிய தோழர் ஈ வே. அ.
ளிமுத்து அவர்கள் கேட்டார், விம்மிய உள்ளம்,
னைகலந்த சொற்களினூடே! மாநாட்டு மக்கள்,
சயவில்லை, 'அந்தப் பணம்'........என்று ஒருபெரு
சைவிட்டனர்! அதில் நாம் தந்ததுதானே' என்ற
மும் இதயஒலியும், கலந்திருந்தது என்றாலும்
துவல்ல பெரிது! எங்கள் உழைப்பு இருக்கிறது
தான் நிதி. எங்கள் வியர்வையில் சிந்தும் சிறுதுளி
தான் பணம்!" என்ற பெருமிதம் அவர்கள் முகங்
லெல்லாம் தென்பட்டது. உழைப்போம், உழைப்
ம், இன்னும் வேகமாக உழைப்போம், எப்போதை
டத் தீவிரமாக உழைப்போம் என்ற உறுதிமுழக்
மானைப்பிளந்தது!

## வீரர் முகாம்!

திருச்சி மாநாடு, உணர்ச்சி வீரர்கள் கூடிக்கலந்த
டல்ல, உருவான வேலைத்திட்டங்களுடன் மாவட்
தொண்டர்கள் பணியாற்றுவதற்கான ஊக்கமும்,
கமும், திட்டமும், அங்கு தீட்டித்தரப்பட்டன.
ற்றும் சீயங்களின், உற்சாகமும் உறுதியும், ஆர்
அங்கு கரைபுரண்டோடியது! இயக்க வளர்ச்சிக்
புது முறுக்கும், பூரிப்பும் பூத்துக்குலுங்கியது!

அகில உலக அரசியல் நிகழ்ச்சிகளும், அவைக
ம் திராவிடத்துக்கும் இருக்கும் தொடர்பும்
அரசியலமைப்பால் பொங்கிவரும் 'ஆபத்தும்',
யாளரின் அடக்குமுறை அம்புவீச்சும், இடரும்
மும் மிகுந்த எதிர்காலப் பாதையை நாம் எதிர்
கிச் செல்லவேண்டியிருப்பது பற்றியும் கழகத்தின்
ஞடுவீரர்களான தோழர்கள் க. அன்பழகன், கே.
லமேகம், டி. சண்முகம், எஸ். ஆர். சுப்ரமணியம்,
அப்பாவு, இரா. சு. தங்கப்பழம், எம். எஸ். சிவ
டி.கே. சீனிவாசன், டி. எம். பார்த்தசாரதி, இரா.
வழுதி, மா. இளஞ்செழியன், எம். எஸ். ராம
மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், சி. பி. சிற்
முல்லைக்கொம்பை வடிவேலு, மு. கருணாநிதி,
த பராங்குசம், என். எஸ். இளங்கோ, காஞ்சி.
ணசுந்தரம், தில்லை.வில்லாளன், இரா. நெடுஞ்செழி
. சங்கரய்யா, காஞ்சி. மணிமொழியார், ஏ. வி. பி.
த்தம்பி, எ. சித்தையன், அழகுமுத்து,
த எஸ். கே. சாமி, அழகரடி முத்து, ஏ. கே.
, பொருட்செல்வி அம்மையார், இராசாமடம்
திரி அம்மையார், இராம. அரங்கண்ணல் உள்
பலர், தீர்மானங்களை முன்மொழிந்தும் வழி
ந்தும் பேசுகையில் குறிப்பிட்டனர்.


றிப்பிடக்கூடிய ஒரு நிகழ்ச்சி, நடிப்புப் புலவர்
கே. ஆர். ராமசாமி, தன்னலியன்ற வரையில்,
றையிலும், ஏனைய துறைகளிலும் அறிவுப்
யப் பரப்ப முனைந்து வேலை செய்யப் போவதாக,
மாநாட்டு மக்களுக்கு, தனது உணர்ச்சி ததும்பிய சொற்பொழிவு மூலம் வெளியிட்டதாகும்.

## வளர்க தொண்டு!

திருச்சி மாநாடு, எதிர்பார்த்ததைவிட சிறும் சிறப்புமாக, பன்மடங்கு வெற்றியுடன், எல்லோரும் பூரிக்குமளவில், எல்லாவகையிலும், பாராட்டக்கூடிய வகையில் முடிந்துவிட்டது. கழகச் சரித்திரத்தில் 'கால் நாட்டு விழா'வைச் செய்து, பெருமை பெற்ற மாநாட்டு நிர்வாகிகள் அத்துணை பேரையும் திராவிடம் மறவாது. . அவர்கள் அனைவருக்கும் திராவிடத்தின் சார்பில் நமது, பூரிப்புக் கலந்த, வாழ்த்துக்கள்! "இன்னும் கூடியவிரைவில் எங்கள் மாவட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட கிளைக் கழகங்கள் ஏற்படுகிறதா, இல்லையா பாருங்களேன்!" என்று மாநாட்டுச் செயலாளர் தோழர் பராங்குசம் உணர்ச்சிப் பெருக்குடன் கூறினார். இந்த உள்ளக் கிடக்கை, இன்னொரு செயலாளரான எம். எஸ். மணி, பொருளாளர் சாப்பு, விளம்பரச் செய லாளர் வானமாமலை, தொண்டர் படைத் தலைவர் ஏ. பி. தர்மலிங்கம், தொண்டர் படைத் துணைத் தலைவர்கள் தி. உ. சிவசங்கரன், கைலாசம் ஆகிய மாநாட்டு நிர்வாகிகளைக் காணும்போதும் திருச்சி மாவட்ட கழகத் தோழர்களின் முகத்திலும் பளிச்சிட்டது.

மாவட்ட மாநாட்டுக்கு முதல் நாளிரவு நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழு கூட்டத்தில் கலந்துகொண்டு ஒவ்வொரு நிர்வாக உறுப்பினரது, இதயங்களிலும், இயக்க வளர்ச்சி பற்றி அவர்கள் கொண்டுள்ள ஆர்வமும், ஆவலும் நன்கு பிரதிபலித்தது. கூட்டத்தில் பேசிய மாவட்ட அமைப்பாளர்கள், தங்கள் தங்கள் மாவட்டத்தைப் பற்றிப் பேசியபோது, 'என் மாவட்டத்தில் இத்தனை கழகங்கள்', என்றும், 'பாருங்களேன், இன்னும் எத்தனைக் கழகங்கள்' ஏற்படப் போகின்றன வென்றும், பெருமிதத்துடன் கூறினர்! அவர்கள் ஆர்வத்தையும், வீரங் கலந்த மொழிகளையும் கண்டபோது, 'இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும் அறிவுப் பணியாற்றி. என்ற எண்ணம் மலர்ந்தது நம் அகமெலாம் மகிழ்ந்தது. திருச்சி மாவட்ட மாநாட்டைத் தொடர்ந்து, பிற மாவட்டங்களிலும் மாவட்ட மாநாடுகள் தொடர்ந்து நடக்குமென அறிகிறோம். குறிப்பாக கோவை, சென்னை முதலிய இடங்களில் விரைவில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இதையெல்லாம் காணும்போது, இருள் நிறைந்த திராவிடத்தில் மலர்ச்சி வேண்டும்—என்ற திராவிட மக்களின், கழக வீரர்களின் உணர்ச்சிப் பெருக்கையும், உத்வேகத்தையும் காணும்போது நம் உள்ளம் பூரிக்கிறது! தொண்டர்களையும், முன்னேடும் வீரர்களையும் காணும்பொழுது, இதயம் மகிழ்வால் பூத்துக் குலுங்குகிறது!

வாழ்க அவர்கள், வளர்க அவர்கள் தொண்டு என்று நம் வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம், ஏராளமான உறுப்பினர்களும், கிளைக் கழகங்களும், புயல் வேகத்தில், நமது கழகத்திற்கு ஏற்படும் என்ற நம்பிக்கை மலர்ச்சியுடன்!



# நாடகப் பணி

போர்! போர்!! என்று கர்ஜித்தான், காடுமேடு எங்கும் அவன் குரல் எதிரொலித்தது. தாக்கு அந்த எதிரிப்படையை, வளைத்துக்கொள் இந்தக்கூட்டத்தை, விடாதே பிடி இவர்களை என்ற அவனது வீரச்சொற்களை எதிர்நோக்கி எண்ணற்ற கட்டிளங் காளைகள் அணிவகுத்து நின்றனர்! அவன் சொல்லே சட்டம், புன்சிரிப்பே பரிசு என்று பூரித்துக் குலுங்கிய, வீராதி வீரர்கள் காத்துக் கிடந்தனர் அவன் கட்டளையை எதிர்நோக்கி!

குதிரைகளின் குளம்படிச்சத்தம், 'கொட்டு முரசு' என்ற வீர முழக்கம், வேழங்களின் அலறல், விலாவிலே பாய்ந்த ஈட்டியை எடுத்தெறிந்துவிட்டு 'இதோ வந்தேனடா' என்று எதிரிமீது பாயும் படைவீரர்களின் ஆவேசக் கூச்சலன்றி—அவன் எதையும் கண்டதில்லை!

'மராட்டிய மண்ணை' மாதாவே என அர்ச்சித்தான், தாய்க்கு விலங்கா? சகியேன் என்று கூவினான், அவன் கொக்கரிப்பு பரந்துவிரிந்த முகம்மதிய சாம்ராஜ்யத்தைக் கட கடவென ஆடச்செய்தது! படைபலமும், புஜ வலிவும் நிரம்பிய முகம்மதிய சக்கரவர்த்தி, அவன் பெயரைக் கேட்டு அலறினார், "சிவாஜி" என்ற பெயர் அவுரங்கசீப்பின் அரசவையை நடுங்கவைத்தது! 'மலை எலி' என்றனர், சீறும்புலி என்று கூறினர், சிறப்புப் பெயர்கள் எல்லாம் அவனுக்கிட்டு அழைத்தனர், அவனது சர்தார்கள்!

மாவீரன், மராட்டியத்தைப் பிழைக்கவைத்த தீரன் என்று மண்டலம் புகழ்ந்தது! 'மகராஜ்!' என்று அவனை அழைத்து, வெற்றி வீரனுக்கு விருது அளித்து, அரியாசனம் அமர்த்தி, கண்ணுள்ளபோதே காணவேண்டும் அக்காட்சியை என்று அவன் படைத்தலைவர்கள், நாட்டு மக்கள் துடித்தனர்! தோள் தட்டி வாள் நீட்டி, தலைகளைச் சாய்த்து, வெற்றிகண்ட வீரன் எம் தலைவன், மராட்டிய மாணிக்கம், என்று பெருமை பேசி, பூரித்துக் கிடந்தனர்!

ஆனால், வெற்றிச் சிங்கத்தை, வீராதி வீரனை, ரணக்களச் சூரனை, பயமறியாப் புலியை, ஒரு சிறு புல்லேந்தி தன் தாள் ஏந்தும்படி செய்தான்!

'வாள் ஏந்துகிறான்—அவன்! கூர்மையான வாள்! ஆனால், அசடுகளே இதோ பாருங்கள் இது கேவலம் சிறுபுல்—இதைத்தான் நான் ஏந்துகிறேன். அது உலர்ந்துபோன புல்லடா, புல்!, என்று கூறிக்கொண் வேதியகுல காகபட்டர், அந்த வாளேந்திய கை தன் காலேந்தும்படி செய்தான்!

"அஸ்திரம் சஸ்திரம் அவனிடம்!" "ஆக சாஸ்திரம் நம்மிடம்!!" என்று கூறி அந்த வீ கோழையாக்கினான்! 'நீ சூத்திர குலமடா சிவா என்று கூறி, மண்டியிட்டறியாத மாவீரனை, 'நாங் பூதேவாடா, பூதேவா!' என்ற பொய்யுரை காட் வீழ்த்தினான்!

மண்டலாதிபதியை, கமண்டலம் அடக்கிவிட்ட புல்லேந்தியின் ஆசி வீர சிவாஜிக்கு வேண்டியதாயி பூபதியாக! தன் வியர்வை சிந்தி, தன் வீரர்கள் இ தம் கொட்டிச் சிருஷ்டித்த மராட்டிய சாம்ராஜ்யத்தி மணிமுடி ஏந்த, காசிவாசி காகபட்டரின் நல்லாசி நாடவேண்டியதாயிற்று அவன்! பூசுரர்களின் கட சம்மதவை அவன் பூமண்டலம் ஆள என்ற நிலை பட்டது! வீரனைக் கோழையாக்கியது, 'மண் பு மாணிக்கத்தை தலை வணங்கச் செய்தது, எலி புலி அடக்கிற்று, எறும்பு யானையைத் தலைகுனிய வைத்த

இத்தகைய சோகச் சித்திரம், ஒரு மாபெரு சாம்ராஜ்யம் சரிந்த நிகழ்ச்சிக் கதைதா "சந்திரமோகன்".

*  *  *

கடந்த டிசம்பர் 24-ந் தேதி முதல் புத்தாண் முதல் நாள் வரை இச்சரித்திரச் சித்திரம் தூத்துக்கு விருதுநகர், புதுக்கோட்டை, திருச்சி ஆகிய இடங்களி ஆறு நாட்கள் நடிக்கப்பட்டிருக்கின்றன — திராவி முன்னேற்றக் கழகத் தோழர்களால். சாம்ராஜ் சரிந்ததன் வகையை எடுத்துக் காட்டி, சாதியும் பே மும், சனாதனத்தால் நிலை நாட்டப்படும் நோக்கத்தை விளக்கி, மக்களிடை அறிவு மலர வேண்டும் என் மகத்தான நன்னோக்கின்மீது நடித்துக் காட்டப்படு தாகும் இந்நாடகம். திருச்சி தவிர்த்து ஏனைய இட களில், குழந்தை நிலையிலிருக்கும் திராவிட முன்னே றக் கழக நிதிக்காக, நடத்தப்பட்டது. தூத்துக்கு யில், "சந்திரமோகன்" மட்டுமின்றி, "நீதிதேவன் ம கம்" என்ற சிந்தனையைக் கிளறும் இன்னொரு நா

ும் நடத்தப்பட்டது. இராவணன் — தென்னாட்டு வந்தன்—மீது கம்பராமாயணத்தில் கம்பர் சாட்டியிருக் தம் "இரக்கமேனும் ஒரு பொருளிலா அரக்கன்" என்ற ற்றச்சாட்டை வைத்துக்கொண்டு, எழுதப்பட்ட ாகும் இந்நாடகம். அகலிகையைப் பெண்ணாக்கினர் ளதமர், அவருக்கிருந்ததா இரக்கம். அவளைப் பெண்ணுருவாக்கின ராமன் தன் மனைவி சீதையை— ட்டு மாதக் கர்ப்பிணியான ஜானகியை—காட்டுக்கு ரட்டினனே அவனுக்கிருந்ததா இரக்கம், குழந்தை ட்டிகளைக் கொன்று வீழ்த்தினனே கோட்புலி. அவருக்கிருந்ததா, சிஷ்யன் கட்டை விரலை காணிக்கை ரக் கேட்டாரே துரோணாச்சாரி அவரிடம் இரக்கம் இருந்ததா என்பன போன்ற பல புராண சம்பவங் ளையும், தற்போது நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சி லில் 'இரக்கம் இருக்கிறதா?' என்ற பல நிகழ்ச்சிகளை ம் வைத்து எழுதப்பட்டதாகும் இந்நாடகம்.

*  *  *

தூத்துக்குடி, விருதுநகர், புதுக்கோட்டை முத ய இடங்களில் 'இயக்க நிதி'க்கென நடைபெற்ற நாட ங்களை முறையே அந்தந்த ஊர் திராவிட முன்னேற் க் கழகத்தினர் முன்னின்று, நடத்திக் கொடுத்தனர். ருச்சி நாடகம், மாவட்ட மாநாடு காரணமாக நடை பெற்றது. எங்கும், நடிகத் தோழர்களுக்கு நல்ல வரவேற்பும், உபசாரமும் இருந்தது. கழகத் தோழர் ளின் பெருமகிழ்ச்சியும், முன்னேடும் வீரர்களின் கமலர்ச்சியும், 'இது வேண்டுமா அது தேவையா?' ன்று அகமகிழ்வுடன் உபசரித்தப் பெருமையும்- ாட்டக்கூடியது மட்டுமல்ல; நினைவை விட்டு என் ம் நீங்காது!

அறிவுப் பணிக்கென ஆர்வத்துடன், கழக வளர்ச் ய கண் இமைபோல் காக்கும் கவலைப் பொறுப்புடன் யாடி, ஒத்துழைத்து, நாடகங்களை நடத்தித் தந்த வொரு ஊர் தோழர்களையும் எவ்வளவு பாராட்டி லும் போதாது. தூத்துக்குடித் தோழர்கள் தொண் , விருதுநகர்த் தோழர்களின் சேவையும், புதுக் ட்டைத் தோழர்களின் பொதுப் பணி டார்வமும், ஞ்சைப் பூரிக்கச் செய்கின்றன.

கழகத் தோழர்களின் ஆர்வத்தையும், அறிவுப் ரியில் அவர்களுக்குள்ள ஆசையையும், காணும் ருடைய இதயமும் குதூகலத்தால் விம்மி, விம்மி த்தான் செய்யும்!

*  *  *

இயக்க நிதிக்கென நடைபெற்ற நாடகங்களிலும், ாட்டில் நிகழ்ந்த நாடகத்திலும் நடிப்புப் புலவர், முகத்தோழர், கழக வளர்ச்சியில் மட்டிலாப் ார்வத்துடன் திளைத்து நிற்கும் நண்பர் கே. ஆர். சாமி, தனது முக்கிய அலுவல்களை ஒரு புற துக்கிவிட்டு, வந்து கலந்துகொண்டது பூரிப்படை கூடியதாகும். அதுமட்டுமின்றி அவரது நாடக த் தோழர்களான எம். என். கிருஷ்ணன், மணி, பையன் முதலியோரும், மகிழ்ச்சிப் பெருக்குடன் ருந்து, கடமையுள்ளத்துடன் தொண்டுபுரிந்தனர். க் குழுவைச்சேர்ந்த, பல இயக்கத் தோழர்களும், உண்டுகளித்து உறங்கும் நிலை கொண்டவர்களல்ல! தனது உழைப்பை நம்பி வாழ்பவர்கள் பலர், பல வேலைகளில் ஈடுபட்டிருப்பவர்கள் பலர், தடுக்கமுடியா 'தடைக்கற்களை' தடுத்து வரவேண்டியவர் பலர்; இருந் தும் யாவரும், 'இயக்கத்தின் வளர்ச்சி எம் வாழ்வு' என்ற இதயங் கொண்ட இளங்காளைகள் என்பதால் 'எத்தனை நாள் ஆனலென்ன? எது வந்தாலும் தாங் கத் தடந்தோள் உண்டு!' என்று, சிரமம் பாராட் டாது, வந்து, எல்லா ஊர்களிலும், ஏற்ற பாத்திரத் தைப் பொறுப்புணர்ச்சியுடன் நடித்துத் தங்களுக்குப் பொதுவாழ்விலிருக்கும் பேரார்வத்தை மக்களுடன் பங்கிட்டுக் கொண்டார்கள். அவர்களது சேவை யுணர்ச்சியும், கடமைப் பொறுப்பும், கண்ணியமும்— எடுத்துக்கூற எடுத்துக்கூற விரியும்!

"சந்திரமோகன்" "நீதிதேவன் மயக்கம்" என்ற இரு நாடகங்களிலும் கலந்து கொண்ட இயக்கத் தோழர்கள்:—

கே. ஆர். ஆர். நாடகசபை

கே. ஆர். ராமசாமி, எம். என். கிருஷ்ணன், பி. எம். மணி பி. எஸ். சுப்பையன், உசேன்.

சென்னை

க. அன்பழகன், சந்தானம், நம்மாள்வார், இரத் தினம்.

காஞ்சிபுரம்

காஞ்சி. கல்யாணசுந்தரம், ஈழத்தடிகள், சி. வி. ராசகோபால், சம்பந்தம், கே. டி. எஸ். மணி, இராசா பாதர், கிருஷ்ணமூர்த்தி, தயானந்தம், சுப்ரமணியம், வெங்கட்டராமன், பிரகாசம், தக்கோலம். நரசிம்மன், மாணிக்கம், இராம. அரங்கண்ணல். அண்ணாத்துரை. ஈரோடு:— ஈ. வி. கே. சம்பத்து.

நாடகங்களிலெல்லாம், ஒத்துழைத்து, பேரார்வத் துடன் ஆவன செய்து தந்த பின்னணி கீதக்குழுவின ரான தோழர்கள் காஞ்சிபுரம் சண்முகானந்தா, ஆபீலா வேட அலங்கரிப்புத் தோழர்களான சென்னை சி. எம். நாராயணசாமி, காஞ்சி. சுந்தரேசன், உடை அலங்கரிப் புத் தோழர் இராசையா, 'சீன்' அலங்கரிப்புத் தோழர் ஆறுமுகம் (கே. ஆர். ஆர். நாடகசபை) ஆகியோரது கூட்டு முயற்சியும், ஒத்துழைப்பும், மிக்வும் போற்றத் தக்கவை, புகழத்தக்கவை.

அறிவுப் பணி புரிவதை இலட்சியமாகக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழக வளர்ச்சி நிதிக்கென, பழைமையையும் சனாதனச் சூதையும், புளுகுப் புரா ணங்களையும் மக்களுக்கு எடுத்துக் காட்டும் நோக்கத் துடன் இந்நாடகங்கள், ஆங்காங்கு, நடிக்கப்பட்டன. ஒவ்வொரு ஊரிலும், எதிர்பார்க்காத அளவில், ஆயிரக் கணக்கான மக்கள் இந்நாடகங்களைக் கண்டு மகிழ்ந் தனர். தூத்துக்குடியில், விருதுநகரில், புதுக்கோட் டையில், திருச்சியில் எங்கும் திரள் திரளான மக்கள் குழுமினர், கண்டு களித்தனர்.

'தசாவதாரமும்' 'கிருஷ்ண லீலா'வும், 'சிவ லீலா' வுமே. வசூலைத் தரக்கூடிய நாடகங்கள், மக்கள் மனதைக் கவரக்கூடியவை, என்று இன்னும் இங் குள்ள நாடக மணிகள் 'அர்த்தநாரீசுவரர்'களாகப்

பேசுகிறார்களல்லவா, பகுத்தறிவுவாதியாக ஒரு சமயத்திலும், பரம பக்தனாக இன்னொரு வேளையிலும் நடித்துக்கொண்டு, அவர்கள் கண்ணை, "அறிவிப்பணிக்கான நாடகங்களே எங்களைக் கவருகின்றன" என்று கூறித் திறந்துவைப்பதுபோல, ஆங்காங்கும் பொது மக்கள் குவிந்தனர். நாடகத்தைக் கண்டனர்—ரசித்தனர்—களிப்பு ஒரு பக்கமும் சிந்தனை இன்னொரு பக்கமுமாகச் சென்றனர்! பகுத்தறிவுப் பணிக்கு, நாட்டில் ஏற்பட்டுள்ள வரவேற்பு, இந்நாடகங்களைக் கண்டு திரும்பியோரைக் கண்டபோது விளங்கியது.

நல்லதங்காளும், சத்தியவான் சாவித்திரியும், திருப்பிழிசை ஆழ்வாரும், தவிர்த்து, வேறு ஏதாவதுசமூக நாடகங்களோ, மக்கள் மனதில் நல்லறிவை எழுப்பக் கூடியவைகளையோ நடித்தால், பணம் கிடைக்காது பலனேற்படாது என்று பலபடக்கூறுவர் 'ஏதோ, தங்கட்கு அறிவுப்பணி புரிவதற்கு ஆசை அதிகமாக இருப்பது போலவும், ஆனால் "வாழ்வு" என்ற ஒன்று அதைத் தடுப்பதுபோலவும் ஆகவே 'கம்பெனி' நடைபெறவேண்டுமே என்ற கவலையின் காரணமாகவே தாங்கள் 'ஏராத மலைதனிலே கந்தா எருது இரண்டு தத்தளிக்க.........' என்று பாடி நடிக்கவேண்டியிருப்பதாகக் கூறுவதுண்டு—இப்போது அல்ல, சிலஆண்டுகள்முன்பு, அந்த "அர்த்தநாரீசுவரர்களில்' இப்போதும் சிலர் இருந்து கொண்டுதான் இருக்கின்றனர். எனினும், இன்று நாட்டில், மக்களிடையில் கலைவாழ்வில் எழும்பியுள்ள மறுமலர்ச்சி—விதண்டாவாதத்தை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு சிந்தனையைச்சிறிது செலவிடவேண்டிய ஒன்றாகும்.

அறிவத்துளிகளைச் சிதறும் நாடகங்களுக்குப் போகுமளவு மக்கள் இப்போது புராண நாடகங்களை விரும்பவில்லை. சமுதாய நாடகங்கள் பொதுமக்கள்மனதைக்கவர்ந்து வருகின்றன. நகரத்தில்மட்டும் என்றல்ல நாட்டில் சாதாரண கூத்தனும் காத்தனும் சேர்ந்துநடிக்கும் நாடகங்களில்கூட புதுமையும், கருத்தொளியும் பரவ ஆரம்பித்துவிட்டது. "வள்ளிக்கணவர் பேரை" பாடினால் ரசித்துக்கொட்டிய மகாஜனங்களுக்கு இப்போது, "ஆளவந்தார் அட்டூழியத்தைப்பாரு!" 'சாதி மதமெனுந்தீது..........." என்ற பாட்டுக்கள் பிடித்திருக்கின்றன. சாவித்திரியிடம் வந்து தர்பார் நடத்தும் யமனை இப்போது அவர்கள் விரும்பவில்லை ஆனால் "சாதி" என்று சொல்லிக்கொண்டு மக்களிடையில்தீங்கு புரிபவர்களின் அட்டகாசங்களை 'மேடையில்' காண்பதில், ஆசைகொண்டிருக்கிறார்கள். அவ்வளவுதூரம் சீர்திருத்தப்பணிக்கு கலைவாழ்வில் வெற்றி ஏற்பட்டிருக்கிறது—அதுவும் கிட்டதட்ட ஐந்து ஆண்டுகளில் "அர்த்தநாரீசுவரர்களைத்தவிர" நாட்டு நலனிலும் மக்கள்வாழ்விலும் அக்கறையும் ஆவலும்கொண்ட நாடகமணிகள் நடிக்கத்துவங்கியிருக்கும் அறிவுப்பணிக்கான நாடகங்கள் அனந்தம். சீர்திருத்த நாடகங்களால் வசூலும் வருவாயும் அதிகமிருப்பது உண்மை. 'சிவலீலா' வைவிட 'மனிதன்' மக்கள் மனதைக் கவரச்செய்து, வசூலை வாரித்தருகிறது, என்றநிலை இன்று நாட்டுக்கலை வாழ்விலே அரும்பி, மலர்ந்துள்ளது. உண்மையில்இன்றையநாடகசபைகளை நெஞ்சில் வைத்து நினைத்தால் எவர் இதயமும் மகிழத்தான் செய்யும், கிட்டதட்ட

இந்த ஐந்துஆண்டுகளில் வளர்ந்திருக்கும் அறிவுப் பணிக்கான நாடகப்பட்டியலைப் பாருங்கள்.

| | |
|---|---|
| மனிதன் | பைத்தியக்காரன் |
| நாம் இருவர் | முள்ளில் ரோஜா |
| ஓரே முத்தம் | பெண் |
| என் தங்கை | ஜீவன் |
| விதி | கவியின் கனவு |
| என் காணிக்கை | வீரவாலி |
| மகாத்மா தொண்டன் | இரத்தக் கண்ணீர் |
| சாந்தா | தூக்கு மேடை |
| தமிழன் பெருமை | மந்திரி குமாரி |
| மணமகள் | அந்தமான் கைதி |
| இமயத்தில் நாம் | விமலா |
| போர்வாள் | |
| குடும்பவாழ்க்கை | வேலைக்காரன் |
| சிவாஜி | ஏழைப்பெண் |
| மலைநாட்டுக்கள்வன் | சர்வாதிகாரி |
| பயங்கரி | சந்திரோதயம் |
| வேலைக்காரி | ஓர் இரவு |
| சந்திரமோகன் | நீதிதேவன் மயக்கம் |
| பராசக்தி | உயிரோவியம் |
| தாக சாந்தி | புயலுக்குப் பின்? |
| மருமகள் | புரட்சி |
| எதிர்பார்த்தது | தோழன் |
| துளி விஷம் | அணையா விளக்கு |
| சூறாவளி | சிலம்பு |

(அடுத்த பக்கம் பார்க்க)

## யாருக்கு லாபம்?

—❀—

பரமசிவன் அருள்புரிய வந்துவந்து
போவார்!

பதிவிரதைக் கின்னல்வரும் பழையபடி
தீரும்!

சிரமமொடு நாளமெண்ணிப் போட்டி
யிலே பாட்டுச்

சிலபாடி மிருதங்கம் ஆவர்த்தம் தந்து

வரும்காதல்! அவ்விதமே துன்பம்வரும்,
போகும்!

மகரிஷிகள் கோயில்குளம்—இவைகள்
கதாசாரம்.

இரக்கமற்ற படமுதலாளிக்கெல்லாம் இதனால்

ஏழைகளின் ரத்தத்தை உறிஞ்சியது
லாபம்!

—புரட்சிக் கவிஞர்.

மாம், நம் நினைவுக்கு எட்டிய மட்டிலுள்ள நாடகங் ளின் பட்டியல் இது! இந்தப் பட்டியல் இத்துடன் ன்றுவிடுவதில்லை—இன்னும் இதுபோன்ற எத்தனையோ டகங்கள், பழைமையில் மாற்றங்கொண்ட அறிவுப் ணி நாடகங்கள் நடைபெற்று வருகின்றன — தினசரி திகமாகி வருகின்றன. கலை வாழ்வில் ஈடுபட்டு சேவை ரிந்துவரும் டி. கே. எஸ். சகோதரர்கள் நாடக சபை, க்தி நாடக சபை, தேவி நாடக சபை, எம். ஆர். ராதா டக சபை, ராமா டாலகானசபை, கே. ஆர். ஆர். நாடக பை போன்ற பல நாடகசபைகளில் இந்த நாடகங்கள் டைபெற்று வருகின்றன!

இது தவிர்த்து, சாதாரணமாக, படிப்பக நிதிக் ம் பள்ளிக்கூட நிதிக்கும், உல்லாசத்துக்கும், ஓய்வுச் கத்திலும், அன்றாடம் அடிக்கடி நடத்தப்படும் நாட ங்கள் பலப்பல! அந்த நாடகங்களிலெல்லாம் முன்பு குந்தலை' இருந்திருப்பாள், 'மயில் ராவணன்' இருந் ருப்பான், ஆனால் இன்று அவைகள் 'கேலி'க்குரிய வகளாகிவிட்டன. சமுதாய ஏழ்மையை, துன்பத்தைச் த்தரிக்கும் நாடகங்களை நடிப்பது தான் நல்லது, ராண நாடகங்களை நடிப்பது அருவருக்கத் தக்கது ன்ற அளவுக்கு மாறிவிட்டது.

நாட்டில் நாலு பக்கங்களிலும் நடைபெற்றுவரும் த்தகைய அறிவுப்பணிக்கான நாடகங்களிலெல்லாம் முழு சுயமரியாதைக் கொள்கைகளை கொண்டதாக ம், பல சுயமரியாதைக் கொள்கைகளை உள்ளடக்கிய யாகவும் இருக்கின்றன. இதை எவரும் மறுக்க டியாது.

தொழிலாளர் துயரம் முதலாளியின் முரட்டுத்த ம் கொண்ட 'என் காணிக்கை,' பொருந்தாமணத்தின் வுகளை விளக்கும் 'அந்தமான் கைதி,' தன் கற்பிழந் ள் தமிழ்க்கணிகை என்று கூறிய வடநாட்டு ஆரிய னர் கனகவிசயர் தலையில் கல்லேற்றிய சேரன் செங் டுவனின்—தமிழ் வேந்தனின்—வீரத்தைச் சித்த கும் 'இமயத்தில் நாம்,' பழந்தமிழ் காவியமாம் குண் கேசியின் காவியச் சுவையுடன் தற்போதைய நாட்டு யை வைத்து நன்கு, அழகுபட சித்தரிக்கப்பட்டி கும் "மந்திரி குமாரி," விதவைத் துயர் ஒலிக்கும் த்யக்காரன்,' கிழவன் குமரியை மணக்க விரும்புதல் து என்று எடுத்துக்காட்டும் 'நாம் இருவர்,' காட் திரியும் ஏழை மகனுக்கும் எழுடுக்கு மாளிகையில் ழும் மன்னன் மகளுக்கும் திருமணம் முடித்து த்து ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை யில் என்று கூறும் 'ஓரே முத்தம்,' வந்தவனின் ஞ்சகம் ஒரு நாட்டை அரித்துக்குலைத்ததை எடுத் சொல்லும் 'கவியின் கனவு,' வேஷமணிந்த வேதாந் ன் கபடநாடகங்களைக் காட்டும் 'புயலுக்குப் பின்,' ன்ற, முன்பு நாம் குறிப்பிட்ட அத்தனை நாடகங் ளும், நாட்டுக்குத் தேவையான நற்கருத்துக்கள் க்கின்றன—விரிந்து படர்ந்து கிடக்கின்றன. 'சந்தி யம்' 'தூக்குமேடை' 'போர்வாள்' போன்ற நாட ள், சமுதாய வாழ்வின் அவலத்தை பல முனைகளி தும் காட்டுபவை—முதலிலிருந்து கடைசிவரை நிலைமையை வைத்தே 'சுயமரியாதை' எண்ணங்க ள் சித்தரிக்கப்பட்டவை. இந்த நாடகங்கள் சீர் தப் பணிக்கெனவே எழுதப்பட்டவையாகும். இன்று நாடகசபைகளில் நடத் தப்பட்டு வரும் நாடகங்கள் யாவும், அறிவுப் பணியை அடிப்படையாக வைத்து அதன் மீது ரசமான சம்பவங் களைப் பொருத்தி அமைக்கப்பட்டிருப்பனவாகும். எவை எதிலும் பழைமைக்கு எதிர்ப்பும், சனாதனத்துக் குச் சவுக்கடியும் பணத்திமிருக்கு கண்டனமும் இல் லாமலில்லை—நாட்டு நிலையைச் சித்தரிக்கும் நிகழ்ச்சி கள் இல்லாமலில்லை!

நாட்டின் நிலையை எடுத்துக்காட்டி, அங்குநிலவும் அறியாமையைவிளக்கி,இருளை நீக்கிநல்வாழ்வுக்கானவழி வேண்டும் என்பதுதான்—அறிவுப்பணியாளர்களுடைய ஆர்வமும், பொதுப்பணியுமாகும். இந்தப்பொதுநல அறிவுவளர்ச்சிப் பணிக்கு, ஆரம்பத்தில் எதிர்ப்பும் கண்டனமும் எழும்பினாலும் வரவர ஆதரவும் பலமும் அதிகமாகத்தான் செய்யும்—இந்தப்பணி மக்கள்வாழ்வு பற்றியதாக இருப்பதால், பலஆண்டுகள் முன்எதிர்ப்பு கிளம்பிய இடத்திலிருந்தே ஆதரவு கிளம்புகிறது இப்போது.—புராண நாடகங்களே வசூலைக்கொடுக்கும் என்று கூறியவர்களே "சீர்திருத்த நாடகம்தான்தேவை பணபெட்டி நிரம்ப" என்று கூறுமளவுக்கு வந்திருக்கி றார்கள். அவ்வளவு தூரம் மக்கள் மனதில் சீர்திருத்தம், அறிவுப்பணி ஆகியவைகள் குறித்து ஆவலும் ஆர்வ மும் அதிகமாகி வருகிறது!

• • •

மக்களிடையே மலர்ந்துள்ள இந்த மறுமலர்ச்சி, நன்கு, வெளிப்பட்டது, "சந்திரமோகன்" நடைபெற்ற ஆறு ஊர்களிலும்! ஆனால் நாட்டில் மலர்ந்திருக்கும் இந்த மாற்றம் நாட்டை ஆளவந்த 'கனவான்'களின் கண்ணில் படவில்லை போலும்!

ஏதோ, நமது இயக்கத்தார் ஒரு நாடகம் நடத்து கிறார்கள் என்றால் அதைத் தடுத்து விடுவதிலே ஆசை யும், அதனால் ஒரு எதிர்க் கட்சியின் வாயை மூடி விட்டோமென்ற எக்களிப்பும் கொள்ள ஆரம்பிக்கிறார் கள்—சீப்பை எடுத்துமறைத்து விட்டால் திருமணமே நின்று விடும் என்று கருதினானே ஒரு சிந்தையில் தெளிவில்லாதவன் அதைப் போல!

நமது நாடகங்கள், நமது இயக்க நண்பர்களால் நடிக்கப்படும் நிகழ்ச்சிகள் என்றால, 'இந்தா தடையுத் தரவு! என்று அடக்குமுறைகளை வீசுவதுதான் அழகு என்று எண்ணுகிறார்கள். ஆனால், பாவம், ஆத்திரம் நாட்டு நிலைமையை அவர்களை மறக்கச் செய்கிறது போலும். மறந்துவிடுகிறார்கள் அறிவுப் பணி சுயமரி யாதைக் கொள்கை தீயென திக்கட்டும் பரவிவருகிறது என்பதை!

அறிவுப்பணி—அடிக்க அடிக்க உந்தி எழும் பந்து, இதையாவது இந்த "ஆளவந்தார்" உணர்ந்தால் நல் லது! எங்கே, உணரப் போகிறார்கள் மக்களிடம் நிலவும் நிலையையும் வளரும் எண்ணங்களுந்தான் இவர்கள் இத யத்தில் படுவதில்லையே! எனினும் காலத்தை—கையால் பிடித்து நிறுத்தி விட முடியாது, அது உருண்டோடி டும் சக்கரம் என்பது, "சந்திரமோகன்" சுற்றுப்பய ணம் நமக்கு அளித்த புதுச் செய்தி!

# ★ சபலம் ★

மு. கருணாநிதி

காற்றைக் கிழித்துக்கொண்டு 'இந்தோ சிலோன் எக்ஸ்பிரஸ்' திருச்சி நோக்கிப் பறந்துகொண்டிருந்தது. சென்னையில் இரவு 8-மணிக்கு வண்டியில் ஏறியவர்கள் அலுப்போடும், களைப்போடும் போராடிக்கொண்டே முதுகை வளைத்துக்கொண்டே அமர்ந்திருந்தனர். சென்னை ரயில் நிலையத்தில் இடம் வாடகைக்கு விடும் பொடிப்பயல்கள் பலருண்டு. அவர்கள் தங்கள் வாழ்க்கையை இப்படியே நடத்திப் பழகிக் கொள்கிறார்கள்.

வண்டியில் ஏறியோ—அல்லது ஏறாமல் ரயில் மேடையைச் சுற்றிக்கொண்டோ இடம் அகப்படுமா என்று தவித்துக்கொண்டிருக்கிறவர்களிடம்,கதைகளில் 'பகவான்பிரத்யட்சமாவதுபோல' ஒரு பொடியன் வந்து நிற்பான்."சாமீ! இங்கே வாங்க நல்ல இடம் என்பான்" அவன் கூடச் சென்றால் போதும்; வண்டிக்குள் அருமையான இடத்தைக்காட்டி—பலகையில் அவன் விரித்திருந்த பட்டு மெத்தையை எடுத்து முண்டாசு கட்டிக்கொள்வான். அந்த இடத்தில் தூங்குவதற்கு—டிக்கட் பணம் போக—அவனுக்கு ஒரு நாலணா வாடகை. இப்படிப் பல பையன்கள் வாடகை வியாபாரம் நடத்துவார்கள். அவர்கள் கண்ணில் அகப்பட்டு கருணைக்குப் பாத்திரமான பிரயாணிகள் கண்ணயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர். அந்தப் பாக்கியம் கிடைக்காத பலர் கண்ணுக்குள் நுழைந்து இமைகளைப் பிடித்திழுத்து மூடும் உறக்கத்தை எதிர்க்கத் துணிவற்று ஒருவரோடொருவர் மோதிக்கொண்டிருந்தனர். கழுத்தில் நிற்கச் சக்தியிழந்து தொங்கும் தலையை முழங்காலிலோ—பக்கத்திலிருப்பவர் தோள் பட்டையிலோ—அல்லது ஜன்னல் கட்டையிலோ முட்டுக்கொடுத்துக் கொண்டு அயர்ந்திருந்த காட்சி பரிதாபமாயிருந்தது.

இந்தக் "கும்பகர்ண லோக"த்தில் கொட்டை கொட்டையாக விழித்துக் கொண்டிருந்தவர்களும் இல்லாமலில்லை. நூற்றுக்கு ஒருவராவது இருக்கத்தான் செய்தனர். வண்டியில் ஆறாவது பெட்டியில் ஜன்னல் வழியாகக்கூட கால்களை வெளியே சிறிது நீட்டிக்கொண்டு கஷ்டப்பட்டு பலர் குறட்டை விட்டுக் கொண்டிருந்தனர். நீண்ட ஒரு பலகையின் மூலையில் உட்கார்ந்திருந்த ஒருவன், அலுப்பைப்பற்றிய அக்கரைகள் எதுவுமில்லாமல—ஏதோ ஒரு உணர்ச்சியில் அங்குமிங்கும் பார்ப்பதும், பலகைக்கு கீழே கவனிப்பதுமாயிருந்தான். அவனுக்கு எதிரில் மற்றொரு பலகையில் மற்றொரு வாலிபன், கண்களை மூடிக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அவன் விழிகள் மூடியிருந்தனவே தவிர—அவன் தூங்கவில்லை யென்பது தெளிவாயிற்று. விழிகளும் மூக்கால்பாகந்தான் அடைபட்டிருந்தன. கால்பாகத்தின் வழியாக அவன் பார்வை எதிரில் உட்கார்ந்திருக்கும் வாலிபனையும், பலகைக்கு கீழே படுத்திருக்கும் ஒரு பெண்ணையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தன.

அவனும் சந்திராவும், அவர்கள் குழந்தையுடன்
சென்னையிலதான் ஏறினார்கள். அவர்கள் ஏறி உட்
கார்ந்து சிறிது நேரத்துக்கெல்லாம் எதிர்ப்பக்கத்தில்
அந்த தூங்காத வாலிபன் வந்து உட்கார்ந்தான்
வந்தவன் எதிர்பாராவிதமாக அங்குவந்து அமரவில்லை
எல்லாப் பெட்டிகளையும் ஒருமுறைக்கு இரண்டுமுறை
யாக கவனித்துவிட்டு கடைசியில் இங்குவந்து ஏறி
கொண்டான். சந்திராவின் கையிலிருந்த குழந்தை
அருகிலிருந்த ஒரு கிழவியின் நரைமயிரைத் த
தளிர்க்கரங்களால் பிடித்திழுக்கவே—கிழவி பொக்
வாய்ச் சிரிப்பை உதிர்த்துக்கொண்டே அ
மழலை இடமிருந்து தலையை விடுவித்துக் கொ
டாள். இதோடு கிழவி சும்மாயிருக்கவில்லை. கிழ
களின் குணமே—நல்லதோ கெட்டதோ ஏதாவ
பேசிக்கொண்டிருக்க வேண்டுமல்லவா?.......அதுவு
குழந்தையென்றால் கேட்கவேணடுமா? "என்
கண்ணு! உன்பேரு என்ன?" என்று கிழவிகெஞ்சின
"மூர்த்தி" என்று கனீரென்று உச்சரித்தது குழ
'உங்க அப்பாபேரு?' என்றாள் கிழவி. 'எங்கப்பா பே
குமரேஸ்!' உன்பேரு என்ன?' என்று குழந்தை கேட்
வுடன்—கிழவிக்கு ஆனந்தம் தாங்கவில்லை. குமரேசு
சந்திராவும் ஒருவரையொருவர் பார்த்து சிரித்
கொண்டார்கள். அப்போது எதிர்ப்பலகையிலிருந்த
ஒரு சிரிப்பு வெடித்தது. அதை சந்திரா கவனித்தா
சிரித்தவனும் சிரிப்பினூடே, சந்திராவைத்தான் உ
றுபபார்த்தான்.

அவனைப்பார்த்த சந்திரா திடுக்கிட்டு அப்படி
ஸ்தம்பித்துவிட்டாள் ஆனாலும்திடப்படுத்திக்கொண்
குழந்தையின் விளையாட்டைக் கவனித்தாள். ஆனா
அவள் நீலக்குறுவிழிகள்மட்டும் எதிர்ப்பக்கத்திலுள்
அந்த வாலிபனையே அடிக்கடி விழுங்கிக்கொண்டி
தன. அந்தவாலிபன் நல்ல அழகன். விசாலமானக் க
கள், அரும்புமீசைகள். அழகை அதிகப்படுத்த ப
ளபளப்பான பட்டுச்சட்டை. அவன் பெரியகண்கள் ச
ராவைப்பார்க்கும்போதெல்லாம் போதையேறிக்கா
பட்டன. சந்திராவும் தனக்குப் பக்கத்திலே
கணவன் இருப்பதையும் மறந்தவள்போல, அவ
அடிக்கடி பார்க்கும் வேலையில் ஈடுபட்டிருந்த
இதைக் குமரேசும் ஜாடையாகப் புரிந்து கொண்ட
வண்டி ஓடிக்கொண்டிருந்தது. சந்திரா தன் கணவனே
ஏதாவது பேசுவதும், குழந்தைக்கு விளையாட்டுக்கா
டுவதும், அதே நேரத்தில் எதிரேயுள்ளவனைக் கா
துமாயிருந்தாள். குமரேசுக்கு ஏதாவது சொல்லி
வேண்டுமென்று மனங்குமுறியது தன் மனைவி—த
அருகில் உட்கார்ந்து கொண்டே இன்னொருவ

ழகை ரசிப்பதென்றால்...............இதை அவனால் னைக்கவே முடியவில்லை.

அழகுக்காகத்தான் சந்திராவை அவன் மணம் ந்தான். அவள் வீட்டுக்கு வந்த பிறகு அறிவும் ரம்பியவள் என்பது கண்டு மகிழ்ச்சி கொண்டான். துகலமாக ஓடிக்கொண்டிருந்த அவர்களின் குடும்ப ாழ்க்கைக்கு அந்த ரயில் பிரயாணம் முட்டுக்கட்டை கத்தான் வாய்த்தது. இவன் நெஞ்சிலே இந்தபோ ட்டம்—ஆனால் சந்திராவோ எதிர் பலகையில்வீசும் ண்களை நிறுத்தியபாடில்லை. குமரேஸ் கொந்தளித் ன். முழுதும் கவனித்து ஒரு முடிவு கட்டி விட வண்டு மென்ற தீர்மானம்—அவனை அமைதிப்படுத்தி து.

குழந்தை நன்றாகத் தூங்கி விட்டது. வண்டியும் முப்புரத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. அந்தப் பட்டியில் இருந்தவர்கள் தூக்க மயக்கத்தில் தள்ளா க் கொண்டிருந்தார்கள்.

மூர்த்திக்கு ரயிலில் கிடைத்த புதுப் பாட்டியின் யிலிருந்து 'புஸ் புஸ்' என்று மூச்சுவந்து கொண் ருந்தது. சந்திரா, குழந்தையைக் கீழே போட்டுத் ங்கவைப்பதற்காக முயன்றாள். குமரேஸின் தோளி ருந்த துண்டை எடுத்து பலகைக்கு கீழே விரித்து, னும் கீழேயே படுத்துக்கொண்டாள். குழந்தை யும் பக்கத்தில் படுக்கவைத்துக் கொண்டாள். வள் படுக்கும்போதே—குமரேசைப் பார்த்து வழக்க ன புன்சிரிப்பைக் கொட்டிவிட்டு சாய்ந்தாள். ஆனால் மரேஸ் பதிலுக்கு சிரிக்கவில்லை. அவன் நெஞ்சு முறுவது அவளுக்கு எப்படித் தெரியும். எதிரே ருந்தவனுக்கு இப்போது தலையைக் குனியவேண்டிய லை ஏற்பட்டது. கண்களை மூடிக்கொண்டு தூங்க யலும் சந்திராவின் முகத்தில் அவன் எந்தத் தனி ழகைக் கண்டானோ; தெரியவில்லை. ஓரே ரசனை ன்!........அவனுக்கு இருப்பு கொடுக்கவில்லை. றி காய்ந்து வாடுபவனுக்கு எதிரே வட்டில் றைய பொங்கலை வைத்தால்? அந்த நிலைபெற்றான். வன் உணர்வு, ஓர்நிலையில் இல்லையென்பது அவன் சைவுகளிலேயே பளிச் பளிச்சென மின்னிக் காண்டிருந்தது. சந்திராவின் பனிப்பார்வை வேறு வனைப்பம்பரமாக ஆட்டிவைத்திருந்தது. அவனுக்கு ன்று ஒரு நல்லவாய்ப்புத்தான். எத்தனையோபெட்டி ளைத்துருவிபார்த்து இதுபோன்ற ஒருநல்ல இடம் டைக்காமல் கடைசியில் — நட்சத்திரத்துக்கு குறி வத்தபோது சந்திரனே விழுந்துவிட்டதுபோல — டைத்த இடமல்லவா இந்த இடம்? தூங்கும் சந்தி வை இவன், ரசித்தான்—ரசித்தான் அப்படி ரசித் ன். இந்த ரசமான கட்டத்தில்தான், குமரேஸ் க்கால்கண்ணை மூடிக்கொண்டு நடப்பவைகளை எதிர் ர்த்துக் கொண்டிருந்தான். சந்திரா, எப்படியும் யும் களவுமாகப் பிடிபட்டுவிடுவாள் என்று துடித் க்கொண்டிருந்தான். எதிரே இருந்தவன் குமரேசை டிக்கடி பார்ப்பதும் தன் கால்களால் அவள் கையை துவாகத் தீண்டுவதும் மீண்டும் சுற்று முற்றும் மாயிருப்பதும் வேலையாயிருந்தான்.

வண்டி நெல்லிக் குப்பத்தைத் தாண்டி விட்டது. திரா அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். அவள் ற்காம் குழந்தை மூர்த்தியை அணைத்தபடியிருந் தது. அந்த வாலிபன் ஏதோஒரு புதுதுணிவுடன் பெரு மூச்சு விட்டான். குமரேசையும் கூர்ந்து நோக்கிக் கொண்டான். குமரேஸ் தன் துப்பறியும் வேலைக்குத் தயாராக — தூக்கத்தால் துவண்டிருப்பவனைப்போல இருந்தான். வாலிபன் கைகள் சந்திராவின் கன்னத்தை வருடின. சந்திரா விழித்துக்கொண்டாள். வாலிபன், நடுங்கியபடி கைகளை எடுத்துக்கொண்டான். சந்திரா விழித்த வேகத்தில் குழந்தையும் சிணுங்கியது. சந்திரா மேலே நிமிர்ந்து தன் கணவனைப் பார்த்தாள், அவன் தூங்கிவழிந்து கொண்டிருந்தான். அவளை ஒரு முடிவுகட்டுவதற்காக இமைகளின் இடுக்கில் ஒளிந்து கொண்டிருந்த அந்த பயங்கர விழிகளை அவள் பார்க்க வில்லை. கணவனைப்பார்த்த கண்களோடு அந்த வாலி பனையும் பார்த்தாள். அவன் உமிழ்நீர் விழுங்கினான். சிணுங்கிடும் குழந்தைக்கு ஒருமுத்தம் கொடுத்து விட்டு அதைத் தட்டிக்கொடுத்தபடி தூங்கிவிட்டாள்.

எத்தனையோ முறை, அழுதிடும் குழந்தைக்கு அவள் முத்தமிட்டுப் பிறகு தூங்கவைப்பதை குமரேஸ் பார்த்திருந்தாலுங்கூட, இந்த முத்தம் அவனை நெருப்பில் தள்ளி எண்ணெயை ஊற்றுவதாயிருந்தது.

சிறிது நேரம் கழிந்தது. வாலிபனின் கரங்கள் மீண்டும் சந்திராவின் கன்னத்தைத் தொட்டன. சந்திரா விழித்தாள். விழித்தவள் குழந்தையைத் தட்டியபடி மறுபடியும் கண்களை மூடிக்கொண்டாள். குமரேசால் அங்கு உட்காரமுடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது. எரிமலையாகி விட்டான். பூகம்பமானது அவன் உள்ளம். பயங்கரமான ஒரு முடிவுடன் எழுந்தான். குழந்தையைக்கையில் தூக்கினான். குழந்தை அழுதது. சந்திரா விழித்துப்பார்த்தது தன்கணவன் கையில் குழந்தையைக்கண்டு—தூக்கத்தும் மயங்கினாள். குழந்தையுடன் குமரேஸ் ஐந்தாறு பலகைகளைத் தாண்டி அப்பாற்போனான். வாலிபனுக்கு மகிழ்ச்சி பெருக்கெடுத்தது.

ரயில்வண்டி புயல் வேகத்தில் பெருமூச்சு விட்டு ஓடிக்கொண்டிருந்தது. குமரேஸ் சுற்று முற்றும் பார்த்தான். கையிலிருந்த குழந்தையை அந்த அகோரமான இருளில் ஜன்னல்வழியே வீசியெறிந்தான். அந்தப் பசலை எந்தக்காட்டில் விழுந்ததோ? எந்தப் பாறையில் விழுந்து சுக்குநூறானதோ? குமரேசின் மனம் சிறிது சாந்திபெற்றது. "ஒரு விபசாரியின் தொடர்பு இன்றோடு ஒழிந்தது. தன்பெயரைச் சொல்லி வருங்காலத்தை வீணாக்காமலிருக்க, குழந்தையும் ஒழிந்தது. இனிமேல தான் தனி ஆள். அந்தத் தாசி அவளோடு போகட்டும்."

என்று அவன் மனம் பேசிற்று. வண்டி நிற்கும் ஸ்டேஷனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

அதற்குள் அவன்பார்வை, முன் உட்கார்ந்திருந்த இடத்தில் பாய்ந்தது வாலிபனின் கரங்கள் இப்போது நடுக்கமின்றி, சந்திராவின் கன்னத்திடம் சென்றன. அடக்கமுடியாத ஆவலுடன் அவள் கன்னக் கதுப்பை விரல்களால் அழுத்தினான். சந்திரா திடுக்கிட்டு விழித்தாள். அவன் இப்போது சிரித்தான். "சீ!" என்ற பெரிய சப்தத்துடன் சந்திரா துள்ளிக் கிளம்பினாள். வாலிபனின் கன்னத்தில் அவள் கரங்கள் மாறிமாறி விளையாடின. எல்லோரும் விழித்துக் கொண்டார்கள். குமரேசும் அருகே வந்துவிட்டான்.

அவனுக்கு மயக்கம் வருவது போலிருந்தது. "அத்தான்!" என்று அவனைக் கட்டிக் கொண்டாள் சந்திரா.

"ஆரம்பத்திலிருந்து நீபார்த்த பார்வை........." என்னமோ ஆத்திரமாகச் சொல்லப்போனான் குமரேஸ்.

"என் சிறுவயதில் இறந்துபோன அண்ணன் மாதிரி இருந்தது......பார்த்தேன்.........இந்தப்பாவி........." என்று விம்மி விம்மியழுதாள். பெட்டியிலிருந்தவர்கள் அவனைத் திட்டித் தீர்த்தார்கள். கடலூர் ஸ்டேஷன் வந்தது. அந்த மைனர் இறங்கிப் போய்விட்டான். "இதற்காகவே இந்தப் பயல்கள் ரயிலில் ஏறுவது" என்று ஒரு குரல் கிளம்பிற்று. திடீரென ஏற்பட்ட அதிர்ச்சியில் குழந்தையைக்கூட மறந்திருந்த சந்திரா, "குழந்தை எங்கே யத்தான்?" என்று ஆவலோடு கேட்டாள்.

"பக்கத்தில்தான் இருக்கிறது. இங்கேயே இறங்கு" என்றான் குமரேஸ். அவன் முகம்கருத்து விட்டது.

"ஏன்?" என்றாள் அவள்.

"இறங்கேன்—சொல்கிறேன்" என்று மூட்டை முடிச்சுகளைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டான் குமரேஸ். அவளும் இறங்கினாள். இறங்கியவுடன் கேட்டாள். "எங்கே குழந்தை?" என்று!

கண்ணீர் வழிந்தோட அவன் சொன்னபதில் "இரண்டுமைல்களுக்கப்பால்இருக்கிறது"என்பதுதான்

ஏ! அவசரக்கார குமரேசா!

சபலக்கார முட்டாளே!

என்ற ஒலி, நாலா புறமிருந்தும் அவன் காதில் சாட்டை ஒலியாய் ஒலித்தது.

'இந்தோ சிலோன் எக்ஸ்பிரஸ்' கடலூரிலிருந்து புறப்பட்டது.

✻

# காதல் ஏதடி, கண்ணே!

[ வே. கணபதி "சுதந்திரன்" ]

## காதலி:

என்னருமைக் காதலரே எழில் அரசே!
எத்தனைநாள் இப்படி நான் காத்திருப்பேன்?
சொன்னபடி நீர் வரும்நாள் கடந்தோராண்டு
தொலைந்த தின்னும் காண்கிலேனே-என்உயிரே

தண்ணிலவும் வெண்தணலாய் தகித்திடவென்
தளிருடலும் கருகிடுதித் தனிமையாலே
உண்மை மனம் ஒப்பவில்லை உறக்கமில்லை
உள்ள நிலை சொல்லுதற்கோ வார்த்தையில்லை

உன் நினைவால் என் இதயம் ஏங்குதன்பே!
ஒருமுறை வந்தென்னை யொருசொல் மனங்குளிர
'கண்ணே' என்றழைத்திடவும் மாட்டீரோ!
கருணை பெற அருகதை நான் அற்றவளோ!

என்ன குற்றம் நானிழைத்தேன்-யாருரைத்தார்?
இல்லையெனில் வேறொருத்தி தன் நினைவோ!
'பெண்மயிலே உன்னையன்றி கண்ணெடுத்தும்
பிறிதொருபெண் பார்ப்பதில்லை உறுதி' என்றீர்!

சந்திரனும் கண்டு வெட்கத் தொட்டிழுத்து
தந்திரமாய் முத்தமிட்டீர் சோலைதன்னில்!
சுந்தரரே இன்றெனையேன் தயங்க விட்டீர்!
சூதறியேன் துயர்பொறுக்கேன் நிலையறிவீர்!

வாக்குறுதி மீறுதற்கு நியாயமுண்டோ?
வகையறியேன் பேதையெனக்கார் துணை, நீர்
சீக்கிரமே வந்திடில் நான் வாழ்ந்திருப்பேன்!
க்ஷணங்கிடிலோ செத்திடுவேன் அறிவீர் ஈதே.

## காதலன்:

கன்னல் நிறை இன்னமுதே காதலியே!
கண்வியக்கும் கட்டழகுச் சித்திரமே!
என்னடி நான் செய்திடுவேன் பெண்மயிலே!
என் நிலையும் உன்னிலைதான் நீயறிவாய்!

"ஓராண்டில் வந்திடுவேன் என்றுரைத்த
உறுதி எங்கே? காரணமேன்? யார் நினைவோ!
மாறாகச் சென்றிடில் நான் செத்திடுவேன்
வருக" என சினந்தெனை நீ வாட்டுகின்றாய்!

வெந்த புண்ணில் செந்தணலைக் கொட்டும் இந்த
விந்தை மிகக்கொடியதடி மான் விழியே!
நிந்தனை நீ செய்வதென எண்ணிவிட்டால்
நிலையாது என்னுயிரும் நற்றவமே!

காலைமுதல் மாலைவரை யந்திரமாய்
கடும் உழைப்பால் கூலியெனும் காசுபெறும்
ஏழைகளுக் கேதடி இக்காதல் கண்ணே!
எழுத்துலகில் போரிடுதென் மூளை அந்தோ!

மூலதனக்காரர் நம்மை வாழ விடார்!
மூன்று முறை கேட்டுவிட்டேன் லீவுமில்லை!
"பாழும் வயி"றில்லை யெனில் வேலை யென்ன!
பறந்துனை நான் வந்தடைய மாட்டேனோ சொல்!

மானிடராய் பிறந்ததென்ன சாவதற்கா?
மாறும் நமதின்னலெல்லாம்; வாழ்ந்திடலாம்
தேன்மொழியே தேறிடுவாய் நத்தார் நாளில்
திரும்பிடுவேன் அத்தினத்தில் காத்திரடி!




**"பொதுஜன விரோதி"**

**என்ற தலைப்புடன் இப்சன் எனும் பேராசிரியர் தீட்டிய மூலத்தை அடிப்படையாகக் கொண்டு, பின்னப்பட்ட ஒரு அரசியல் கற்பனைக் கதை.**

"பொதுஜனம்! மக்களின் தீர்ப்பு!—அர்த்தமற்ற வார்த்தைகள். உன்போன்ற ஏடு புரட்டிகளின் கற்பனை ள். ஏமாளிகளின் நம்பிக்கை! பாமரரின் மனம், ஒரு ாலிப்பாண்டம்! யார் எதைப் போட்டாலும், ஏற்றுக் கொள்ளும்! அதிலும், உனக்கு வேடிக்கை, தெரியாது— அந்தப் பாண்டமும் ஓட்டை! போட்ட பண்டம் கொஞ்சம் கொஞ்சமாகக் கீழே சிதறியே போய்விடும். , ஏதோ புத்தகங்களிலே படித்துவிட்டுப் பேசுகிறாய், பொதுஜன வாக்கு — சத்திய தேவதையின் தீர்ப்பு என்றெல்லாம். மெழுகுப் பொம்மைக்காரர்கள், தங் ள் தேவைக்கு ஏற்றபடி, மெழுகைக்கொண்டு பலப் ல செய்கிறார்களே, பார்த்திருக்கிறாயல்லவா? யானை ம் செய்வார்கள் பூனையும் செய்வார்கள் — நிஜம் பாலவே இருக்கும்—மெழுகு கொண்டு! அதுபோல ாலக்குக்காரர்கள்', மக்கள் மனதைக்கொண்டு, பல ருவங்களைச் செய்கிறார்கள்—நீ, ஏதோ மக்கள் தீர்ப்பு கத்தான தீர்ப்பு என்று பாடம் படிக்கிறாய்"

"தவறு! பெருந்தவறு! அநீதி ங்கூட! பொதுமக்களை அவ்வளவு ச்சமாக எண்ணாதே. சகல சக்தி ம், கிளம்பும் ஊற்று, ஜனசக்தி! வர்கள், குடும்ப பாரத்தால் ளைந்து போகக்கூடும் — அதனால் வர்களுக்கு, முக்கியமான பிரச்னை ளைப் பற்றிச் சிந்தித்து முடிவு ட நேரம் இல்லை—அதனாலேயே, வர்கள் ஏதுமறியாதவர்கள் — தையும் சிந்தித்து முடிவுசெய்யும் ற்றலற்றவர்கள் என்று கூறுவது, வறு. ஜனநாயகக்கோட்பாட்டுக்கே ரோதம். மனித சக்தி மகத்தானது! மக்களின் ர்ப்பு முடிவானது-அதுவே சிலாக்கியமானதுங்கூட!"

*   *   *

"மக்கள், எத்தனை முறை, தாங்களே செய்த ர்ப்பைத் தாங்களே மாற்றிக் கொண்டனர் தெரியுமா? ூலியஸ்சீசர், மகாவீரன், ரோமாபுரிக்கு அவனே க்க காவலன், என்று உன் 'பொதுஜனம்'தான் தீர்ப் ளித்தது! அதே 'பொதுஜனம்' பிறகு, சீசர் சர்வாதி ாரி, முடிதரிக்க முயல்கிறான்—குடியரசைக் குலைக் கிறான், என்று கொக்கரித்தது. சீசர் கொல்லப்பட் டான். அழுகுரலிலே அறிவையும் கலந்தான் அன் டனி! உடனே உன் 'பொதுஜனம்', என்ன செய்தது? சீசரைக் கொல்லச் சதி செய்தவர்களின் இரத்தத்தைக் குடிக்காவிட்டால், ஆவேசம் அடங்காது என்று ஆர்ப் பரித்தது."

"தவறுகள் செய்வது, இயற்கை!—"

"எத்தனை தவறுகள்! எவ்வளவு முறை! சாக்ரடீ சைக் கொல்ல, உன் 'பொதுஜனம்' இணங்கிற்று— பிறகு, அவனை 'மகான்' ஆக்கி மகிழ்ந்தது. என்ன தான் சொல்லு, பொதுஜன அபிப்பிராயம் என்பது கானல்நீர்—அல்லது வானவில் — அல்லது நீர்மேற் குமிழி......"

"இல்லை—இல்லை — விஷயம் விளங்காதபோது' விஷமியின் வலையில் வீழும்போது—முழு உண்மை துலங்காதபோது, நீ, கூறுகிறபடி, பொதுமக்கள், தவறான தீர்ப்பளித்திருக்கிறார்கள். ஆனால், உண்மையை அவர்கள் உண ரும்படிச் செய்தால், அவர்களின் உள்ளம், கானல்நீரை அல்ல, எப் படிப்பட்ட அநீதியையும் அழிக்கும் பெரும்புயலைக் கிளப்பிவிடும். மக்களின் மனவலிமை மகத்தானது —அது மன்னர்களின்படைவலிவை முறியடிக்கக் கூடியது."

"சரி, சரி, உன்னோடு பேசுவ தைவிட, ஏதாவது வியாபாரகாரியத் தைக் கவனிக்கலாம். நீ போய்வா! பொதுஜனத் தீர்ப்பு, புனிதமானது! மக்களின் தீர்ப்பு மகத்தானது, மகேசன் தீர்ப்புக்குச் சமம்!"

"கேலி பேசுவது சுலபம்......அதிலும் பெரி யவர்கள் பேசுவதுமிகவும் சுலபம்......"

"வாழ்க! வாழ்க! என்றுதான், பொதுஜனம் முழக்கமிடுகிறது...உன்னைப் புகழ்கிறது......வீரன்... உதாரன் என்று ஏதேதோ பட்டம் கொடுத்து உன் னைப் பாராட்டுகிறார்கள்."

"ஆமாம்! நான் அவர்களுக்காக உழைக்கிறேன்—

அவர்கள் பொருட்டு பாடுபடுகிறேன், என்பதற்காக—பாராட்டுகிறார்கள். மாளிகைகளிலேதான் நன்றி கெட்டவர்கள், நற்குணத்தை மதிக்காதவர்கள் இருக்கிறார்கள்! மக்கள் அப்படியல்ல! யார், தங்களின் நலனுக்காகப் பாடுபடுகிறவர்கள் என்பதை அவர்கள் உணருகிறார்கள்—உணர்ந்ததும் அப்படிப்பட்ட உபகாரிகளை..."

"பொதுஜனத் தலைவர் என்று கூறிப் பூரிக்கிறார்கள்—பெருமைப்படுத்துகிறார்கள்."

"ஆமாம்—அதிலேயும் உங்களுக்குச் சந்தேகமா?"

"அதிலே சந்தேகம் என் பிறக்கப் போகிறது! நான்தான் கண்ணால் காண்கிறேனே—அவர்கள் உன்னைக் கண்டதும், கொள்ளும் மகிழ்ச்சியையும், காட்டும் மரியாதையையும்!"

"பிறகு, எதிலே சந்தேகம்? எதிலே அவநம்பிக்கை?"

"பச்சையாகவே சொல்லட்டுமா? மக்களின் மனம் ஒரு நிலையில் இருப்பதில்லை. ஆட்டுவிக்கிறபடி ஆடுவர்! இன்று உன்னைப் பொதுஜனத் தலைவன் என்று புகழும், இதே மக்கள் உன்னைப், பொதுஜன விரோதி என்று தூற்றவும் கூடும்."

"ஆமாம்—நான் தவறி நடந்தால்—துரோகம் செய்தால்—அவர்களின் நலனைக் கெடுத்தால்..."

"அல்ல! அவ்விதம் அவர்கள் எண்ணிக்கொண்டாலே போதும், ஆர அமர யோசிக்காமலே, ஆத்திரத்தைக் கொட்டுவர். எவனாவது ஒரு தந்திரக்காரன், உன் நடவடிக்கையைத் திரித்துக் கூறி, உன்னால் பொதுமக்களின் நலன் கெட்டுவிடும் என்று கூறிவிட்டால் கூடப்போதும், பொதுமக்கள் சீறுவர்—சபிப்பர். அவர்களின் எண்ணம், நிலைத்துமிராது — யோசிக்கும் திறமை பழுதுற்றுத் தான் இருக்கும்."

"அப்படி அவர்கள் மனதிலே, சந்தேகம் கிளம்பினால்; நாம், உண்மையை விளக்கி, சந்தேகத்தைப் போக்கிவிட முடியும்."

"அதுதான் முடியாது! உன்னைப் பற்றித் தப்பு அபிப்பிராயம் கொண்டுவிட்டால், நீ தரும் விளக்கம், விரோதத்தை வளர்க்கும், உன்னுடைய சமாதானம், சாகசம் என்று கருதப்படும். பைத்யக்காரா! உன்னைச் சமாதானம் கூற, விளக்கம் தரவே அவர்கள் அனுமதிக்கமாட்டார்களே! அவசரமான முடிவுக்கே வருவர்! அந்த முடிவை, மாற்றிக் கொள்ளவும் விரும்பமாட்டார்கள், சுலபத்தில்."

"இல்லை! உண்மையைக் கேட்க அவர்கள் எப்போதும் சித்தமாக இருப்பர்."

"உனக்கு அவர்களிடம் அபாரமான நம்பிக்கை இருக்கிறது — அனுபவம் போதாததால்......உன்னை நான் மிரட்டுவதாக எண்ணிக்கொள்ளாதே, எந்தப் பொதுஜனம் இன்று உன்னைப் பாராட்டுகிறதோ, அதே மக்கள், உன்னைப் போதுஜன விரோதி என்று தூற்றும்படி, செய்ய முடியும்......என்னால்...விஷப் பரீட்சை—என்றாலும், நீ விரும்பினால், செய்து காட்டுகிறேன்—நீயோ, என் தம்பி! உனக்குக் கெடுதி வரக்கூடாதே என்று கவலைப்படுகிறேன் — இல்லையென்றால்—பொது மக்களின் மனம் எப்படிப்பட்டது என்பதை விளக்கி காட்டிவிட முடியும்!"

"கட்டாயமாக அந்தப் பரீட்சை நடத்தியே ஆக வேண்டும். அண்ணா! தோல்வி உனக்குத்தான்."

* * *

மூத்தவன் சிரித்தான்! தம்பியின் முகத்திலேயோ, எள்ளும் கொள்ளும் பொறியும் போலிருந்தது. அண்ணன், பணக்காரன், ஆகவேதான், பொதுமக்களின் பண்பு பற்றிச் சந்தேகிக்கிறான். பொதுமக்களின் சக்தியிலும் குணத்திலும் சந்தேகம் பிறப்பது, ஓர்வகை நோய்—அது மாளிகை வாசிகளுக்கு எப்போதும் இருக்கும்—என்று தம்பி, தீர்மானித்தான்; தம்பி, ஒரு டாக்டர்.

சிறியநகரம் — அண்ணன், தம்பி, வேறுவேறு குடித்தனம் செய்துவந்தனர்—ஆனால் விரோதம் கிடையாது. என் அண்ணனுக்குப்பணம் என்றால் உயிர்—பாழாய்ப்போன பணத்திற்காக, அவர், எதைவேண்டுமானாலும் செய்வார் — என்று தம்பி, பிறரிடம் கூறுவதுண்டு—அண்ணனிடம், நேரிலேகூடச் சொல்வதுண்டு. நமது தம்பியின்போக்கு ஒருவிதமானது— பொதுஜன உபகாரியாக வேண்டுமென்பதற்காக டாக்டர் தொழிலைக்கூடக் கவனிக்காமல், ஊருக்கு உழைக்கிறேன்என்று பேசிக்கொண்டு, உருக்குலைந்துபோகிறான், என்று அண்ணன், பலரிடம் கூறுவதுண்டு — தம்பியிடமேகூடப் பேசுவதுண்டு. டாக்டருக்கு, பொதுமக்களிடம் அளவு கடந்த பிரியம், நம்பிக்கை, மதிப்பு. ஜனநாயகக் கோட்பாட்டிலே அசைக்கமுடியாதபற்று. காண்ட்ராக்ட் வேலை-வட்டித் தொழில-வியாபாரம்—இவை அண்ணனுக்கு. அவனுக்கோ, பொதுமக்களின் மனப்போக்கிலே எப்போதும், அவநம்பிக்கை, அவர்களுடைய தீர்ப்பிலே ஒருவகை அலட்சியம். டாக்டர் பொதுமக்களை ஒருசக்தி என்று எண்ணினார்! காண்ட்ராக்டர், "சக்தி தான், ஆனால், யார் கையிலேயும் சுலபமாகச் சிக்கிக் கொள்ளும் சக்தி அது என்றார். இருவருக்கும் அடிக்கடி இதுபற்றி விவாதம் நடைபெறும். அவ்விதமான உரையாடலிலே ஒன்றுதான், துவக்கத்திலே காணப்படுவது.

X X X

அவன் இலட்சியவாதி! ஆனால் அவனுக்குக் குடும்பம் இருக்கிறதே! டாக்டர் தொழிலைக் கவனித்தால் குடும்பம் நடக்கும்—ஆனால், எங்கே கவனிக்கிறான்!—இது அண்ணன் கூறும் குறை.

பணத்தைக் குவிக்கத்தானே, அவருக்கு நேரம் சரியாக இருக்கிறது — பொதுமக்களின் நலனுக்கு உழைக்க, அவருக்கு, நேரம் ஏது? நினைப்பே கிடையாதே!—இது தம்பி கூறுவது.

அண்ணன் செல்லும்போது, காணும் மக்கள் அருவருப்பர்—சிலர் அலட்சியமாகக்கூட இருப்பர்—வேறு சிலர், பணிவர்—பாவனைக்கு!

தம்பி, வீதி வழி சென்றாலோ, அனைவரும் வரவேற்பர்—மகிழ்வர் — புகழ்வர் — மதிப்புடன் நடத்திக் கொள்வார்கள்.

அண்ணன், உள்ளூர் நகர சபையிலே ஒரு அங்கத் னராகத் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

தம்பி, அந்த நகரசபையினரால், வைத்தியராக மிக்கப்பட்டான்.

கவுன்சிலரானதால் காண்ட்ராக்டருக்குத் தொழி ம் வியாபாரமும் வளர்ந்தது — தன்னை பொத்த ல்லவான்களிடையே மதிப்பு வளர்ந்தது.

முனிசிபல் டாக்டரானதால், தம்பிக்கு 'வருமா ' அதிகமாக வளரவில்லை—வேலை வளர்ந்தது— னிசிபல் நிர்வாகத்தினருக்கு, புதிய புதிய திட்டங்கள் சுகாதார சம்பந்தமான யோசனைகள் கூறிவந்தான்— தற்காகச் சிந்தனையைச் செலவிட்டான்-பல ஆராய்ச் ள் நடத்திவந்தான்.

அவ்விதமான திட்டங்களிலே கடலோரத்திலே, ிக்கும் இடம் அமைப்பது என்பதொன்று. ழுது போக்குக்காக, பலர், பல இடங்களுக்குப் கிறார்களல்லவா, ஆண்டிற்கோர் முறை—மலைச் லுக்கோ—மலர் வனத்துக்கோ—பாரிஸ் போன்ற ீக நகருக்கோ—அதுபோல, இந்த குளிக்குமிடம் வர்—பல நாட்கள் தங்கி இருப்பர் — அதனால் ர்களுக்கும் சுகாதாரம் வளரும்—அவர்கள் வந்து துவதால், நகருக்கும் பொருளும் புகழும் வளரும் து டாக்டரின் எண்ணம். இந்தத் திட்டத்தை சிரமப்பட்டுத் தயாரித்து, நகரசபையினருக்குத் அவர்களும் அதை ஏற்றுக் கொண்டனர்—அதற் வேலையும் துவக்கப்பட்டது.

ஏற்கனவே பொதுமக்களின் அன்பைப் பெற் ந்த டாக்டருக்கு, இந்தத் திட்டம் மேலும் ஆதர திரட்டிற்று. அவருடைய அறிவும், பொதுமக் லனில் அவருக்குள்ள அக்கரையும் வெகுவாகப் ட்டப்பட்டது.

உள்ளூரில் ஒரு பத்திரிகை—அதிலே டாக்டரைப் ந்தும், அவருடைய புதிய திட்டத்தை வரவேற் ஒரு அழகிய தலையங்கமும் பிரசுரமாயிற்று.

தம்பி, அடிக்கடி பேசும், 'பொதுஜன சேவைகளில்' வொன்று என்றுதான் அண்ணன் முதலில் எண் ள்—அலட்சியப் படுத்தினான். தம்பியோ விட —அண்ணனிடம் மட்டுமல்ல, ஊரிலே பலரிடம், திட்டத்தால் ஏற்படக் கூடிய நன்மைகளைப்பற்றி கிக் கொண்டிருந்தான்.

தம்பியின் 'பொதுஜன சேவை'யை, அண்ணன் சியமாகக் கருதுகிறான் என்பதறியாத சிலர், அண் டம், புதுத் திட்டத்தைப் புகழ்ந்து பேசினர்— மகிழ்வார் என்று எண்ணிக்கொண்டு. அண்ணன் கள், தன்னை மகிழ்விக்கத்தான் அவ்விதம் புகழ் ர் என்பதைப் புரிந்து கொள்ளாமல், வழக்கப் பொது ஜனம்', மனதைப் பறிகொடுத்துவிட்டது எண்ணிக்கொண்டு, புதியதிட்டத்தைப்பழித்துப் லோ, அலட்சியப்படுத்தினாலோ, அதிலே அக் ாட்டாவிட்டாலோ, தன் மீது கோபிப்பார்கள் எண்ணிக்கொண்டு, நல்ல திட்டந்தான் என்று னைவத்தான். ஆக, ஊரிலே மெள்ள மெள்ள திட்டத்துக்கு ஆதரவு திரண்டது.

புதியதிட்டத்தில், அண்ணனுக்கு உண்மையாகவே ஆசை ஏற்பட்டது—வேறோர் காரணத்தால்.

குளிக்குமிடம் அமைக்க, தம்பி குறிப்பிட்ட இடத் தைக் கவனித்தபோது, அதை அடுத்து, ஏராளமான புறம் போக்கு நிலம் இருந்திடக் கண்டான். புதிய யோசனை உண்டாயிற்று.

குளிக்குமிடம் அமைக்கப்பட்ட பிறகு, அந்த இடத்துக்கு உள்ளூர் மக்கள் வரத்தொடங்குவர், மதிப்புஉயரும், அப்போது, அதை அடுத்துள்ள புறம் போக்கு நிலத்துக்கு, 'விலை' அதிகப்படும்—கடைகள் அமைக்க விரும்புவோர், புதிய வீடுகள் கட்ட விரும்பு வோர், காட்சிச் சாலைகளை அமைக்க வருவோர், ஆகி யோர், நல்ல வாடகை தருவர்; நல்ல விலைகொடுத்தும் வாங்குவர், போடும் பணத்தைப் போல, பத்து, இரு பது, மடங்கு அதிகமான பணம் கிடைக்கும், என்ற யோசனை ஏற்பட்டது, இலாப வேட்டைத் தொழிலில் தேர்ச்சி பெற்ற அண்ணனுக்கு. உடனே மோப்பம் பிடித்த புலியானான். புதிய திட்டத்தைப் பிரமாதமா னது என்று புகழ்ந்தான்—தம்பியைப் பாராட்டினான்— முனிசிபல் சபைக்கு, புதிய திட்டத்தைச் சிபார்சு செய்தான்—புதிய திட்டத்தை ஏற்றுக்கொள்ளச் செய்தான்.

டாக்டருக்குப் பெருமகிழ்ச்சி. பொதுஜன நன் மைக்கும், ஊரின் கீர்த்தி பரவுவதற்கும் உகந்த, தன் புதிய திட்டத்தை அண்ணன் ஏற்றுக்கொண்டது கண்டு, களித்தான்—பொது ஜனங்களிடம் அபிமானம் அற்றிருந்த தன் அண்ணனுக்கு, இந்த அளவுக்கேனும் பொது மக்களிடம் அக்கரை உண்டாயிற்றே என்று எண்ணி உள்ளம் பூரித்தான். அவன் அறியான், புதிய திட்டத்தை முனிசிபல் சபை, அங்கீகரித்துக்கொள்வ தற்கு முன்னம், 'புறம்போக்கு' நிலத்தை, அண்ணன், இலாப நோக்கத்துடன் மலிவான விலைக்கு வாங்கிக் கொண்டுவிட்டான், என்பதை. அண்ணனுக்கும், பொது மக்களின் நன்மையிலே அக்கரை உண்டாயிற்று என்றே அவன் எண்ணிக்கொண்டான். பாவம்! டாக்டருக்கு, மக்களுக்கு ஏதெது நல்லது என்பதைக் கண்டறிய பல ஏடுகளைப் படிக்கவும், சிந்திக்கவும், திட்டங்கள் தீட்ட வும், நேரம் அதிகம் செலவானதால், தன் அண்ணன் போன்றவர்களின் உள்ளத்தின் தன்மை எப்படிப்பட் டது என்று கண்டறிய, நேரம் இல்லை.

உள்ளூர் பத்திரிகையின் புகழுரை, நகர சபை யின் அங்கீகாரம், அண்ணனின் ஆதரவு, இவ்வளவும், புதிய திட்டத்துக்குக் கிடைத்த சந்தோஷத்தால், மெய்மறந்து இருந்தான் டாக்டர். அண்ணன் புதிய திட்டத்தினால், தனக்கு மொத்தத்திலே, எவ்வளவு இலாபம் கிடைக்கக்கூடும் என்பதைக் கணக்கிட்டுக் கொண்டிருந்தான்.

வீடுகளிலே குடியிருப்போர் சங்கம் ஒன்று அவ் வூரில். அதற்கோர் தலைவன். தீப்பொறி பறக்கப் பேசுப வன்—ஏழைகளின் சார்பில். வரி செலுத்துவோர், ஏழைகள், ஆகவே அவர்களின் நன்மையைக் கவனிப்ப தையே நகரசபை குறிக்கோளாகக் கொள்ளவேண்டும், என்பது, அவன் முழக்கம். தவறானதல்ல. அவனுக்கும் புதிய திட்டத்திலே, அக்கரை ஏற்பட்டது—ஆதரித் தான். குளிக்குமிடம் அமைக்கப்பட்டு, அது செல்வாக் குப் பெற்று, வெளியூர் மக்கள் அதிகமாக அங்கு வந்து

போகத் தொடங்கினால், நகர சபைக்குப் பல வழிகளி லும் வருமானம் கிடைக்கும்—நகர சபையின் வருமானம் அதிகரித்தால், நகர சபை, உள்ளூர் பொதுமக்களிடம் வசூலிக்கும் வரியைக் கூடக் குறைக்கும். இதனால் ஏழைகளுக்கு நன்மை உண்டாகும் என்று கூறினான்—ஏழை பங்காளன் என்ற பட்டத்துக் குரியவனாவதற் குத் தன்னைத் தயாரித்துக்கொண்ட, குடியிருப்போர் சங்கத் தலைவன். புதிய திட்டம், ஏழைகளுக்கு ஒரு வரப்பிரசாதம், என்று உண்மையிலேயே எண்ணினான்–புதிய திட்டத்தை ஆதரித்தான். டாக்டரின் களிப்பு பூர்த்தியாயிற்று.

குளிக்குமிடம் கட்டுவதற்கு, பெருந்தொகை யொன்று, முனிசிபல சபையினர் குறித்தனர். பலருக் குப் பல வேலைகள், கண்டிராக்டுக்குத் தரப்பட்டன. மரச்சாமான்கள் சப்ளை செய்ய, மார்க்க சகாயம். சுண் ணாம்புக்கும் செங்கல்லுக்கும் சேஷாசலம்—பிளான்படி, கட்டடத்தை அமைக்க, கங்காதரம்—இப்படிப் பலருக் குக் கிடைத்தது. இந்தக் கண்ட்ராக்டுகளிலே, சிலவற் றிலே, அண்ணனுக்குத் தொடர்பு உண்டு—வெளியே தெரியாது; சிலவற்றிலே, பணம் கடன் கொடுப்பதன் மூலம் தொடர்பு ஏற்பட்டது. மொத்தத்திலே, புதிய திட்டத்திற்காகச் செலவிடப்படும் பெரும் பணத்திலே, குறிப்பிடக்கூடிய தொகை, அவருக்கு வந்துசேரும்படி, தந்திரமாக ஏற்பாடு செய்துகொண்டார். அவர் மட்டு மல்ல; அவர் போன்ற, பல பணந்தேடிகளுந்தான்!

டாக்டருக்கு, இவை ஒன்றும் தெரியாது. ஒரே மகிழ்ச்சி மயம். மேலும் மேலும் ஆராய்ச்சிகள், நடத்திய வண்ணம் இருந்தார்—புதிய திட்டத்துக்கு பலம் தரத் தக்கவகையான ஆராய்ச்சிகள்.

உள்ளூர் பத்திரிகையின் உரிமையாளர், ஒரு மாஜி தீவிரவாதி -புரட்சிக்காரராகவும் இருந்தவர். அடக்கு முறைகளை எதிர்த்தவர் — ஆதிக்கக்காரர்களின் கொட் டத்தை ஒழிக்கத் தன்னைத்தானே அர்ப்பணித்தவராக இருந்தவர்–பிறகோ–தீவிரவாதக் கோலத்தைக் கலைத்து விட்டு, பத்திரிகை துவக்கினார்—தன் பேனா புரட்சி எழுத்துக்களையே தீட்டும் என்று எண்ணி வேறோர் எழுத்தாளரை, ஆசிரியராக அமர்த்தினார்—நிர்வாகத் தையே, கண்ணுங் கருத்துமாகக் கவனித்துக்கொண் டார். நல்ல விளம்பரம்-நல்ல வருவாய்!

பத்திரிகைக்கு ஆசிரியராக அமர்ந்தவர், ஒரு பெரிய புரட்சி வீரரிடம் தான் தயாராவதாக எண்ணிக் கொண்டு மகிழ்ந்தார். தீவிரவாதியானார். பொதுஜன நன்மையை ஆதரிப்பதே என் குறிக்கோள் — அதற்கு எதிரிடையாக எதுவரினும், குறுக்கிடினும், அச்சம் தனை தாட்சண்யமின்றிக் கண்டிப்பேன், என்று கூறி னார். அவ்வப்போது மட்டும், பத்திரிகை உரிமையாளர், ஆசிரியருக்கு, வாழ்க்கைச் சிக்கல்களைப் பற்றி உபதே சம் செய்வார் — தீவிரமாகத்தான் எழுதவேண்டும், ஆனால் அதேபோது, வாழ்க்கையையும் கவனித்துக் கொள்ளவேண்டும் என்று குத்தலாகப் பேசுவார்—தீப் பொறி பறக்கத்தான் எழுதவேண்டும் ஆனால் அந்தப் பொறிகள் பத்திரிகையையே தீய்த்துவிடக் கூடாது. தம்பீ, பத்திரிகை என்னுடையது—எனக்குக் குடும்பம் உண்டு, அவர்களுக்கு உணவு, உன் உணர்ச்சிதரும் எழுத்துக்களல்ல! — என்று கிண்டலாகப் பேசுவார்.

சில சமயங்களில், உரிமையாளருக்கும் எழுத்தாள கும் கருத்து வேற்றுமை உண்டாகும்—வே உரிமையாளருக்கு, விசாரம், எழுத்தாளருக்

ஆனால், குளிக்குமிடம் அமைக்கும் திட் தைப் பற்றியோ இருவருக்கும் ஒரே கருத்து. ஆசி ருக்கு மகிழ்ச்சி. மெள்ள மெள்ள உரிமையாள தன் வழிக்குக் கொண்டுவந்து விட்டதாக எண்ணி —அவர் அறியார், உரிமையாளர், காண்ட்ராக் யோசனைப்படி, புறம்போக்கு நிலத்திலே ஒருபகுதி உரிமையாளர் ஆகிவிட்ட இரகசியம்!

பொதுவாகப் பார்க்கும்போது, அந்தச் சிற் முழுதும், சிறந்த திட்டம், சிலாக்கியமான திட் என்று புகழ்ந்தது, டாக்டரின் திட்டத்தை. பொது ஆதரவு இவ்வளவு தெளிவாகவும் உருவாகவும், தான அளவிலும், தனக்குக் கிடைத்ததை எ டாக்டர் களித்தார்—தமது திட்டத்தை மே மேலும் ஆராயத் தொடங்கினார். ஒரு சந் வந்துதித்தது.

கடலோரக் குளிக்குமிடத்திலே உள்ள தண் சிலாக்கியமானதுதானா, என்பதுபற்றி, தான் நட பார்த்த ஆராய்ச்சியுடன் திருப்தி அடையாமல், பி நகர ஆராய்ச்சியாளருக்கு, தண்ணீரை அனுப்பி தார். அவருடைய, ஆராய்ச்சி முடிவு கிடைத் தமது புதிய திட்டத்துக்குப் பரிபூரணச் சி உண்டு, என்பதை உலகே ஒப்புக்கொள்ளும் என் டாக்டரின் எண்ணம்.

நகர ஆராய்ச்சியாளரின், கடிதம், டாக்ட தூக்கிவாரிப்போட்டுவிட்டது.

"தாங்கள் பரிசோதனைக்கு அனுப்பிய நீரை, ஆராய்ச்சி செய்துபார்த்து, கீழ்க்காணும் முடி வந்திருக்கிறோம்.

1. தண்ணீர் அசுத்தமானது.
2. சுத்தப்படுத்த முடியாதபடியான அ மானது.
3. கிருமிகள் நிரம்பியது.
4. கிருமிகள், ஆரோக்யத்தைக் கெ கூடியன.
5. விஷஜுரம், போன்ற கொடிய நோ உற்பத்தி செய்யக்கூடியன, அந்தக்கிரு
6. இந்தத் தண்ணீரை உட்கொண்ட குளிக்க உபயோகித்தாலோ, மக்க கொடியநோய் உற்பத்தியாகும்.
7. இந்தத்தண்ணீர், உள்ள இடத்தைத் விடவேண்டும்.
8. பொதுஜனம், இதை, எந்தவகையிலு யோகிக்காதபடி பார்த்துக்கொ வேண்டும்."

இந்தக்கடிதத்தைக் கண்டார், டாக்டர்—க டிப்பாத்திரத்தின்மீது, கருங்கல் வீழ்ந்தது யிற்று!

விஷநோய்! கேடுதரும் கிருமிகள்!—ஆஹா களைக்கொண்ட தண்ணீரை, பொதுமக்களுக்

தேனே! பெரியகேடு செய்ய இருந்தேன்! என்ன
ம! என்ன அவசரம்! ஊருக்கு அழகு, அலங்கா
ருவாய்க்கு வழி, என்று எண்ணி, குளிக்குமிடம்
திட்டம் தீட்டினேன் — இப்போதல்லவா தெரி
, இது அழிவுக்கு வழி என்று! பொதுமக்கள் உயி
டிக்கும் கிருமிகளை, நான் என் அறியாமையாலும்
த்தாலும் மக்கள்மீது ஏவிவிட இருந்தேனே —
ரும் துரோகமல்லவா செய்ய இருந்தேன் — நல்ல
, இந்த ஆராய்ச்சியாளர், உண்மையை உரைத்தார்
மக்களைக் காப்பாற்றினர்-உலகுக்கே பெரிய நன்
ச் செய்தார்! பொதுமக்களுக்கு என் அவசர
ால், பெருந்தீங்கு இழைக்க இருந்தேன்—
குமிடம் கட்டும் திட்டம், கொலைகாரத் திட்டம்
மக்களின் உயிரைச் சூறையாடும் திட்டம்! பேய்த்
ம்! கிருமிகள் வளர்பபுத்திட்டம்! நோயூட்டும்
ம்! நீசத்தனமான திட்டம்!—என்றெல்லாம், டாக்
ண்ணினர். எவ்வளவு பெரியகேடுநேரிட இருந்தது
தை எண்ணிப்பார்க்கும்போதே அவருடையகுலை
ற்று. மனக்கண்முன்னே, குளிக்குமிடத்துக்கு
ம் பெண்ணும் குதூகலமாக வருவது—குளித்து
து-வீடுதிரும்பியதும் அவர்களுக்கு விஷஜுரம்
—வீட்டிலே குய்யோமுறையோ என்று கூவு
பலர் மாண்டுபோவது — போன்ற காட்சிகள்
ின, பதறினர். எடுத்தார் பேனவை, மள மள
எழுதலானர், புதியதிட்டம் தீதானது—கை
டவேண்டும், என்று—எழுத்துகள் வேக வேக
ருண்டோடிவந்தன — ஊர்மக்களின் உயிருக்கு
ந்த ஆபத்தை தடுக்கமுடிந்தது தக்கசமயத்திலே
ர்வத்துடன் எழுதினர், எழுதினர், விளக்க
தாரத்துடன். எழுதி முடிந்ததும், திருப்திஏற்
. பொதுஜனத்துக்குச் செய்யவேண்டிய மகத்
சவையைச் செய்தாகிவிட்டது — கடமையை
ற்றிவிட்டோம், என்று களிப்புண்டாயிற்று.
த்திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார், மூத்
முகத்தில் புன்னகையுடன். ஆர்வத்துடன்,
அண்ணு! நான் ஒருமுட்டாள்—அவசரப்புத்
! அனியாயம்செய்ய இருந்தேன்! பெருங்கேடு
இருந்தது என்னல்! பொதுமக்களுக்குப் பெரிய
இருந்தது என்பேதமையால் என்று கூவலா
ண்ணன், இதென்ன, புதிய உளறல்" என்று
கொண்டு, "தம்பீ! நிரம்பவேலைசெய்துகொண்
யோ?" என்று கேலியாகக்கேட்டார்—"ஆமாம்,
! நிரம்பவேலை! என்வாழ்நாளிலே, இதுவரை
படிப்பட்ட முக்கியமான வேலையில்ஈடுபட்டதே
ன்று கூறலாம்—அப்படிப்பட்ட அருமையான
என்று டாக்டர் மேலும் ஆர்வத்துடன்கூற,
, சாவதானமாக, "குளிக்குமிடம் அமைக்கும்
பந்தமாகத்தானே தம்பீ, வேலைசெய்துகொண்
?" என்று கேட்டார். "சந்தோஷம்! அந்தத்
பந்தமாக, எவ்வளவுவேலை செய்தாலும் தகும்.
ன திட்டம்" என்றார் மூத்தவர் — புதியதிட்
லம் தனக்குக்கிடைக்க இருக்கும்இலாபத்தை
கொண்டு. அவர் எந்தநோக்கத்தோடு, இதைப்
என்பதை, அறியாத டாக்டர், "முக்கியமான
என்று சாதாரணமாகப் பேசுகிறீர்களே
பொதுஜனத்தின் உயிரைப்பற்றிய திட்டமல்
" என்றார்—'ஆமாம்' என்று அசைபோட்

டார் மூத்தவர்—"பொதுஜனத்தின் சேவையைக் கருத்தில்கொண்டு தயாரித்த திட்டமல்லவா அது — அது பற்றி மேலும் பல ஆராய்ச்சிகளை நடத்தியபடிதானே இருந்தேன்" என்று துவக்கினர் டாக்டர். "நானும் ஒவ்வோர் இரவும் நடுநிசிவரையில் உன்அறையில் விளக்கெறியக்கண்டேன்" என்றார் மூத்தவர் — வீண்செலவு செய்கிறார், தம்பி, என்பதைக்குறிப்பாக உணர்த்தினர். "வீண்போகவில்லையே, அண்ணு! என்உழைப்பு வீண் போகவில்லை. விபரீதம் நேரிட இருந்தது. நான்மட்டும் சற்று அக்கரையற்று இருந்துவிட்டிருந்தால், பொது மக்கள் பெரியதோர் நாசத்துக்குள்ளாகியிருப்பார். சரியான சமயத்திலே கிடைத்தது ஆராயச்சியாளரின் ஆய்வுரை—தப்பினர் மக்கள்" என்று எழுச்சியுடன் பேசினன் தம்பி - அண்ணன் அதன்பொருள் விளங்காமல் திகைத்தான். "தம்பி! என்ன இப்படிப் பேசுகிருய்—புரியவில்லையே?" என்று அண்ணன் கேட்க, "ஆர்வத்தால் அடிப்படையை மறந்துவிட்டேன் அண்ணு! மன்னிக்கவேண்டும்" என்ற முன்னுரையுடன், நீர் நிலைய அமைப்புபற்றிய புதியமுடிவை—அதாவது அத்தகைய நிலையம்கூடாது என்பதை விவரமாக விளக்கினன்—தம்பி. அண்ணனுக்குக் கோபம், அருவருப்பு, "முட்டாள்! உன்திட்டங்கள் இப்படித்தான் இருக்கும்என்று நான் அடிக்கடி கூறிக்கொண்டுதானே இருந்தேன். இப்போதாவது புரிகிறதா! ஊர்மக்களுக்கு நன்மைசெய்யக் கிளம்பினய்—உனக்குத்தான் ஏதோ அந்த உரிமையும் திறமையும் இருப்பதாக எண்ணிக்கொண்டு, வேண்டாமடா, உன்வேலையைக்கவனி—தொழிலைக் கவனி—குடும்பத்தைக் கவனி, என்று ஆயிரம்தடவை கூறினேன்—கொட்டி அளந்தாய்—இப்போது?" என்று கோபமாகப் பேசினன் அண்ணன். "ஆர்வமிகுதியினல் நான் முழு ஆராய்ச்சி செய்யாமலிருந்துவிட்டேன் அண்ணு! ஆபத்துவர இருந்தது. ஆனல் இப்போது பயம் இல்லையே. நாம், அந்தப் பாதகத் திட்டத்தை நிறுத்திவிடலாம்." என்றான் தம்பி. "இவ்வளவு ஏற்பாடுகள் பூர்த்தியானபிறகா! கட்டடம் அமைக்கக் "காண்ட்ராக்டுகள்" ஏற்பாடாகிவிட்டன—முன்பணம் கொடுத்தாகிவிட்டது இவ்வளவு ஏற்பாடுகள்நடைபெற்றனபிறகு, திட்டத்தை விட்டுவிடுவது! தம்பி! உனக்கு ஏதாவது தெளிவு இருக்கிறதா! என்கோபத்தைக் கிளராதே. உன்பேச்சை நம்பிக்கொண்டு, நான் நகராட்சி மன்றத்திலே உன்திட்டத்துக்கு ஆதரவு திரட்டினேன்—எவ்வளவு கஷ்டம் — எவ்வளவு செலவு!" என்று அண்ணன் கூறி ஆயாசப்பட்டான். "தொந்திரவுதான் கொடுத்துவிட்டேன். கஷ்டம் அதிகம்தான் தங்களுக்குஎன்று ஆறுதல்மொழி கூறினன் தம்பி. "நஷ்டம்? அதைக்கவனிக்க மறுக்கிருயே, எடுதாங்கி! பணச்செலவு ஆகியிருக்கிறதே தெரியுமா? கவலைப்படவேண்டாமோ? செலவுசெய்ததொகை திரும்பக்கிடைக்கவா போகிறது" என்றுவெகுண்டுரைத்தான் அண்ணன். டாக்டர், எதற்குச் செலவு?" என்று கேட்டான், பீறிட்டுக்கொண்டுவந்தது ஆத்திரம் அண்ணனுக்கு. உன்பைத்தியக்காரத்திட்டத்தை, நகராட்சி மன்றம், ஏற்றுக்கொண்டதே, காரணம் என்ன? உன் திட்டத்திலே அறிவும் அருமையும் ததும்புகிறது என்ரு? மடையா! இருபதுஆயிரம் செலவு எனக்கு—ஆளுக்கு ஆயிரம் — அந்தப்பணத்தைப் பெற்றுக்கொண்டுதான், "நகரத்தந்தைகள்" உன் திட்டத்துக்கு ஆதரவு தந்தனர்— தெரியுமா! ஊரிலுள்ள பிர

முகர்களை, உன் திட்டத்துக்கு ஆதரவாளர்களாக்குவதற்கு நான் செலவிட்டது கொஞ்சமல்ல. உலக அனுபவமற்றவனே! உன் படம் போட்டு, திட்டத்தைப் பற்றிக் கொட்டை எழுத்துக்களிலே அலங்காரமாக அச்சிட்டு வழங்கினர்களே, அது, உன் திட்டத்தைப் பார்த்துப் பூரித்துப் போனவர்கள் செய்த 'பொதுஜன சேவை' என்றுதான், நீ எண்ணிக்கொண்டாய். நோட்டுகளை, எண்ணிக்கொடுத்தேன், அதற்கான செலவுக்கு! இவ்வளவுக்குப் பிறகு, நீ யோசனை கூறுகிருய், திட்டத்தைக் கைவிட்டு விடலாம் என்று! துளியாவது, பணத்தின் அருமை பெருமை தெரிந்தால் இப்படி நடந்து கொள்வாயா?" என்று கடிந்துரைத்தான் அண்ணன். தம்பி தத்தளித்தான்,—தன்னால் இவ்வளவு தொலலை அண்ணனுக்கு ஏற்பட்டுவிட்டதே என்பதை எண்ணி மட்டு மல்ல—பொதுமக்களுக்காகத் தயாரிக்கப்பட்ட திட்டத்துக்கு ஆதரவு தர, நகராட்சிமன்ற உறுப்பினர்கள் பணம் பெற்றுக்கொண்டார்களாமே, ஆளுக்கு ஆயிரம்—இப்படியா பொதுஜன சேவை இருக்கிறது!—என்பதை எண்ணி. இப்படிப்பட்டவர்களை ஏன் பொது மக்கள் தேர்ந்தெடுக்கிருர்கள்? எப்படி இவர்களின் கபடம் வெளியே தெரியாமலிருந்துவிடுகிறது?—என்றெல்லாம் எண்ணி ஆயாசமுற்ருன். அண்ணன் சிலவிநாடிகள் ஆழ்ந்த யோசனையிலிருந்துவிட்டு, ஒரு முடிவுக்கு வந்தவனுகி, தம்பியைப் பார்த்து, "சரி—இதுவரையிலதான், புத்தியில்லாமல் நடந்து வந்தாய்—இனியாவது ஒழுங்காக நட. உன் புதிய ஆராய்ச்சியை, மனதோடு வைத்துக் கொள்—வெளியே கொட்டி, ஊரைக் கலக்காதே." என்ருன். தம்பிக்குத் திகில் பிறந்தது. "திட்டப்படி காரியம் நடந்துவிடட்டும்" என்ருன் அண்ணன். தீ மிதித்தவன் போலானுன் தம்பி. "என்ன, என்ன! திட்டபபடி காரியம் நடப்பதா! என்ன அண்ணு! மக்களைச் சாகடிப்பதா! நாட்டைச் சுடுகாடு ஆக்குவதா! நாளு! என்ன துணிவு உனக்கு! எவ்வளவு கல்நெஞ்சம்!" என்று கூவினுன். "திட்டம் நிறைவேற்றப்பட்டாக வேண்டும்-இனி அதை நிறுத்த முடியாது—இலட்சக் கணக்கில் நஷ்டம் ஏற்படும்—இந்தத்திட்டத்தை நம்பித் தனவந்தர்கள் ஏராளமான 'முதல்' போட்டுவிட்டார்கள்-திட்டத்தை நிறுத்திவிட்டால் பெருநஷ்டம் ஏற்படும்—எனக்கே கூடப் பெரு நஷ்டம் உண்டாகும்"

"அதற்காக' மக்களைச் சாகடிக்கும் மாபாதகம் புரிவதோ"

"மாபாதகமோ—வெறும் பாதகமோ, எனக்குத் தெரியாது. நீ முதலிலே சொன்னபடி பல கட்டடம் கட்டியாகவேண்டும்"

"அண்ணு! நச்சுப்பொய்கையை நாம் வெட்டுவதா, நமது மக்களைச் சாகடிக்க!"

நம்பினவர்களின் பணம், பாழாவதா? நடுவிலே திட்டத்தைத் தகர்த்துவிட்டால், நஷ்டம்தானே ஏற்படும். உன்னைச் சும்மாவிடமாட்டார்கள்."

"பணம் செலவிட்டீர்கள், சரி—அதற்காக, மக்கள் பிணங்களாவதா? என் அவசரபுத்தியினுல், உங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. பண நஷ்டம். அதைத் தடுப்பதற்காக, மக்களை மடியச் செய்வதா. பொதுமக்களைப் பூச்சி புழுவென்று எண்ணிக்கொண்டீரோ! பேசாமல் எழுந்து போய்விடும் மரியாதையாக."

"மடத்தனத்தை விடு. திட்டத்தை முறைப்படி நிறைவேற்றிவிடுவோம். பிறகு, பொது மக்கள், சாகா படி தடுத்துக் கொள்ளலாம்."

"பிறகு தடுப்பதா? பிறகு? எப்படி?"

"குளிக்குமிடம் கட்டி முடித்துவிட்டு, திறப்பு விழா நடந்தேறிய பிறகு,........"

"மக்கள் நோயால் தாக்கப்பட்டு மடியும்போது..

"மடிவதற்கு முன்பு........நாமே பெரியதே வைத்யசாலை அமைத்து விடலாம்—நீ, சர்ஜன்—ஜெ ரல்—மாதம ஐயாயிரம் சம்பளம்!"


தம்பியால் இதைக் கேட்கச் சகிக்கவில்லை.

"போ, வெளியே—போ, வெளியே"—என் முழக்கமிட்டான்.

"போகிறேன்—ஆனுல் போவதற்குமுன், இதை கூறிவிடுகிறேன். மரியாதையாக, என் யோசனையின் நடந்துகொண்டால், தலை தப்பும்-பிடிவாதம் செ தாயோ, அழிவுதான் உனக்கு." என்று எச்சரித்தா அண்ணான். "அழிவு! யாராலு? உன்போன்ற பணந்தே களால்தானே! உன்போன்றாரின் பகை என்னை ஒன் செய்துவிடாது. நான் பொதுமக்களின் ஆதரவு பெற் வன்." என்ருன் தம்பி. "பித்தம் பிடித்தவனே! பொ மக்களேதான் உன்னை எதிர்க்கப்போகிருர்கள்-எதி கும்படி, என்னுல் ஏவிவிட முடியும். வேண்டாம், வி பரிட்சை. கடைசி எச்சரிக்கை. தம்பியாயிற்றே, என் பாசத்துக்காகக் கூறினேன்-என் புத்தியைக் கே பொதுஜன விரோதியாகாதே!!" என்ருன் அண்ண கோபத்தைப் பிய்த்துக்கொண்டு கிளம்பிற்று சிரிப் "பொதுஜன விரோதி! யார்? நானு! மக்கள் சாகட் பரவாயில்லை, பணம் வேண்டும் எனக்கு என்று பே நீயா, இதைக் கூறுகிருய்!! நான்பொதுஜன விரோதி மக்களின் நலனுக்கு எது தேவை, என்ன செய்ய வே டும், இந்தத்திட்டம் நல்லதா, இன்னோர் திட்ட தேவையா, என்று எண்ணியபடி, ஆராய்ச்சிகள் செ படி, அவர்களுக்காக உழைத்தபடி உள்ள, நா பொதுஜன விரோதி!! என்று ஆத்திரமும் அழுகுர கலந்த முறையில் பேசினுன். அண்ணன், பதறு துடிக்காமல், நிதானமாக, "தம்பீ! பொதுஜன விரோ யாகப் போகிருய் நீ. அதற்கான, 'தூபம்' போடுவ என்று தீர்மானித்துவிட்டேன். வீணுக நாசமாகா திட்டத்தைத் தகர்க்காதே-நீ, தகர்ந்து போவா உனக்கும் பொதுமக்களுக்கும் உள்ளதொடர்பு, நே தகர்ந்து போகும்-தானுக அல்ல-எங்கள் தாக்குதலா நான், அடிக்கடி கூறி வந்ததை மீண்டும் கவனபபடு கிறேன்-'பொதுஜனத்தை' ஆட்டி வைக்க முடியும் படிவேண்டுமானுலும்" என்ருன்.

"தலையாட்டிப் பொம்மைகளல்ல, பொதுமக் போய்க் கூறுவோம், வா,இருவரும்-மரணத்தை ஏவு நீயும், மக்களின் வாழ்வு வளமாக வேண்டும் எ எண்ணுகிற நானும்-இருவரும் சென்று பேசுவே பொதுமக்களிடம்-வா, தைரியமிருந்தால்-வா, வல்ல இருந்தால்! வந்து பேசு-பிறகு, பார், யாரைப் பெ மக்கள், பொதுஜன விரோதி என்று கூறுகிருர்கள்- டிக்கிருர்கள், என்பதை. வரத் தயாரா? நான், தி தால் வரக்கூடிய நாசத்தை எடுத்து விளக்கிப் பே றேன். நீ, அந்தத் திட்டத்தை நிறுத்திவிட்

# நாம் வணங்கும் தெய்வங்கள்



Cover Printed at The New Era Printers, 72, Armenian Street, Madras-1.

REGD. No. 4642.

# சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநா[illegible]

... 21, 22—1—50 ...

ஆகிய இருநாட்களிலும் சென்னை பிப்பிள்ஸ் பார்க் மிருகக் காட்சி சாலைக்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் அமைக்[illegible]

"அழகிரி பந்தலில்"

நடைபெறும்

---

தலைவர் :—

சேலம் ஏ. சித்தையன்

துவக்குபவர் :—

மதுரை எஸ். முத்து

வரவேற்புத் தலைவர் :—

டி. எம். பார்த்தசாரதி

---

## 21-1-50 இரவு

சி. என். ஏ. எழுதிய ஓரங்க நாடகங்கள்

நடைபெறும்

தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், க. அன்பழகன், பூ. கணேசன், இ. ரா. இளம்வழுதி, கே. ஏ. மதியழ[illegible], காஞ்சி மணிமொழியார், கண்ண[illegible], சி. வி. ராஜன், சி. கணேசன், முத்து.

ஆகியோர் நடிப்பார்கள்

---

## 22-1-50 இரவு

சந்திரமோகன்

நாடகம் நடைபெறும்

தோழர்கள் சி. என். ஏ. கே. ஆர். ராமசாமி [illegible]

ஆகியோர் நடிப்பார்கள்.

---

இரண்டுநாள் மாநாட்டிற்கும் சேர்ந்து

டிக்கட் விவரம் :—

| | | | |
|---|---|---|---|
| பிரதிநிதி | ரூ. 1 8 0 | வரவேற்பாளர் | ரூ. 2 0 0 |
| ஆதரவாளர் | ரூ. 5 0 0 | நன்கொடையாளர் | ரூ. 10 0 0 |

Edited, Printed & Published by C. N. Annadurai M.A. at "Dravidanadu" 95, Tirukkachinambi Street, Kancheepuram.